பெப்ரவரி - மார்ச் 2018

மாதாந்த குடும்ப சஞ்சிகை

# ஒளி அரசி

மங்கையரின் தோழி

ஒளி 04 இதழ் 03

பக்கங்கள் : 80 (64 + 8 + VIII)

ரூபா 75/=

அரசியலோ ஆபாசமோ கலக்காத அற்புத படைப்பு

மிளிரும் ஆளுமைகள்








## சுகமாய் சுமப்பவள்

- ★ எழுத்தெல்லாம் படைப்பல்ல
- ★ வேர்வைக்கே வேர்வைக்கும்
- ★ முடியாதது ஒன்றும் இல்லை
- ★ இதுவா பெண் உரிமை?

+ அறிவுக்கொத்து
+ ஆரோக்கிய கையேடு
+ தரம் 5 திருத்தற்சேவை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Public Library
Ja...



# துர்க்கா
## தளபாடங்கள்
## Thurka Funitures

தரமான மரத் தளபாடப் பொருள்களை
குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்

T.P: 0777114852 மில் வீதி, சண்டிலிப்பாய்.





# பக்கவிளைவு இன்றி சித்த வர்ம வைத்திய சிகிச்சை முறை



Dr. செ.பரமசிவம்பிள்ளை
D.A.M. (Cey.) J.P.

முழங்கால், முள்ளந்தண்டு, தோள்மூட்டு போன்ற
இடங்களில் ஏற்படும் குறைந்தகால நீண்டகால நோய்களுக்கும்
சிறுவர்களுக்கான கிரந்தி முட்டு, பெரியவர்களுக்கான தொய்வு,
வயிற்றுப் புண் போன்ற நோய்களுக்கும் பக்கவிளைவுகள் இன்றி
பாரம்பரிய முறைப்படி 47 வருட கால அனுபவத்துடன்
தனித்துவமான சிறந்த முறையில்
சித்த வர்ம சிகிச்சை பெற்றுக்கொள்ளலாம்.

பதிவு இலக்கம் : 5972 முறிவு, நெரிவு : 8985

**முன்பதிவுகளுக்கு இரவு 8.00-9.30 மணி 0778035330**

சந்திக்கும் நேரம் (காலை 6 - 10மணி வரை)
**சிவா சித்த வைத்தியசாலை**
அராலி வடக்கு, வட்டுக்கோட்டை

பிற்பகல் 1.00 - 5.30 மணி
**சிவா சித்த வைத்திய நிலையம்**
551, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

**தொடர்புகளுக்கு : 0778035330, 021 2051516**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகளிர் தின வாழ்த்து

# உள்ளே...




அன்பின் கனதிகள் 10






06 தனி மரம் ஒரு போதும் தோப்பாகாது





48 மெல்லிசையாய் என் வசமானாய்


15 ஓசோவின் வாசம்





கடிதம் 16





58 அண்ணன் தங்கை பாசத்தை உணர்த்தும் திரையிசைப் பாடல்கள்


இன்னும் பல சுவாரஷ்யமான அம்சங்களுடன்

## அன்புரிமையுடன் வாசகர்களுக்கு!

ஒரு சஞ்சிகையின் தொடர் பயணம் என்பது எத்தனை கடினமானது என்பது அறிவுபூர்வமாக சிந்திக்கும் அனைவரும் அறிந்த விடயமே. இருப்பினும் எமது ஒளிஅரசி சஞ்சிகையானது ஐந்து ஆண்டுகள் என்னும் தனது நீண்ட பயணப்பாதையில் பல இடர்களையும் இன்னல்களையும் சுமந்தபோதும் பல வரையறைகளுக்குட்பட்டு காலதாமதமாக என்றாலும் தவறாது மாதந்தோறும் வெளிவந்துகொண்டிருந்தது என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்றே. ஆனால் தற்போது ஒளிஅரசியின் விநியோக விஸ்தரிப்பு, காலதாமதத்தினை தவிர்ப்பதற்கான முன்னேற்பாடுகள் போன்ற காரணங்களால் மாசிமாத இதழினை வெளியிடமுடியவில்லை. இதன் விஸ்தரிப்பு அவசியமானதாக இருந்தது என்பதுடன் பல வாசகர்களின் ஏகோபித்த வேண்டுகோளாகவும் எம் முன் வைக்கப்பட்டது.

இச்செயற்பாட்டினால் வாசகர்களுக்கு ஏற்பட்ட அசௌகரியங்களுக்கு மனம் வருந்துவதுடன் இனிவரும் காலங்களில் காலதாமதமின்றி வெளிவரும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம். அறிவுபூர்வமான அக்கறையுடைய தரப்பினரிடமிருந்து எமக்கான ஒத்துழைப்பினையும் எதிர்பார்க்கின்றோம்.

சந்தா திட்டத்தில் எம்மோடு இணைந்திருந்த வாசகர்களுக்கு ஒரு மாதஇதழ் நீடித்து வழங்கப்படும் என்பதையும் பணிவுடன் கூறிக்கொள்கின்றோம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் முன்னணி கல்விக்கையேடுகள் தற்போது விற்பனையில்... (தரம் 1, 2, 3, 4, 5, 10, 11)

## பெப்ரவரி மாதக் கையேடுகள்










உங்கள் பிள்ளைகள் பெப்ரவரி மாதம் கற்ற சகல பாடங்களையும் வீட்டில் இருந்தவாறே சுயமாகப் பயிற்சி செய்ய உதவும். மாதாந்த அலகுப்பரீட்சைகளிலும், தவணைப் பரீட்சைகளிலும், புலமைப் பரிசில் போட்டிப் பரீட்சையிலும், க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையிலும் வெற்றி கொள்வதை மையமாகக் கொண்டு கல்விச்சுடர் சிறப்பு வளவாளர் குழுவினால் தயாரிக்கப்படும். (முற்றிலும் பாடத்திட்டத்தை தழுவியது) மாதாந்த வெளியீடுகளே இவையாகும்.










அனைத்து உதயன் பத்திரிகை முகவர்களிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

உங்கள் இடங்களில் இருந்தவாறே பிரதிகளை பெற்றுக்கொள்ள 0714273035 / 0778589817 / 0718628372 என்ற இலக்கத்திற்கு அழையுங்கள்

கல்விக்கூடங்களுக்கு விசேட கழிவு உண்டு.


Public Library
Jaffna

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதாந்த குடும்ப சஞ்சிகை
# ஒளிஅரசி
மங்கையரின் தோழி

**வெளியீட்டாளர்** மாஸ்மீடியா சேவிஸ்
இல. 70, டேவிட்சன் றோட், கொழும்பு - 04

**ஆசிரியர்கள்**

பிரதம ஆசிரியர் : திருமதி யசோதை சரவணபவன்
ஆசிரியர் : திரு. இ. ஜனதன்
இணை ஆசிரியர் : திருமதி பா. ஜயிலா

**எழுத்தாளர் குழு**

| | |
|---|---|
| திரு. ச. லலீசன் | அச்சுவேலி |
| நூருல் அயின் நஜ்முல் ஹுசைன் | கொழும்பு |
| திருமதி தேவா மாதவன் | கொழும்பு |
| இரா. நிசாந்தன் | வட்டக்கச்சி |
| ஸகீட். எச். சப்றின் | மருதமுனை |
| கவிஞர் பிறேம்ராஜ் | கொழும்பு |
| திருமதி சூர்யா சிவரூபன் | வட்டுக்கோட்டை |
| எஸ். எல். மன்சூர் | அட்டாளைச்சேனை |
| செல்வி பாலாஜினி | பளை |
| திருமதி சுமித்ரா ராகவன் | கிளிநொச்சி |
| து.திலக் (கிரி) | சுவிஸ் |
| வே. முல்லைத்தீபன் | ஒட்டுசுட்டான் |
| காரை. எம். பி. அருளானந்தம் | யாழ்ப்பாணம் |
| இ.அன்ரன் இருதயகுமாரன் | நெல்லியடி |

**ஆலோசகர்கள்**

திருமதி. கோகிலா மகேந்திரம் (ஓய்வுபெற்ற ஆசிரியர், பிரபல எழுத்தாளர்)
திரு. த. ஜெயசீலன் (கவிஞர், மாநகர சபை ஆணையாளர்)
திரு. எஸ். செல்வராஜா.(ஓய்வுநிலை மாகாண கல்விப்பணிப்பாளர்)
திரு. எஸ். மகேஸ் (ஓய்வுபெற்ற கோட்டக்கல்வி அதிகாரி)
திருமதி சிவமலர் சுந்தரபாரதி (அதிபர்)
மைமூனா அகமட் (ஓய்வுபெற்ற நீதியரசர்)
திரு. சி. நற்குணலிங்கம் (ஓய்வுபெற்ற கோட்டக்கல்வி அதிகாரி)
திருமதி ஆனந்தராணி நாகேந்திரன் (சங்கீதபாட ஆசிரிய ஆலோசகர்)
திரு. ஏ. ஜெயக்குமார் (ஓய்வுபெற்ற அதிபர்)
திரு. எஸ்.சரவணபவானந்தன் (கோட்டக்கல்வி அதிகாரி )
திரு. ஏ.ஜே.ஞானேந்திரன் (சிரேஸ்ட எழுத்தாளர் - சுவிஸ்)
நூருல் அயின் நஜ்முல் ஹுசைன் (ஊடகவியலாளர்)

**சட்டஆலோசகர்** : திரு. ரட்ணம் ரகுராஜா

**தபால் முகவரி**

ஆசிரியர், 'ஒளிஅரசி' இல. 55, பருத்தித்துறை வீதி,
நெல்லியடி.

**தொடர்புகளுக்கு :**

தொலைபேசி : 0114320695
துரித அழைப்பு : 0718628369,0714273035
தொலைநகல் : 0112506610
E-mail : oliarazi33@gmail.com
Viber - 0718628369

**இதழ் வடிவமைப்பு**

எஸ்.மகாவிஷ்ணு
எம்.ஜீவநீதன்

மகளிர் தின வாழ்த்து

பிரதம ஆசிரியரின்
உள்ளத்திலிருந்து

# தனி மரம் ஒரு போதும் தோப்பாகாது

**வணக்கம் அன்பான வாசகர்களே!**



காலஓட்டத்தில் நாமும் ஓடிக்கொண்டிருக்கின்றோம். எமது அவசர ஓட்டத்தில் நாம் ஒவ்வொருவரும் இழப்பவையும் தொலைப்பவையும் ஏராளம். ஆனால் எதைத் தொலைக்கின்றோம், எதை இழக்கின்றோம் என நின்று நிதானித்து பார்ப்பதற்கு கூட நேரமற்றவர்களாய் வாழ்கின்றோம். வாழ்க்கை இயந்திர மயமாகிவிட்டதால் மனங்களும் இயந்திரம் போன்றே தொழிற்பட முனைகின்றது.

உறவுகளை, உண்மையை, காலத்தின் கனதியை, அறத்தின் மகிமையை, அன்பின் ஆழத்தை, பழமையின் உன்னதத்தை, மனங்களின் ஸ்பரிசத்தை என நாம் தொலைத்தவை ஏராளம். கூட்டுக்குடும்பம் என்ற எமது பண்டைய வாழ்வியல் முறை அழிவுற்றதும் ஆரோக்கியம் பேணிய பல விடயங்களை பழமை என நாம் ஒதுக்கியதுமே இன்றைய உடல்உள ஆரோக்கிய சீர்கேட்டின் முக்கிய காரணிகளாகும்.

மனங்களை இணைப்பதும் மகத்துவம் சொல்வதும் உறவுகளே. தற்போது உறவுகள் என்பதன் உன்னதங்களை உணர்வதென்பது மிக அருகிவிட்டது. என்றோ ஒரு நாள், அல்லது எப்போதோ ஒரு நிகழ்வின் கூடுகையில் தான் உறவுகளைக் காண்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாகச் சொல்லப்போனால் தாயின் கூடப்பிறந்தவர்கள், தந்தையின் கூடப்பிறந்த வர்களைத் தவிர ஏனைய உறவுகளை தெரிந்து வைத்திருப்பதே இன்றைய சிறார்களுக்கு கிடைக்காத ஒன்று. அதாவது இன்றைய வளரும் சந்ததியினருக்கு உறவு என்னும் பொக்கிசத்தின் அருமை உடைந்து போன ஒன்றாகவே காண் பிக்கப்படுகின்றது.

முன்னைய காலங்களில் உறவினர்கள் கூடி பண்டிகைகளையும் விழாக்களையும் கொண் டாடி மகிழ்ந்தனர். இன்று அவ்வாறான நிகழ் வுகள் அருகிவிட்டன. பிள்ளைகளின் கல்வி, பணிச்சுமை என ஏதோ ஒரு காரணம் உறவுக ளைத் தவிர்க்கும் நிலையைத் தந்துள்ளது. அரு கில் இருக்கும் போது பந்தங்களின் மகத்துவம் புரிவதில்லை, தூரச் செல்லும் போதுதான், மனம், கடிதத்தாளில் முகர்ந்து முகர்ந்து தேடத் துடிக்கும் உறவுகளை. உறவென் பது வார்த்தை அல்ல, அது மூச் சுக்காற்று, அது சுவாசம்.

உறவுகளைத் தொலைத்து விட்டு மனவெறுமைக்குள் அந்தரங்கமான ஒரு சோகத்தின் பிடியில் சிக்கித்தவிப்பவர்கள் பலருள்ளனர். அதுவும் பெரும்பாலான முதிய வர்களின் நிலை அதுவாகத்தான் உள்ளது. எட் டுத் திக்கும் விரிந்த உறவு எட்டாத் திக்குவரை பரவிக்கிடக்கிறது. தனியே வாழ்ந்துவிடலாம் என நாம் நினைத்தால் அது மிகத்தவறு. தனி மரம் தோப்பு ஆவதில்லை. எதற்குமே விதி விலக்கு உண்டல்லவா? ஆனால் ஆலமரம் ஒற்றை மரமே தோப்பாகத்தான் காட்சி தரும், அதற்கு நாம் ஒவ்வொருவரும் ஆலமரம் போல இருக்க வேண்டும். வாழ்க்கை வாழ்வதற்கே.

**நன்றி.**

பிரதம ஆசிரியர்

**இம்மாத சிந்தனைக்கு:**

வீட்டிற்கு வரும் விருந்தினரை அன்புடனும் அனுசரணையுடனும் இன்முகத்துடன் வரவேற்று உபசரிப்போரின் வாழ்வானது துன்பங்கள் அற்றதாக மகிழ்ச்சி நிறைந்ததாக விளங்கும்.

**எடுத்துக்காட்டு**

**பொதுமறையில் இருந்து.** **அதிகாரம் : 9 குறள் : 83**

**வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை**
**பருவந்து பாழ்படுதல் இன்று.**


# ஒளிஅரசி சந்தா விபரம்

## அன்பு வாசகர்களே!

ஒளிஅரசியை உங்கள் வீட்டிலிருந்தவாறே பெற்றுக்கொள்ள வேண்டுமா? கீழுள்ள வங்கி கணக்கிலக்கத்திற்கு பணத்தை வைப்பிட்டு வைப்புத்துண்டு, தொலைபேசி இல, தபால் முகவரி என்பவற்றை தெளிவாக எழுதி ஒளிஅரசியின் கடிததொடர்பு முகவரிக்கோ அல்லது *071 8628369* என்ற வைபர் இலக்கத்திற்கோ அனுப்பவும்.

| | |
|---|---|
| **கட்டணத்தொகை** | **உள்நாடு – ரூ. 1000.00** |
| **வங்கியின் பெயர்** | **ஹற்றன் நஷனல் வங்கி.** |
| **வைப்பிடவேண்டிய பெயர்** | mass media services |
| **வங்கி கணக்கு இலக்கம்** | **009010383405** |
| **வெளிநாடு** | **40$** |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கர்ணன் இடது கையால் தானம் கொடுத்தது ஏன்?

கொடையளிப்பதில் இவனுக்கிணை வேறு எவருமே இல்லை என்று போற்றப்பட்டவன் கர்ணன். அவன் கொடுப்பதை என்றுமே இழப்பாக எண்ணியதில்லை. அவன் செய்த தர்மங்களுக்கு அளவேயில்லை. அதனால் குற்றுயிராக கர்ணன் போர்க்களத்தில் கிடந்தபோது அவன் செய்த தர்மங்கள் அவன் உடலிலிருந்து உயிர் போகவிடாமல் காத்து நின்றன.

இதைக் கண்ட கண்ணன், நீ செய்த தர்மத்தின் பலன் யாவும் தந்து விடு , என்று வேண்டுகிறான். மார்பில் புதைந்த அம்பை எடுத்து, கொட்டும் செங்குருதியில் அவன் செய்த தர்மத்தின் பலன் யாவையும் கண்ணனுக்கு அர்ப்பணிக்கிறான் கர்ணன்.

இவ்வளவு சிறந்த கொடையாளியான கர்ணனின் வாழ்க்கையில் நடந்த ஒரு நிகழ்ச்சி. ஒரு நாள் காலை கர்ணன் கிணற்றடியில் எண்ணெய் தேய்த்து முழுகத் தயாராகிக் கொண்டிருக்கிறான்.

இடதுகையில் வைத்துக்கொண்டிருந்த எண்ணெயைக் கிண்ணியிலிருந்து எடுத்து உடம்பில் பூசிக் கொண்டிருந்தான். அப்போது ஒரு ஏழை அங்கு வந்து கர்ணனிடம் தனக்கு ஏதேனும் உதவி செய்யக் கோரினான். அடுத்த கணமே இடது கையில் ஏந்தியிருந்த தங்கக் கிண்ணியை அந்த ஏழையிடம் கர்ணன் கொடுத்து விட்டான். அங்கிருந்த நண்பர் ஒருவர் கர்ணனைக் கேட்டார். கர்ணா! தர்மம் என்றாலே கர்ணன் என்று தான் பெயர். ஆனால் கொடுக்கும் தர்மத்தை வலது கையால்தான் கொடுக்க வேண்டும் என்ற முறை உனக்குத் தெரியாதா?

கர்ணன் சிரித்துக் கொண்டே தெளிவாகப் பதில் சொன்னான். நீர் சொல்வது சரிதான். வாழ்க்கை என்பது எப்பொழுதும் முன்னெச்சரிக்கை கொடுக்காது.

> மூட்டையாகச் சுமக்கும்போது அது பாரம். போட்டியாகச் சுமக்கும்போது அது பொய். வாட்டமாகச் சுமக்கும் போது அது வாழ்க்கை. நாட்டமாகச் சுமக்கும் போதுதான் அது ஞானம். யோசிக்காமல் கொடுப்பதே தானம்...

ஆகையால்தான் இடக்கையிலிருந்து வலக்கைக்கு கிண்ணம் மாறுவதற்குள் ஏதேனும் எனக்கு நிகழ்வதற்குள் உடனேயே அந்தத் தர்மத்தைச் செய்துவிட வேண்டும் என்ற துடிப்பில் தான் இடது கையாலேயே கொடுத்து விட்டேன் என்றான்.

தமிழரசி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவி (15)

# அரசியின் 'உதவும் கரம்'





சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸில் வசிப்பவருமான திரு. சுப்பையா பத்மநாதன் என்பவர் ஒளிஅரசியின் உதவும்கரங்கள் செயற்பாட்டின் மூலம் ரூ. 350 000 பெறுமதியான தரம் 01 தரம் 05 வரையான புலமைச்சுடர், குட்டிச் சுடர் பயிற்சிப்புத்தகங்களை தனது தாயாரான சுப்பையா பொன்னம்மா நினைவாக சுழிபுரம் ஐக்கியசங்க வித்தியாசாலை, காட்டுப்புலம் அ.த.க. பாடசாலை, திருவடி நிலை சைவதமிழ் வித்தியாசாலைஆகியவற்றுக்கு ஒரு வருடச்சந்தாவின் மூலம் வழங்கி உதவினார். உதவி வழங்கிய இவருக்கு ஒளிஅரசியின் மனப்பூர்வமானநன்றிகள் உரித்தாகட்டும்.

உதவி (17)

## அரசியின் உதவிக்கரம் :- கல்விக்கும் அறிவியலுக்கும் கரம் கொடுப்போம்

தமிழ் மாணவர்களின் கல்வி வளர்ச்சியை மேம்படுத்துவதற்காக புலம்பெயர் உறவுகள் பல்வேறுபட்ட உதவிகளை வழங்கி வருகின்றனர். அந்த வகையில் ஒளிஅரசியின் உதவும் கரம் செயற்றிட்டத்தின் மூலமான இம்மாத உதவியை சுவிஸ் நாட்டில் வசிக்கும் தாயக உறவான திரு.தவராசாநவநீதன் அவர்கள் வழங்குகின்றார்.

தருமபுரம் இல. 1. அ.த.க பாடசாலையில் தரம் 5இல் கல்விகற்கும் மாணவியாக ஜெயச்சந்திரன் கலையரசி என்பவரின் கல்வி உபகரணக் கொள்வனவிற்காகவே இவ்வுதவி வழங்கப்படுகின்றது.

சமூகசேவை நோக்கோடு இவ்உதவியை வழங்கிய நவநீதன் குடும்பத்தினருக்கு ஒளிஅரசியின் வாழ்த்துக்களையும் நன்றிகளையும் சமர்ப்பிக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பின் கனதிகள்

அதிகாலைஆதவனும்
விழித்தெழ முன்னே
அமர்க்களம்கொள்கிறது மனம்
இன்பமும்துன்பமும் இணைந்தே
கட்டித்தழுவ ஏங்கியே நிற்கிறது இதயம்

சிற்றன்னை வீட்டில்
இரண்டாண்டுகாலம்
ஆதாரம்தேடி
அகதியாய் சேர்ந்தவள் இவள்.

நீ வருவதாய்
அறிந்ததில் இருந்து
இதயம் ஏதேதோ எண்ணங்களில்
கும்மியடிக்கிறது.
உன்நினைவுக் குழந்தைகள்
என்னுள்ளே ஏதேதோ
சப்தங்களை எழுப்பிக்கொள்கின்றன.

ஆமாம்
அழகான குடும்பமதில்
இரண்டாவதுமகளாய்
இவளின் அவதாரம்.

அண்ணவன் வெளிநாடு
சென்றுவிட
மத்தியமாகாண தலைநகரில்
தனியார் நிறுவனத்தில்
பணியில் இவளிருக்க
வரனாய் நீ வந்தாய்,
என் வீட்டின் ஆதரவு
உன் வரவுக்கு
குரல் கொடுக்க
நானும் கனாக்கண்டேன்
மணநாளின் கோலமதை.

ஆசைகள் பல திரட்டி
என்னுடன் உன்
முதல் சந்திப்பு,
நீவருவதற்குள்
யுகம் கடந்து போனதாக
மனம் புலம்பிக்கொண்டது..
வந்துசேர்ந்தாய்,
வசீகரிக்கும் கோலத்தில்.



இதழ்கடையில்
புன்னகையைப் பிழிந்து
இதழ்முழுதும் தடவி
கண்களில்
அன்பினைக் குழைத்து
அப்பியே வந்தாயா..?
ஏதும் புரியாமல் நான்.

பேதையாய் மகிழ்ந்து நிற்கின்றேன்,
கண்களால் கேட்கிறாய் நலமா? என்று.
எங்கிருந்தோ பாய்ந்துவந்த நாணமது
முகமதை மூடிக்கொள்ள
தலைகவிழ்ந்து கொள்கின்றேன் நான்.!

வாய்விட்டுகுலுங்கியே சிரிக்கிறாய்,
இப்படி ஒரு நாணமா என்னவளுக்கு?
உன் குரல் சொன்னதும்
மனதெல்லாம் மந்தகாசம்கொள்கிறது.
அன்பாய் உன் கனவுகள்
அத்தனையும் என்மனதில் இறக்கிவிட்டு
நிம்மதியாய் கையசைத்து நீ செல்கிறாய்.

வாரங்கள் சில கடந்தேக
சீதனச்சிறையில் என்னை
சிறைப்பிடித்துக்கொள்கின்றாய்
வரதட்சனை அதிகம்
என் வீட்டில் எதிர்பார்க்கிறார்கள்
என்ன தருவர்கள் உன்வீட்டில்?
உன் கேள்வியில்
மருண்டேமுழிக்கிறது
என் பொருளாதாரம்
உன்னோடு வழக்காடவிரும்பாமல்
நான் தடைசொல்ல
நீ விடைபெறுகின்றாய்..
உருகும்மெழுகென நான்
உருக்குலைந்து போகின்றேன்

மாதங்கள் சில கடக்க
மனம் மட்டும் வேண்டுமென
அடுக்கடுக்காய் வரன்கள்.
ஆனாலும் உன்னைப்போல்
யாரும் இடம்பிடித்து அமர
மனம் சம்மதிக்கவில்லை..

அன்னையும்தந்தையும்
வாதாடிக்களைத்து விட
அன்னைதன் அன்னையைத்தேடி
விண்ணுலகம் சென்றுவிட
தந்தையும் பின்னேயே சென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதங்கள் ஆறு கடந்துவிட
கூடியே பிறந்தவனும்
உறவின் கதவைச் சாத்திவிட்டான்.

தற்காலிகப் பணியும்
நிரந்தரமாய் நின்றுவிட
பணிதேடும்பயணமதில்
மனம் களைத்து கனத்துவிட
இரண்டாண்டு காலமாய்
பொருளாதாரம் பொய்யாகிப்போய்
புழுதியில் தள்ளிவிட
புரண்டேஎழுகின்றேன்இவ்விட்டில்
சம்பளமில்லா வேலைக்காரியாய்;;;

எண்ணங்கள் அறுபட்டு
நடப்பிற்கு வருகிறேன்
இந்த வீட்டுப் பெண்ணின்
பெண்பார்ப்பு ஆர்ப்பரிப்பில்.

சிற்றன்னை மகனின் நண்பனாம்
மணமகள் கைபிடித்தே
வெளிநாடு திரும்புவானாம்.
இளையவளுக்கு பொருத்தமாக
அவன் இருப்பானாம்,
சிற்றப்பா வாக்குமூலம்,
மாப்பிள்ளை புதுவரவாம்.
ஆரவாரமாய் இருக்கிறாள் அவள்
அவன் நீ யென்று
எனக்குமட்டும் தெரிந்தஉண்மை
மூளையும்இதயமும்முரண்பட்டே
சண்டை இடுகின்றது
ஆனாலும் மீண்டும் ஊமையாய் இவள்

கார்க் கதவுதிறக்க குடும்பசகிதம்
புதுஜென்மம் எடுத்து
புதிதாய் வந்திறங்குகிறாய்
கதிரையில் கால் மேல் கால்போட்டு
வெளிநாட்டு வாழ்வின் சுவாரசியம்
விளம்பியே நிற்கின்றாய் நீ.

அத்தனைபேரும் ஆவலாய் இருக்க
வாங்கி வந்த பொருட்களை
கடை பரப்புகின்றாய்.
அடுக்களை வாசலில் ஆவலாய்
நிற்கின்றேன் நான்.

ரசனை சொல்லியே
வழங்குகின்றாய் அன்பளிப்பாய்.
உன்னைக் கண்டதும் சீறிப்பாய்ந்த
செல்லநாய்க்குட்டி உட்பட அனைவருக்கும்
காலியான பையுடன் மீண்டும்
உன்னிருக்கையில் அமர்கின்றாய்.

என் நண்பன்
சொல்வான் இவ்வீட்டில்
உள்ள அத்தனை உறவுகளையும்
அதனால் தான் சின்னதாய்
அன்பான என் அன்பளிப்பு
அழகாய் சிரிக்கின்றாய்.

தேநீர் தர வருகின்றேன்
உன்னருகில் தயக்கமாய்.
நிமிர்ந்தும் பார்க்காமல்
வாங்கியே பருகுகிறாய்.

இவள் எங்கள் பெரியம்மா மகள்
புதிதாய் அவர்களின் அறிமுகம்.
ஆனால் இவள் பழையவள்தான் உனக்கு
ஓ.. என நெற்றிவரை புருவம் தூக்கி
நளினமாய் ஒரு பார்வை.
நத்தையாய் சுருண்ட மனதுடன்
மீண்டும் அடுக்களைக்குள்
புகுந்து கொள்கின்றேன்

புதியவனாய், நல்லவனாய்,
பண்புள்ள மணமகனாய்
உன்புதுக்கோலம், பவ்வியமாய் நீ
மணித்தியாலம் கடந்துகொள்ள
குடும்பத்துடன் உன் புறப்பாடு

குழந்தைகள்அன்றே ஊதி உடைத்துவிட்ட
பலூன்களின் துகள்கள்
வரவேற்பறை முழுவதும்
சிதறியிருக்கிறது.
அதை கைகளால் எடுக்கின்றேன்,
உன் மீது நான் கொண்டபிரியம்போல்
அதுவும்விரல்களில் இருந்து
பிரியமறுக்கின்றுது

அன்பிற்கும் வேண்டும் போலிருக்கிறது
பொருள் ஆதாரம் (பொருளாதாரம்)
உன் பெயர்சொல்லித் துடிக்கும்
இதயத்திற்குத் தெரியவில்லை
அவமானங்களும்அலட்சியங்களும்
இத்தனையும் நடந்தும் இன்றும் மனம்
தனக்குத்தானேஆவலாய்
கேட்டுக்கொள்கின்றது
எனக்காக என்ன கொண்டுவந்தாய்?
ஒன்றும்இல்லையா? அல்ல,
என்றுமேஇல்லையா?!!!

அபர்ணா

Public Library
Jaffna



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கனிவான பந்தம்

ஒருமுறை கல்யாணம் செய்தால், அவ்வளவுதான் அதற்குமேல் வேறெதுவும் தேவையில்லை என்று மறந்து போகும் விஷயமல்ல இது. அன்றாடம் உயிர்ப்போடு நிகழ வேண்டிய கூட்டு முயற்சி இது. தனித்தனி நபர்களாக இருக்கும் இருவர், சேர்ந்து வாழ முடிவுசெய்து, இருவருக்குமாய் ஒரு வாழ்வை உருவாக்கி, அதில் சந்தோஷமாக வாழ்ந்து நல்வாழ்வை உருவாக்கிக்கொள்வது. இப்படி இருவர் சேர்ந்து தங்கள் வாழ்வை ஒன்றாக பிணைத்துக்கொள்வதே தனிஅழகு.

உண்மையிலேயே அழகான உறவுகள் மலரவேண்டும் என்றால், அடுத்தவரை நோக்கும் முன், ஒரு மனிதன் முதலில் உள்முகமாய்த் திரும்பி தன்னைத் தானே ஆழமாய் அறிந்துகொள்வது அவசியம். நீங்கள் சந்தோஷ ஊற்றாக மாறி, அதை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்பியே உறவுகளை ஏற்படுத்திக் கொள்கிறீர்கள் என்றால், எப்படிப்பட்டவருடனும் உங்களுக்கு அற்புதமான உறவு உருவாகிடும். உங்கள் சந்தோஷத்தை பகிர்ந்து கொள்வதற்குதான் செல்கிறீர்கள் என்றால், இவ்வுலகில் யாருக்கேனும் உங்களுடன் பிரச்சினை உண்டாகுமா என்ன? நிச்சயம் இல்லை. இன்னொரு மனிதருடன் சேர்ந்து வாழ்வதன் ஆழமான உணர்வை, உன்னதத்தை நீங்கள் உணர வேண்டுமென்றால், அந்த உறவு உங்களைப் பற்றியதாக இருக்கக் கூடாது அது எப்போதும் உங்கள் துணைவரைப் பற்றியதாகவே இருக்க வேண்டும். நீங்கள் இருவருமே இவ்விதமாக எண்ணினால் கல்யாணம் என்பது ஒரு சங்கமமாய் உருவெடுக்கும்.

உங்கள் சுகம், சந்தோஷம் என எல்லாவற்றிற்குமான ஆதாரமாக உங்கள் துணைவரை நியமித்து, உங்கள் சொர்க்கத்தை உருவாக்க


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அவரை எப்படியெல்லாம் பயன்படுத்த லாம் என்ற கணக்கோடு நீங்கள் திருமணம் செய்திருந்தால், உங்களுக்கு ஏமாற்றம் தான் மிஞ்சும். திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக் கப்படுகிறது என்பார்கள். காரணம், பலரும் தங்கள் திருமணத்தை நரகமாக மாற்றிக் கொண்டுவிட்டார்கள்! அடுத்தவரிடம் இருந்து எதை, எப்படிப் பெறலாம் என்ற கணக்கின் அடிப்படையில் உங் கள் உறவை உருவாக்கி இருந்தால், அதை எவ்வளவு நுணுக்கமாக நீங்கள் கையாண்டாலும், உழைச்சலும் பிரச் சினையும் தொடர்ந்து இருந்து கொண் டுதான் இருக்கும். ஆனால் உங்கள் உறவை அடுத்தவருக்கு அர்ப்பணமாக நீங்கள் உருவாக்கினால், எல்லாம் அற் புதமாக இருக்கும்.

இல்லற பந்தம் என்பதே இனி மையானதுதான். அதனை கணவனும் மனைவியும் ஆழுகின்ற முறையே சொர்க்கமாகவும் நரகமாகவும் மாற்று கின்றது.


அப்படித்தான் பிரமிளாவும் பிரதீபனும். பிரமிளா கல்லூரி ஆசிரியர், பிரதீபன் ஒரு மிகப்பெரிய நிறுவனத்தின் பகுதி முகாமையாளர். இரண்டு குழந்தைகள்.

அன்பான மகிழ்வான வாழ்க்கை. பிரமிளா ஆசிரியர் மட்டுமல்ல, ஒரு எழுத்தாளரும் கூட. மனைவியின் எண்ணங்களுக்கு வாழ்த்தும் வழியும் கொடுக்கின்ற ஆண்கள் மிகச்சொற் பமானோரே. அந்த சொற்பத்திற்குள் தானும் ஒருத்தனாக இருந்து நல்ல புரிதலே நல்ல இல்லறத்தை தருகிறது என்பதற்கிணங்க மனைவியின் எண் ணங்களை வண்ணமாக்கிய கணவன்.

இன்று வரை தேடல்களுடனே வாழ்ந்து வரும் பிரமிளாவிற்கு கணவனின் அன் பும் புரிந்துணர்வுமே மிகப்பெரிய பலம் எனலாம். கணவனை தாயாக விழிப்பதின் பொருள் என்ன? கணவனைத் தாயாக காண்பது தானே, அதே தாயன்பை தன் கணவனிடமும் கண்ட பிரமிளா அம்மீ என்று தன் கணவனை அழைப்பதை வழக் கமாக்கினாள். கணவனைத் தாயாய் காண் பது கிடைத்தற்கரிதல்லவா?

மனைவி என்னும் உறவின் ஆழமும் புனிதமும் தெரிந்து அன்பு, அக்கறை, விட் டுக்கொடுப்பு, புரிந்துணர்வு, எல்லாவற்றையும் சமனாகப் பகிர்ந்து நல்லதொரு மனைவி யாக தனது இல்வாழ்வை வெற்றி யாக்கிய பிரமிளா.

சிறந்த புரிதலின் ஜனனத்தில் பத்து ஆண்




டுகள் ஓடிமறைந்திருந்தது இவர்களின் இல்லறத்தில். பட்டப்படிப்போடு நின்று விடாது பட்டங்கள் பின்னும் இணைகிற தென்றால் அங்கே நல்லதொரு இல்லறம் நடக்கிறதென்றே அர்த்தம். மனைவியாய் தாயாய் என்ற பதங்களைத்தாண்டி நல்ல தொரு மருமகளாய், சிறந்த மைத்துனியாய் வாழ்வதிலும் ஒரு பெண்ணின் முக்கிய வகிபாகம் தங்கியிருக்கிறது.

**நல்லதொரு குடும்பத்தை உருவாக்கி இன் புற்று வாழ்ந்துவரும் திருமதி பிரமிளா பிரதீ பனே ஒளிஅரசியின் இம்மாத நட்சத்திர இல்லத்தரசியாகவும் மிளிர்கிறார்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதுவா பெண்களுக்கான உரிமை?

**வணக்கம் அன்பான ஒளிஅரசியே!**

நான் மாதந்தோறும் தவறாது ஒளிஅரசியை வாசித்துவரும் வாசகன். அனைத்து அம்சங்களும் மிகஅருமை. அதிலும் சமூக விழிப்புணர்வை நோக்கிய பட்டதும் சுட்டதும் பகுதி மிகஅருமை. நானும் என் மனதில்பட்ட மனதைச்சுட்ட ஒரு விடயத்தினை இங்கே எழுதலாம் என எண்ணுகின்றேன்.

அண்மையில் பத்திரிகைச் செய்தி ஒன்றை வாசித்தேன். அதாவது பெண்களும் மதுபானச் சாலைகள் நடத்தலாம், பணிபுரியலாம் எனவும் அதற்கான அனுமதி வழங்கப்படுவதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. இவ்விடயம் தொடர்பான எனது கருத்தினை இங்கே பதிவிடுகின்றேன். அதாவது ஆண்கள் மட்டும் மதுபானச் சாலைகளில் பணிபுரிவதே சமூகத்தை உலுக்கிப்போடும் போது பெண்களும் பணிபுரியலாம், நடாத்தலாம் எனக்கூறப்படுவது சமூக சீரழிவினை இன்னும் ஊக்குவிப்பதற்குச் சமனாகும்.

## மனதில் பட்டதும் சுட்டதும்

இதனைப் பெண்களுக்கான உரிமை என எண்ணுபவர்கள் ஒரு நிமிடம் சிந்திக்கவேண்டும். இன்று வீதியில் தனியே ஒரு பெண்பிள்ளை செல்லமுடியாத நிலையே உள்ளது. பார்வையில், பேச்சில் , நடத்தையில் என ஒவ்வொரு விடயங்களிலும் பெண் ஆபாசமாகவே பார்க்கப்படுகின்றாள், காயப்படுத்தப்படுகின்றாள். வீடுகளில் துன்புறுத்தப்படும் பெண்கள் ஏராளம் உள்ளனர். வீட்டு வன்முறை, குடும்ப வன்முறை, சமூக வன்முறை என பெண்களுக்கான வன்முறைகளின் வடிவங்கள் பல உண்டு.

மதுபானச் சாலைகளில் பணிபுரியும் பெண்கள் அதற்கு அடிமையாகும் வாய்ப்புகள் அதிகமாக உள்ளன. கணவனின் போதையே வீட்டைச் சீரழிக்கும் நிலையில் மனைவியும் போதையில் வீடு வந்தால் பிள்ளைகளின் எதிர்காலம் பற்றிச் சொல்லவே வேண்டாம். பயத்திலும் நடுக்கத்திலும் நாட்கள் நகர்வதுடன் மிகவிரைவில் பிள்ளைகளும் இப்பழக்கத்திற்கு அடிமையாகும் நிலையே உருவாகும். இது பெண்களுக்கான உரிமை வழங்கல் அல்ல. தற்போது நீதிமன்றங்களை நிறைக்கின்ற விவாகரத்து வழக்குகளுக்கு தீனிபோடுகின்ற விடயமே இதுவாகும்.

ஆணும் பெண்ணும் சரிநிகர் என்பதைக்கேட்டு ஆடைக்குறைப்புகளால் அலங்கோலமாய் திரியும் ஒரு பக்க பெண்சமூகம் இவ்விடயத்தை மனதில் கொண்டு கலாசாரத்தை காவுகொள்ளும் என்பதில் எவ்வித ஐயமும் கிடையாது.

சீரழிந்து செல்லும் தமிழர் பண்பாடும் கலாசாரமும் இன்னும் தேய்ந்து போக வழிவகுக்கும் இவ்விடயம் என்பதில் எவ்வித மாற்றுக்கருத்தும் கிடையாது. இவ்விடயத்தில் சம்பந்தப்பட்டவர்கள் கவனமெடுக்கவேண்டும் என ஒரு குடிமகனாக ஒளிஅரசியின் சார்பில் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

சிவா, கண்டாவளை.

# ஓஷோவின் வாசம்


ஒரு நாள் ஓஷோ புகைவண்டி ஒன்றில் அமர்ந்திருந்தார். பெட்டியில் அவரைத்தவிர வேறொருவரும் இல்லை. நிறுத்தம் ஒன்றில் புகைவண்டி நிறுத்தப்பட்டது. அது புறப்படுவதற்கு சிறிது நேரம் இருந்தது. அவ்வேளை ஓஷோவின் அருகில் வந்த ஒரு பிச்சைக்காரன் தனது தாயார் இறந்துவிட்டதாக கூறி பிச்சை கேட்டான். அவரும் அவனிடம் ஒரு நாணயத்தைக் கொடுத்தார். அதனை வாங்கிய பிச்சைக்காரன் சந்தோசமாகச் சென்றான்.

சிறிது நேரத்தில் அதே பிச்சைக்காரன் தனது தோற்றத்தை மாற்றிக்கொண்டு ஓஷோவிடம் வந்து தனது மனைவி இறந்துவிட்டதாகக்கூறி ஈமக்கடன் செய்யவேண்டும் எனப்பிச்சை கேட்டான். ஓஷோ மௌனமாக மீண்டும் ஒரு நாணயத்தை எடுத்துக் கொடுத்தார். பணத்தாசை பிடித்த அந்தப் பிச்சைக்காரனோ வேறு வேறு வேடங்களில் வந்து தனது உறவுகளின் பெயரை ஒவ்வொன்றாக இறந்ததாகச்சொல்லி அவரிடம் யாசகம் பெற்றான். ஒவ்வொரு தடவையும் ஓஷோ எவ்வித மறுப்பும் கூறாது பணம் கொடுத்தார். புகைவண்டி புறப்படும் நேரம் வந்தது,

அவ்வேளை மாறுவேடத்தில் தன்னிடம் வந்த பிச்சைக்காரனிடம் இன்னும் உன் உறவுகள் எத்தனை பேர் இறந்துள்ளனர் என்று சொல், நான் மொத்தமாக பணத்தை தந்துவிடுகின்றேன், ஏனெனில் வண்டி இப்போது புறப்படப்போகின்றது என்றார். பிச்சைக்காரனுக்கோ பயங்கர அதிர்ச்சி.

ஐயோ இத்தனை தடவையும் நான் ஏமாற்றியதை அறிந்துகொண்டுதான் பிச்சை போட்டீர்களா? எல்லாம் தெரிந்தும் என்னிடம் எதுவும் கேட்காமல் நாணயங்களைக் கொடுத்தீர்ளே, உங்களால் எப்படி முடிந்தது? என்று நடுங்கியபடியே கேட்டான்.

அதனைக்கேட்ட ஓஷோ , பிச்சைக்காரனிடம், இதோ பார் , நீ சொன்ன உறவுக்காரர்கள் எல்லாம் ஒரு நாள் இறந்து தான் போகப்போகின்றார்கள், எனவே நீ உண்மையைத்தான் சொன்னாய், அதனால் நான் பிச்சை போட்டேன். நீ ஒவ்வொரு முறை சொல்லும் போதும் நீ என்றோ ஒரு நாள் நிகழப்போவதையே சொல்கிறாய் என நம்பினேன், அதனால் மௌனமாக இருந்தேன், இப்போது என்ன நடந்துவிட்டது, மதிப்பு இல்லாத சில நாணயங்களை என்னிடம் இருந்து நீ பெறமுடிந்தது. ஆனால் என் நம்பிக்கை, அது என்னிடம் தான் இருக்கிறது.



அதை நான் இழந்துவிடவில்லையே, நம்பிக்கையா? பணமா? எனக்கேட்டால் நம்பிக்கை தான் வேண்டும் என்பேன், ஏனென்றால் நம்பிக்கை தான் எனக்கு இறைவனைக் காட்டுகின்றது, இறைவன் எளிமையானவன் என்பதை உணர்த்துகின்றது, அதுதான் உனக்குள்ளும் எனக்குள்ளும் இருப்பது ஒன்றே என்பதைச் சொல்லித்தந்திருக்கின்றது, எந்த நம்பிக்கை இறைவனை விட மேலானதோ அந்த நம்பிக்கையை இழக்கவிரும்பமாட்டேன் என்றார் ஓஷோ தெளிவாக.

பிச்சைக்காரன் கதறியபடி அவரது கால்களில் விழுந்தான்.

**நம்பிக்கை தொடரும்**



திருமதி தேவா மாதவன்,
கொழும்பு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சூடுசூம்

ஜெ.ஈழநிலவன்

அதிகாலை நான்கு மணி.பனி கொட்டிக்கொண்டிருந்தது. கடையின் பின் பக்கம் சிறு குப்பி விளக்கு ஒன்று இருட்டை எரித்தவாறு சமாளித்துக்கொண்டிருந்தது. இரவு முழுக்க வெங்காயம், கிழங்கு, கரட், லீக்ஸ் அரிந்துமுடித்து படுக்க விதுசாக்கு இரவு பத்துமணி ஆகிவிட்டது. அதைவிட இடுப்பு வலி ஒருபக்கம், அவளது வாழ்க்கை பற்றி குறிப்பெடுத்தால் கேட்பவரும் பாதியில் அழுதுவிடுவார்கள்.

அவளது திருமணம் கனவுபோல் தோன்றி கனவுபோல் நிறைவேறியது. விருப்பமில்லாமல் திருமணம் செய்து கொண்டாள் என்று கயல் சொல்லித்தான் பின் நாட்களில் தாயால் புரிஞ்சுகொள்ள முடிஞ்சது. திருமணத்து முதல் நாள் கண்ணாடிக்கு முன் நின்று ஏன் அழுதுகொண்டாள் என்று இதுவரைக்கு அவளைத்தவிர யாருக்கும் தெரியாது. திருமணமாகியதற்கு சாட்சியாக இரண்டு பெண் பிள்ளையும் ஒரு ஆண் பிள்ளையும் கடவுள் கொடுத்த வரமென்று பெற்றதில் எல்லையற்ற ஆனந்தம். மூத்தவனுக்கு பதினான்கு வயது அதன் பின் ஐந்தாண்டு கழித்து ஒரு பெண் பிள்ளை அடுத்ததுக்கு இரண்டு வயது வித்தியாசம்.

இப்போது வயிற்றில் நான்கு மாதத்தை சுமந்துகொண்டிருக்கிறாள். நேற்று மழை மப்பு குறைந்திருந்ததால் பிள்ளைகளின் உடுப்பை எல்லாம் அள்ளி ஒரு மூட்டை கட்டி தோய்க்க கொண்டு போட்டாள் குனிந்துகொண்டு தோய்த்ததால் இடுப்பு வலியுடன் கால்வலியும் வரும் என்று தெரியும்.

உடுப்பு கட்டை அவிழ்த்து நீரில் ஊறப் போட்டுவிட்டு ....''பாத்திருக்க மத்தியானம் ஆகிடும் பள்ளிக்கூடம் போன பிள்ளைகள் பசியில் வரும்'' என்று தாழ்வாரத்தில் கிடந்த விறகுக்கட்டையை எடுத்து அடுப்பை மூட்டினாள்.

விறகில் நெருப்பு பற்றிக்கொள்ள கொஞ்ச நேரத்தை கடன்வாங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆஸ்துமா நோயாளிபோல் காற்றை உள்ளெடுத்து வெளியில் விட்டால் விறகில் படர்ந்த நெருப்பு அவள் வாழ்வைபோல் எரிந்து அணைந்து கொண்டிருந்தது. இன்னும் வேகமாக உயிர்துறக்கும் போர்வீரன் போல் ஆவேசமாய் ஊதினாள். நெருப்பு பற்றிப்பிடித்து எரியத்தொடங்கியது. அதன் பிறகு வாழ்வை மீட்டெடுத்த திருப்தியில் கொதிக்கும் நீரில் அரிசையைப்போட்டு நகரத்தொடங்கினாள்.

''உடுப்பு ஊறியிருக்கும்...'' யாரோ சொல்வதுபோல் அவள் தனக்குத்தான் சொல்லிக்கொண்டு கிணற்றடிக்குப் போனாள். அது ஒரு பொதுக்கிணறு, சுற்றி இருக்கும் நான்கு ஐந்து குடும்பத்திற்கு வாக்கப்பட்டிருக்கு. விதுசா கயிறு கட்டப்பட்ட நீர் நிறைந்த வாளியை மேல இழுத்தாள்.

அதனுள் மீன்குஞ்சுகள் ஓடுவதற்கு இடமில்லாமல் தவித்தபடி அங்கும் இங்கும் ஓடித்திரிந்தது.'' என்ன இது நேரம் கெட்ட நேரத்தில்'' இழுத்த வாளியை கிணற்றில் இறக்கிவிட்டு ஊறப்போட்ட உடுப்பை எடுத்துக்கொண்டாள். உடுப்பு வாளியில் நீலச்சாரன் கருப்பு சேட்டும் அவளின் கண்ணை எட்டி உதைத்தது. உடலில் அடிபட்ட தழும்பை அழுத்துவதுபோல் இருந்தது. எடுக்க மனமில்லாமலும் எடுக்கவேண்டிய கட்டாயத்திலும் இருந்தவள் இரண்டு உடுப்பையும் எடுத்து பக்கத்து கல்லில் போட்டுவிட்டு தோய்க்க தொடங்கினாள்.

கிணற்றடிக்கு வந்த நர்மி ''என்ன விதுசா சரத்தையும் சேட்டையும் விட்டுத்து போறீங்கள்.'' திரும்பி பார்த்த விதுசா பதில் சொல்வதற்கு வறண்ட உள்ளத்தில் வார்த்தைகளை பிடுங்கிக்கொண்டு ''அது அங்கே கிடக்கட்டும் இப்ப அவசியமில்ல, நீங்க ஓரமாய் வச்சிட்டு கழுவுங்க, நான் பிறகு எடுக்கிறன்.'' நர்மி தூக்கி பார்த்தாள், நீல சாரன் கருப்பு சேட், இது வினோத் அண்ணன் போட்டுக்கொண்டு திரிவார் அப்ப வினோத் அண்ணன் வந்திற்றோ. எதுக்கும் பின்னேரம் போய் பார்ப்பம்.. நர்மி குளிக்க தொடங்கினாள்.

மதியம் பன்னிரெண்டு மணி கடக்கத் தொடங்கியது. விதுசா பிள்ளைகள் வாற நேரமாச்சி என்றவாறு மீன் குழம்பும் பருப்புக்கறியும் கட கட என்று வைத்து முடித்தாள். தோய்த்த உடுப்பு வாளியில் இருந்தபடி காய்ந்தது. கொடியில் உதறிப்போட மறந்துவிட்டாள். அந்த மறதிக்கு காரணம் வினோத்தின் நீல சாரனும் கருப்பு சட்டையும். சில வேலைகள் பெண்ணின் கைகள் படும்வரை காத்துக்கிடக்கின்றது. ஈரத்துணிகள் அவளின் கடைசி பிள்ளைபோல் சுருண்டு இருந்தது. இப்போது கடையின் முன் விறாந்தைய்யிலிருந்து வெறிச்சுக்கிடக்கும் வீதியை பார்த்தாள் விதுசா. மனிதர்களற்ற தெருக்கள் மயானத்தின் பாதி'' அவளை மீறி அந்த தத்துவம் விழியால் பற்றிக்கொண்டது.

ரோட்டை குறுகுறு என்று பார்த்தவள். அத்தருணம் கடிதக்காரன் மட்டும் வந்து போனான். கடிதத்தை வாங்கி பிரித்தவள் கதி கலங்கி நின்றாள். யாரிட்ட சொல்லி அழுவது தனியாக இருந்து அழுது தீர்த்தாள். ரோட்டைப்பார்த்தவள் வீட்டையும் பார்த்தாள். இரண்டும் ஒன்றுபோல் தோன்றியது...'' ம்ம் பிள்ளையளும் இல்லண்ணா என் கதி. ஏதோ இந்த சின்னசிறுசுகள் சிரித்துக்கொண்டு இருப்பதால் வீடு நிறைஞ்ச மாதிரி இருக்கு. அந்த நேரம் தான் மூத்தவன் சீனு வந்தான்.

வெள்ளை சட்டையெல்லாம் நேற்று பெய்த மழையின் அடையாளமாக சேர்ப்புள்ளிகள். விதுசாக்கு கண்டவுடன் கோபம் ஒரு பக்கம் இதை எப்படி தோய்ப்பது என்று நினைக்கும்போதே இடுப்பு வலி சுத்தியாலால் அடிச்ச மாதிரி இருந்தது. அது ஒரு பக்கம் இருக்க கமலா அக்காவிடம் சீட்டு போட்டு சீனுக்கு பத்துவயது பிறந்தாளுக்கு வேண்டி கொடுத்த சேட்டும் இதே வெள்ளையில் கறைபட்ட புள்ளி சிரித்தபடியே உள்ள வந்தான் சீனு.......

''என்ன அம்மா கடைக்கு முன்னுக்கே உட்கார்ந்து இருக்கிறா? சீனு புத்தக பையைவிதுசாவின் மடியில் வைத்தான். கடகட என்று கண்ணாடிப்பெட்டியை திறந்து......'' அம்மா எல்லா கிழங்கு ரொட்டியும் வித்துற்றா நான் நினைத்தன் மிஞ்சிக்கிடக்குமென்று. மாவு குழைச்சது சரியா வரல்ல. நீ முனங்கிற்று படுத்தா அதான் எழுப்பாமல்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நானே குழைச்சு ரொட்டியும் போட்டன். இந்தா பார் அம்மா ரொட்டிக்கல்லு சுட்டத''.. சீனு உள்ளங்கைய திருப்பி காட்டி னான்... இதுன்ன சீனு இப்படி பொங்கிற்று என்ர மகனே'' விதுசா சீனுவின் கையப்பி டித்து கண்கலங்கினாள்.'' சீனு இரு வாறன். ஒரு முறை நெருப்பு சுட்டதிற்கு கொடுத்த கீறிம் பூசி கொஞ்சம் இருந்தத ஞாபகம். பவுடர் டப்பா இருக்கும் பலகையில் தட வினாள், கையில் ஏதோ தட்டுப்பட்டது. பிடிபட்டதை எடுத்தாள் காலாவதியாகி நிலையில் ''சல்லி அம்பாள் திருவிழாவில் விதுசா வினோத்துக்கு வாங்கிக்கொடுத்த கடிகாரம்...''நல்லா இருக்க வினோத் '' ''ஆம் விதுசா இந்த கடிகாரத்த பார்க்கும் போதெல்லாம் நீதான் முன்னுக்கு வருவா '' ஒவ்வொரு நிமிசத்தையும் உன் நினை வால் கடந்து போவேன்'' விதுசாக்கு முகம் பூரிப்படைந்தது. கண்ணாடி முன் நின்று அழுததிற்கு மனசிடம் மன்னிப்பு கேட் டாள்.

அதற்கு பின் அந்த வார்த்தை சந்தர்ப்ப வார்த்தையாக சொல்லப்பட்டதை உணர பத்துவருடம் கடந்திருக்கு.

''அம்மா மருந்த எடுத்திட்டீங் களா?நெருப்பு சுட்ட வலி மருந்து தேடும் போதுதான் வலிக்க தொடங்கியது மகனுக் கு.கதவோரம் நின்று கண்கலங்கியவள் அழுவதை அடக்கிக்கொண்டு'' எங்க காட்டு பூசத்தொடங்கினாள்.''.... ஏம்ம உடனே வலிக்கல்ல இப்பதான் நோவு அதி கமாகுது.

கணிதப்பாட மாஸ்டர் கணக்கு செய் யல்ல என்று அதே கையில் ரெண்டு மூன்று விளாசல் விளாசிற்றார்....''ஏன் நீ சுடுபட் டதை காட்டலலையா? காட்டினன் நடந் ததையும் சொன்னன். அவர் அப்பா எங்க என்று கேட்டுக்கொண்டே இருந்தார்.

நான் வேலைக்கு போனதை சொன் னன் அம்மா என்றான் சீனு.விதுசா இடி விழுந்த மரம்போல் நின்றாள்.என்னட்ட கேட்ட என்ன சொல்வது. உண்மைய சொல்வதா?ஒரு காலத்தில் நடந்தது தெரி யவரும். பிறகு நான் பொய்க்காரி ஆகி டுவன்.எனக்கு இருக்கும் துணை என்ட பிள்ளைகள் தான்.

சீனுட்ட எப்படி சொல்லி புரியவைப் பது என்று யோசித்தாள் விதுசா. சீனுவின் தலையை தடவினாள்.வயிற்றில் உறங் கும் குழந்தைக்கு இடம் கொடுத்து படுத் தான் சீனு.....''இனி நீ ரொட்டி போடா தம்மா நானே அப்பாவரும்வரை போட்டு வச்சிற்று பள்ளிக்கு போறன்.''விதுசாக்கு வினோத்தை பற்றி சொல்வதற்கான சந்தர்ப் பம் இதுதான். ''சீனு உங்க அப்பா இனி வர மாட்டார்'' படுத்திருந்த சீனு..''ஏன் அம்மா விதுசாவை பிய்த்துக்கொண்டு இருந்தான்.

கொடிய அடைமானம் வைத்து கடைக்கு சாமன் வேண்டி போட்டிற்று வாற மிச்சத்தில் உனக்கொரு சைக்கிளும் வேண்டலாம் என்று வச்சன். அந்த மனுசன் அதையும் எடுத்துற்று போய்ட்டு.இப்ப கடி தம் போட்டுருக்கு....ல'' எங்கமம்மா கடி தம் என்று படித்தான். விதுசா உன்னோடு வாழ எனக்கு பிடிக்கல்ல .அதுதான் உன்ன வேணாம் என்று அங்கே விட்டுத்து வந்திற் றன். எனக்கு பிடிச்சமாதிரி வாழப்போறன். இவ்வளவு நாளும் என்னோடு வாழ்ந்த வாழ்க்கை உண்மையென்றால் எனது வாழ்க்கையில் குறுக்கிடாதா.

குழந்தைகளை வளர்க்கும் பொறுப்பு உனக்குரியது வளர்த்து ஆளாக்கிவிடு.... சீனுக்கு கண்ணீர் பொலு பொலு என்று ஊத்தியது.

கடிதம் முடியமுன் கிழித்து வீசினான். அடுப்பங்கரையில் சுருண்டு படுக்கும் பூனைக்குட்டிபோல் சுருண்டான்.

அடிக்கடி அப்பாவை கீரோ என்று நினைத்துபார்க்கும் போட்டோவை புத்த கப்பையிலிருந்து எடுத்தான். அழுதவாறு அம்மா நீயும் பக்கத்தில் நிற்கிறாய் என் றான். இரண்டு கையாலும் கோணிப்போகா மல் போட்டோவை இரண்டாக கிழித்தான். விதுசாவின் போட்டோவை நெஞ்சுடன் அணைத்தான்.

வினோத்தின் போட்டோவை பக்க இலக்க இலக்கம் கொப்பில் வச்சிற்றான். விதுசாவின் சட்டைய எடுத்து கண் ரெண் டையும் துடைச்சான்.'' அம்மா இனி நானே ரொட்டியப்போடுறன் நீ விடிஞ்சதும் எழும் பம்மா என்றான்.


★★★★★★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரையாடல்

மகளிர் தின வாழ்த்து



ஜனநாயகி

# ஆள் பாதி ஆடை பாதி

ஆராதனாவின் கடிகாரம் மணி ஐந்து எனக்காட்ட மீண்டும் ஒரு தடவை அடித்து ஓய்ந்தது. மணிக்கட்டை திருப்பி பார்த்தவள் கையிலிருந்த வேலைகளை முடித்துவிட்டு அவசர அவசரமாக அலுவலகத்திலிருந்து புறப்பட்டாள். அப்போதுதான் தோழி கவிதாவும் புறப்பட்டுக்கொண்டிருந்தாள்.

ஆராதனா : என்ன உனக்கும் இப்பதான் வேலை முடிஞ்சுதா கவி?

கவிதா : அட, ஆராதனா, நீயும் இப்பதான் வெளிக்கிடுறாய் போல.

ஆராதனா : இப்பதான் வேலை முடிஞ்சது. சரி இதென்னடி உடுப்பு, இவ்வளவு இறுக்கமா போட்டிருக்கிறாய்?

கவிதா : இப்ப இது தானே பஷன், அதனால தான் நானும் இப்பிடி போட்டிருக்கிறன்.

ஆராதனா : பஷன் எண்டா எப்படியும் போடலாமே,

கவிதா : வேற என்ன செய்யிறது, காலத்தோட சேர்ந்து நாங்களும் ஓடத்தானே வேணும்.

ஆராதனா : அதுக்காக எப்படியும் போடலாம் எண்டு அர்த்தம் இல்லை.

கவிதா : ஆள் பாதி, ஆடை பாதி எண்டுதானே சொல்லுறது

ஆராதனா : அதுசரிதான்,அதுக்கு இப்பிடி அர்த்தம் கிடையாது, ஆடையின் அழகு பாதி என்றால் அவரவரின் ஆளுமை, ஆற்றல், திறன் இவையெல்லாம் அரைவாசி அழகு என்று பொருள்.

கவிதா : இருந்தாலும் உலக ஓட்டத்தோட நாங்களும் ஓடத்தானே வேணும்.

ஆராதனா : அது சரி, அதுக்காக? பாக்கிறவங்களின்ர கண்ணை உறுத்திற மாதிரி உடுப்பு போட்டா தப்புகளும் அதிகமா நடக்கத்தான் செய்யும்.

கவிதா : இதென்ன உன்ர கதை, நாங்கள் எப்படியும் போடுவம், அதுக்காக

ஆராதனா : தவறு செய்பவர்களை விட தவறுக்கு தூண்டுபவர்களே கடுமையான குற்றவாளிகள்.

கவிதா : நீ இப்ப என்ன சொல்ல வாறாய்?

ஆராதனா : இப்பிடி கண்ணை உறுத்தாமல் ரசனைக்கேற்ற உடுப்புகளைப் போடு.

கவிதா : சரி சரி

ஆராதனா : நான் உன்ர தோழி, உனக்கு நல்லது தான் சொல்லுவன்.

கவிதா : புரியுது,

ஆராதனா : பஸ் வந்திட்டுது, நான் போட்டுவாறன்.

கவிதா : ம்ம்

மகிழ்வுடன் தோழியைப் பார்த்து புன்னகைத்தபடியே சென்றாள் ஆராதனா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலஏட்டில் தமது பெயர்களைப் பொறித்து மறைந்தவர்களை வரலாற்றின் ஆளுமைகளாக, எமது வாழ்க்கையின் வழிகாட்டிகளாக போற்றுதல் வேண்டும். அந்த வகையிலேயே மாதாந்தம் வரலாற்று ஆளுமை என்னும் பகுதி பிரசுரமாகிறது. எமது திருநாட்டின் வடமராட்சிப்பகுதியில் வசித்து சிறந்த இலக்கிய ஆளுமையாக விளங்கி அமரத்துவம் அடைந்துவிட்ட திக்கம் சிவயோகமலர் அவர்கள் இம்மாத வரலாற்றின் ஆளுமையாக நினைவுகூரப்படவுள்ளார்.

அழைக்கப்பட்ட இவர் திக்கம் மெதடிஸ்ற் மிஷன் பாடசாலை, பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையிலும் மருதனார் மடம் இராமநாதன் மகளிர் கல்லூரியிலும் கல்விகற்றார். உயர்தரம் கற்கும் காலத்திலேயே அதிகமான இலக்கியப் போட்டிகளில் பங்குபற்றி பரிசில்கள் பெற்று பாடசாலைக்கு பெருமை தேடிக் கொடுத்தார்.

உலக அளவில் பெயரும் புகழும் பெற்று தனது நாட்டிற்கும் தான் பிறந்த மண்ணுக்கும் பெருமை தேடித்தந்த இவர் பல்கலைக்கழக காலத்தில் அரசியல் விஞ்ஞானப் பாடத்தில் அகில இலங்கை ரீதியில் முதலிடம் பெற்று சாதனையாளராய் மிளிர்ந்தவர். ஆசிரியராகவும் தேர்தல் திணைக்களத்திலும் தேசிய வீடமைப்பு திணைக்களத்திலும் கடமையாற்றி ஓய்வுபெற்றவர். 1980ஆம் ஆண்டு முதல் சிறுகதைகள், குறுநாவல்கள், தொடர் கதைகள், ஈழத்தின் பிரபல தினசரிகளிலும் வெளிவரத்தொடங்கின. வீரகேசரி, தினக்குரல், தினகரன், சுடர்ஒளி, ஈழநாடு, தினபதி, சிந்தாமணி, சிரித்திரன், முரசொலி, ஈழமுரசு, தினமுரசு, லண்டன் தமிழ், உலகம் கற்பகம், அருள், ஊற்று ஆகிய பத்திரிகைகள் இவரது ஆக்கங்களைத் தாங்கி வந்தன. இவர் அமரத்துவம் அடைந்த பின்னரும் கூட இவர் எழுதிய ''காத்திருக்கப்போகிறாள்'' எனும் தொடர் சுடர் ஒளி பத்திரிகையில் பிரசுரமா

# ஈழத்தின் முதல் பெண் நாவலாசிரியை




இலக்கியம் படைத்து புகழ்பெற்ற அமரர் திக்கம் சிவயோகமலர் ஜெயக்குமார் யாழ்ப்பாண மண்ணின் பண்பாட்டு விழுமியங்களை மையமாகக்கொண்டு தனது பல படைப்புகளை இலக்கிய உலகிற்கு அளித்துள்ளார். அடிமையின் காதலி என்ற சரித்திர நாவலை எழுதி ஈழத்தின் முதல் பெண் நாவலாசிரியை என்ற பெருமையைப் பெற்றவர். ஈழத்தின் பிரபல எழுத்தாளர்களில் குறிப்பாக பெண் எழுத்தாளர்களில் தனியான முத்திரை பதித்தவர்.

வடமராட்சியில் அல்வாய் பகுதியிலுள்ள திக்கம் என்ற இடத்தில் சின்னத்தம்பியார் கணேசுக்கும் சின்னம்மாவுக்கும் சிரேஷ்ட புதல்வியாகப் பிறந்தார். திரவி என எல்லோராலும் அன்பாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கியமை குறிப்பிடத்தக்கது.

சரித்திர நாவல் ஒன்றை எழுதவேண்டும் என்ற ஏக்கம் அவரது மனதில் நீண்டகாலமாக இருந்ததினால் நான்கு அண்டுகளாக தொடர்ந்து முயற்சித்து அடிமையின் காதலி என்ற சரித்திர நாவலை எழுதிமுடித்தார். இந் நாவல் தினகரன் வாரமஞ்சரியில் 1999 ஆம் ஆண்டு இருபத்தொரு அத்தியாயங்களாக தொடர்ந்து வெளிவந்தது, இச்சரித்திரநாவல் ஈழத்தின் முதல் சரித்திர நாவலாசிரியர் என்ற பெருமையையும் பாராட்டுக்களையும் அள்ளிக்குவித்தது. அதுமட்டுமன்றி இலங்கையில் வாழும் மலாய் வம்சத்தினர், தமது வரலாறு பற்றி அறியவைத்தமைக்காக தமது நன்றிகளையும் தெரிவித்தனர்.

கலாநிதி க. குணராசா (செங்கைஆழியன்) எழுதிய ஈழத்து சிறுகதை வரலாறு என்னும் ஆய்வுநூலில் ஈழத்தின் தரமான பெண் எழுத்தாளர்களில் ஒருவரான அவரது சிறுகதைகள் ஈழத்து சிறுகதை வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க முக்கியத்துவத்தினைப் பெற்றுள்ளன, என்று பதிவுசெய்யப்பட்டுள்ளது. மல்லிகை நாற்பத்து மூன்றாவது ஆண்டு மலரில் ஈழநாடு இதழின் புனைகதைப் பங்களிப்பு என்னும் தலைப்பிலான ஆய்வுக் கட்டுரையில் இவரை ஏழாம் தலைமுறைப் படைப்பாளியாகக் குறிப்பிட்டு இவரின் சிறந்த சிறுகதைகள் என 'அவள் அகதி இல்லை, மயங்குகிறாள் ஒரு மாது, மலர் தாவும் வண்டுகள்' என்பன வெளிவந்துள்ளன என விதந்துரைக்கப்பட்டுள்ளது.

எழுத்தாளர் திக்கம் சிவயோகமலர் ஜெயக்குமார் அவர்கள் தனது இல்லறவாழ்வில் இலக்கியத் தம்பதியாக வாழ்ந்து மறைந்தார் என்பதும் தான் இறக்கும் வரை ஈழத்து இலக்கிய உலகில் சுடர்விட்டுப் பிரகாசித்தார் என்பதும் குறிப்பிடப்படவேண்டிய விடயங்களாகும். றுக்மாங்கதன் என்னும் ஏக புதல்வனின் தாயாரான இவர் உலகளாவிய ரீதியில் தனது எழுத்தாற்றலால் வடமராட்சி மண்ணுக்கு புகழும் பெரும் தேடித் தந்தவர் என்பதும் என்றும் மறுக்கமுடியாத உண்மையாகும். இவரது நினைவுகளும் இலக்கியப் படைப்புகளும் காலத்தால் அழியாத சுவடுகளாக என்றும் நிலைத்திருக்கும் என்பது தெள்ளத்தெளிவான விடயமாகும். இவரது சுவடு பற்றி இலக்கியத்துறையில் நாமும் சாதனைப்பாதைகளை வகுத்துக் கொள்வோம்.

திரு.ஏ.என்.எஸ்.திருச்செல்வம்
சிரேஷ்ட ஊடகவியலாளர்

## கவிதைக்களம்




என் இதயத்தின்
ஓசை என்னை
துன்பம் செய்தாலும்
உன் கொலுசின்
ஓசை என்னைக்
மகிழ்ச்சிப்படுத்துகின்றது-உன்
அழகிய கால்களில்
கொஞ்சிக் கிடக்கும்
உன் கொலுசுகள்.
எனக்கு முகவரி
தந்த உன்
கொலுசை கொஞ்சம்
எனக்கு தந்து விடு
இதயத்திற்கு உயிர்
ஊட்டி கொண்டு இருக்க

நீ என்னைக் கண்டு ஒழிந்து
ஓடினாலும்
உன் காலில்
கிடக்கும் கொலுசின் ஓசை
உன்னை காட்டிக் கொடுக்கின்றது

நீ தொலை தூரம்
நடந்து வந்தாலும்
உன் கொலுசின் ஓசை
என் காதில் முத்தம்
இடுகின்றத
உன் கொலுசின் ஓசை
என் நெஞ்சில் ராகம்
பாடுகின்றது

உன் கொலுசின் ஓசை
மூலம் என் மனதை
நீ பறிக்க வைத்தாய்



ஒலுவில் ஆதிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சகமாய் சமப்பவள்

பெண்ஆளுமைகளை அடையாளப்படுத்தும் ஒளிஅரசியின் பயணத்தில் இம்மாத நட்சத்திர இல்லத்தரசியாக ஜொலிப்பவர் திருமதி பிரமிளா பிரதீபன். பல பெண்களின் உள்ளக்கிடக்கைகள் ஒலிக்கிறது பிரமிளா வின் குரலாய். அவர் எம்மோடு பகிர்ந்தவை எமது வாசகர்களுக்காக.

**01. உங்களை பற்றிய அறிமுகம்?**

தாய், மனைவி, ஆசிரியை எனும் மூன்று கதாபாத்திரங்களுடன் எழுத்தாளர் எனும் பாத்திரத்தையும் சேர்த்துக் கொண்டவள் நான். பதுளை ஊவாகட்டவளையில் பிறந்தேன். உயர்தரம் வரை பதுளை தமிழ் மகளிர் மகா வித்தியாலத்திலும் சரஸ்வதி தேசிய கல்லுரியிலும் கற்றேன்.

பின் கலைப்படடதாரியாகி ஆங்கில ஆசிரியராக நியமனம் பெற்றேன் தொடர்ச்சியாக எனது தொழில்சார் உயர் கற்கை நெறிகளை NIE, OUSL நிறுவனங்களில் இற்றைவரை தொடர்ந்து கெண்டிருக்கிறேன். கவிதைகள் சிறுகதைகள் நூல் விமர்சனங்கள் எழுதுவதில் ஆர்வம் கொண்டிருந்தாலும் பீலிக்கரை, பாக்குப்பட்டை முதலிய இரண்டு சிறுகதை தொகுப்புகளை மாத்திரமே வெளியிட்டிருக்கிறேன்.

**02. மலையக பெண் படைப்பாளியான உங்கள் எழுத்துலக பிரவேசம் பற்றி கூற முடியுமா?**

2005 காலப்பகுதியில் பீலிக்கரை எனும் தலைப்பில் என் உணர்வுகளை எழுதி அதனை ஞானம் சஞ்சிகைக்கு தபாலிட்டேன். ஞானம் ஆசிரியர் திரு.ஞானசேகரன் அவர்களிடம் இருந்து அவரை வந்து சந்திக்கும் படி கடிதமொன்று கிடைக்கப்பெற்றேன். என்னால் எழுத முடியுமென்றும் எனது மொழி நடை சிறப்பானதென்றும் ஊக்குவிக்கப்பட்டு ஒரு எழுத்தாளராக என்னை எனக்கு இனங்காட்டிய சந்தர்ப்பம் இதுதான். ஞானம் சஞ்சிகையில் இளம் எழுத்தாளர் அறிமுகம் எனும் தலைப்பில் முதலாவது அறிமுகம் நான்தான் என்பதில் இன்னுமே பிடிபடா பெருமை எனக்கு.

**03. மலையக வாழ்வியலை, சமூக ஒட்டத்தை படைப்பாக்கியுள்ளீர்களா?**

மொத்தமாக ஆமாம் என்பதே எனது பதில். பெரும்பாலான மலையக இலக்கியங்களின் கருப்பொருளானது மலையக மக்களின் இன்னல்களையும் தேவைகளையும் பறைசாற்றும் விதமாகவே அமைந்திருக்கின்றமையை எப்போதுமே நான் அவதானித்ததுண்டு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் என்னால் என் மண்ணை வேறு கண் கொண்டு பார்க்கும் திடமிருந்தது. அதன் அழகியலை விஸ்தரிக்கும் உணர்விருந்தது எங்களுக்குள் மறைந்துகிடந்த அழகு, எளிமை, என்பவற்றை எனது அனுபவ பகிர்வினூடாக வெளிப்படுத்துவதையே நோக்கமாக கொண்டு எழுத ஆரம்பித்திருந்தேன்.

அநேகமாக என்னுடைய சிறுகதைகளிலெல்லாம் ஓரமாய் ஒரு சிறு வலி ஒட்டிக் கிடந்தாலும் கதையெங்கும் மலையகத்தின் அழகும் சந்தோசச் சாரல்களும் அப்பிக்கிடக்க வேண்டுமென்பதே என்னுடைய விருப்பமாகவிருந்தது. இப்படியும் பார்க்கலாம் என்று எண்ணினேன். எழுதினேன். இதற்குள் என்னால் இயலுமான அளவு யதார்த்தங்களை உள்ளடக்கினேன்.

**05. இலக்கிய உலகில் பெண் படைப்பாளர்களின் பிரகாசிப்பு என்பது மிகக் குறைவாக உள்ளதே இது பற்றிய உங்கள் கருத்து.**

ஒப்பீட்டளவில் மிகக்குறைவு என்பது நிஜம்தான் என்றாலுமே பார்த்து வியக்கத்தகு பெண் ஆளுமைகள் இல்லாமல் இல்லையென்பேன். கோகிலா மகேந்திரன், பத்மா சோமகாந்தன், சந்திரகாந்தா முருகானந்தன் போன்றோர் நான் எப்போதுமே வியக்கும் பெண் ஆளுமைகள். பெண்களது உணர்வுகளை அப்படியே ஒரு ஆணினால் ஒப்புவிப்பதென்பது முழுவதுமாய் சாத்தியபாடான விடயமே அல்ல.

எத்தனையோ வெளிச்சொல்லத்தெரியா உள்ளுணர்வுகள் அப்படியே அமத்தி வைக்கப்பட்டு அவர்தம் நனவிலி மனதிற்குள் சேகரிக்கப்பட்டிருக்கும் என்பதை நான் முழுமையாக நம்புகிறேன். பெண் எழுத்தாளர்களால் மட்டுமே அவ்வுணர்வுகளுக்கு மிகச்சரியான உருவம் கொடுக்க இயலும். ஆனாலும் பெண்ணானவள் ஆமைக்கு உவமிக்கப்படக்கூடியவள்.

ஆமை தன் ஓட்டை சதா தன்னுடனேயே சுமந்து திரிவதையொத்து தானறியாமலேயே குடும்பம், குழந்தைகள், கடமைகள் என்பவற்றை சுகமாக சுமக்கத்தெரிந்தவள் பெண். தனக்கு எழுதும் திறன் இருப்பினும் கூட அதனை இரண்டாம் பட்சமாக்கி எண்ணத் துணிபவள் பெண். அதனால் தான் அந்த ஒப்பீட்டளவான குறைபாடு காணப்படுகிறதென்று நான் கருதுகின்றேன்.

**06. மாணவர்களிடையே வாசிப்பு அருகிச் செல்வது பற்றி ஒரு ஆசிரியராக உங்கள் கருத்து யாது?**

இன்றைய கல்வி கலைதிட்டத்திட்டத்திற்கு ஒப்ப வாசிப்பை அதிகரிக்குமாப் போல் தேடலுடன் கூடிய கல்வி முறைமையே மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது. ஆனால் அது எத்தனை சதவீதம் வாசிப்பிற்கு உறுதுணையாகிறது என்பது கேள்விக்குறி..? இதற்கு பிரதான காரணமாக நவீன தொழினுட்பங்கள் ஓரளவு அமைந்திடினும் கூட



பெற்றோரது மனநிலை பெருமளவு பங்களிப்பு செய்கிறது என்றே கூற முடியும். வாசித்தலின் தேவையை பெற்றோரும் உணரவேண்டும். அவர்களது பங்களிப்பினை போதியளவு வழங்குவதினூடாக மட்டுமே வாசிக்கும் மாணவர்களது சதவீதத்தினை உயர்த்துதல் சாத்தியம். குறிப்பிட்ட பாட வேளைக்குள் ஒவ்வொரு தனி மாணவனது வாசிப்புத் திறனையும் பரீட்சித்து அதனை வளர்க்க நடவடிக்கை எடுத்தலானது பெற்றோரின் பங்களிப்பிலேயே




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகளவு தங்கியுள்ளது. கூடவே (Intrinsic motivation) எனும் ஊக்கப்படுத்தல் முறைமையூடாக மாணவர்களது வாசிப்பின் தேவையை உணர வைக்கும் முறைமையும் அதிகளவு பயன்தரக் கூடியது என்றும் இதனை ஆசிரியர்களால் செய்ய இயலும் என்றும் எண்ணுகிறேன்.

**07. உங்கள் படைப்புகளில் உங்கள் மனதை அதிகம் தொட்ட படைப்பு எது?**

எனது படைப்புகளில் என்னை மிகவும் கவர்ந்த படைப்பாக ஓரிரவு எனும் சிறுகதையினையே என்னால் கூற முடிகிறது. நான் அண்மையில் எழுதிய கதையிது. இதை எழுதலாமா வேண்டாமா என்று நான் பலமுறை யோசித்ததுண்டு. எழுதி முடிந்ததும் வெளியிடலாமா வேண்டாமாவென பல நாட்கள் என்னிடத்திலேயே வைத்துக் கொண்டிருந்ததுண்டு. இக்கதையானது ஒரு மலையகப்பெண்ணின் மனநிலை அவளது ஏக்கம் நிறைவேற்றப்படாதாப உணர்வு முதலியவற்றை அடிப்படையாகக்கொண்டது. இந்த கரு கதையாக்கப்பட்ட பின் நான் நிஜமாகவே மகிழ்ந்து போனேன். எனினும் இதனை வெளியிடுவதில் ஒரு பெண்ணாய் சிறுதயக்கமொன்று என்னிடமிருந்துக்கொண்டே இருந்தது. ஒரு கட்டத்தில் எல்லாம் உதறித்தள்ளி இக்கதை வெளியிடப்பட வேண்டிய ஒன்று என்றெண்ணி ஞானம் சஞ்சிகைக்கு அனுப்பி வைத்திருந்தேன். எனதிந்த கதைக்கருவானது பலநூறு மலையகப் பெண்களின் நாளாந்த பிரச்சனையாகவிருக்கும் என்பதே எனது கணிப்பு.



**08. . உங்கள் நன்றிக்குரியவர்கள்?**

நிச்சயமாக என் பெற்றோர்கள். என் ஆசிரியர்கள். என் படைப்புகளை வாசித்து குறைநிறைகளை சுட்டிக்காட்டும் இலக்கிய நண்பர்கள். என்னை எனக்கு இனங்காட்டிய திரு. ஞானசேகரன் அவர்கள். எனது முதலாவது சிறுகதை நூலான பீலிக்கரையை நூலுருவாக்கிய புரவலர் ஹாசிம் உமர் அவர்கள். மற்றும் எனக்கு களம் அமைத்துக் கொடுத்த பத்திரிகைகள் சஞ்சிகைகள் முதலிய ஊடகங்கள். இன்னும் என்னை எவ்வகையிலும் ஆதிக்கத்துட்படுத்தாமல் தொடர்ச்சியாக முழுச்சுதந்திரத்துடன் எழுத ஆதரிக்கும் எனதன்பு கணவன்.

**09. பெண்களுக்கு அதாவது இல்லத்தரசிகளுக்கு நீங்கள் கூறவிரும்புவது?**

எப்போதுமே நான் பெண்களுக்கு கூற விரும்புவது.. எங்களுக்கு துணையாக வரக்கூடிய ஒரே ஒரு சக்தி தன்நம்பிக்கை மட்டுமே. எந்தவொரு தளர்ந்த நிலையிலும் எம்மை மீண்டும் உயிர்ப்பித்துக்கொள்ள தன்னம்பிக்கயை அத்திவாரமாக்கிக் கொள்ள வேண்டும். ஏன் என்னால் இது முடியாது? எனும் ஒரேயொரு கேள்வி பல சிக்கல்களுக்கான சிறந்த தீர்வாகிவிடக்கூடும் என்பது எனது மிகச்சிறந்த அனுபவம். பெண்ணுரிமை. பெண்சுதந்திரம். இதையெல்லாம் தாண்டி பெண் என்பவள் எல்லாமாகவும் எங்கும் நிரம்பி நிற்கக் கூடியவள் என்பது ஒவ்வொரு ஆணுக்கும் நிச்சயம் தெரிந்திருக்கும். சுதந்திரமாக சிந்தியுங்கள். நமக்கான சுதந்திரமும் சந்தர்ப்பங்களும் இல்லாமல் இல்லை. முயற்சிப்போம் முடியும்.

**10. எதிர்காலத்திட்டம்?**

ஒரு நாவல் வெளியிடும் எண்ணம் இருக்கிறது, ஏறத்தாழ வெளியிடுவதற்கான 80% வேலைகளை முடித்தாயிற்று தென் மாகாணத்தில் காலி மாவட்டத்தின் ஒரு தோட்டப் பகுதியை மையமாகக் கொண்டே நாவலின் கதைக்கரு அசைக்கப்படுகிறது. அம்மக்களின் வாழ்வியல் அனுபவங்களையும் கடுபுல் எனும் ஒரு வகை உற்பத்தி பற்றியதுமான ஒரு அறிமுக நாவலாக அது அமையும் என எதிர்பார்க்கிறேன். அனேகமாக 2018 மார்ச் மாதத்திற்கு முன்பாக இந்நாவலை வெளியிடுவதற்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org
நேர்கணல் ஜயிலா




# "மலடியின் வாக்குமூலம்"



"ஆறாத கனலாச்சே
வெந்தமனம் நொந்தாச்சே
குடநீரும் சிந்தவில்ல
சொல்லிமனம் அழுதாச்சே...

என் தலைவன் ஊடலிலே
ஒரு துளியும் போயாச்சே
அத் துளியும் எத்துளியோ?
கானல்நீர் அத்துளியோ?

பத்தோடு பதினொன்றாய்
முழுநிலவும் கழிந்தாச்சே...
நெஞ்சோடு வேக்காடும்
வக்கிரமாய் தீயாச்சே...
விழியோடு மதிகலங்கி
சித்தங்கள் வடிந்தாச்சே...
கருவோடு உருதாங்கும்
நிஜமின்று கனவாச்சே...

சீதேவியென்றவரும்
மூதேவியென்றிசைக்க...
வாரிசை காண்கையிலே
சீதேவி என்பாரோ..?
தாலிதினம் அரிக்குதம்மா
மெட்டிதினம் கேட்குதம்மா...
எமைச்சுமக்கும் பெண்ணவளே
கருசுமக்கா சதியேதோ..?

மலர்நாடா வண்டுண்டோ..?
நிதம் கரைகாணா அலையுண்டோ..?
இதழ்சேரா இதழுண்டோ..?
சாந்தி முகூர்த்தமதில்
பொய்யுமுண்டோ..?
கொடி நடையாய் நடைபயிலும்
பூந்துணர்கள் காண்கையிலே...
என் வயிற்றின்.. என் மனதின்..
ஏக்கமதும் அறிவாயோ..?

மல்லிகைதான் மறைத்தாலும்
வாசமது தந்திடுமே...
கருவாசல் அவிழ்ந்தாலும்
தாய்மையதும் பேசிடுமே...
மலடியென்பார்..மலடியென்பார்..
அபசகுனம் நானென்பார்...
கரு தங்கா பேதையிவள்
தள்ளிவைத்தல் நியாயமென்பார்...
கருவுருவா நிலையேதோ..?
பெண்மகளின் நிலைதானோ..?
ஆண்மகனில் காணாதோ..?
மலடன் அவன் என்பீரோ..?



கவிஞர்
மட்டுநகர் ராகுல்

# மனதோடு பேசும் காதல்

மெல்லத் தோள் சாய்ந்து
மண்ணில் உன்னோடு
விரல் கோர்த்து
நான் நடக்கையில்....!

விண்ணில் உதித்த
மீன்கள் எல்லாம்
நம்மீது கண் விழித்துக்
காதலுற....!

என் விழிகள் இரண்டும்
கலங்கித்தான் போனதே
உன் இதயத்தின்
அன்பை நினைத்து....!

அனுப்பிரியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குடி குடிக்கிறது குடியை


நாட்டில் அதிகரித்துவரும் போதைப் பொருள் பாவனை காரணமாக அதிக பாதிப்புக்கள் ஏற்படுவது நாம் தினம் காணும் ஒன்றாக இருந்தாலும் ஏன் இந்த அரசு இதைத் தடைசெய்யக் கூடாது என்ற கேள்வியை மனதுக்குள்ளும் சில இடங்களில் வெளிப்படையாகவும் கதைப்பது உண்டு. இது சாத்தியமா? வள்ளுவன் காலம் முதல் மதுப் பாவனை இருந்துவந்துள்ளது என்பதை நாம் கள்ளுண்ணாமை என்னும் அதிகாரத்தில் காணமுடியும்.

**மதுவைத் தடைசெய்யமுடியாமல் தவிக்கும் அரசு, என்ன காரணம்?**

உலகப் பொருளாதாரப் பின்னனி, கலப்புபொருளாதாரக் கொள்கை, சந்தைப் பொருளாதாரம் எனவும் கூற முடியும். இப்படி பொருளாதாரக் கொள்கைகள் கொண்ட நாடுகள் மற்றய நாடுகளின் பொருட்கள் விக்கும் சந்தையாகவே காணப்படும். இதைத் தடைசெய்ய முயன்றால் பல வரிச்சலுகை இழப்புக்கள், சலுகைமறுப்புக்களை நாடு எதிர் நோக்கும். இதன் காரணமாக அபிவிருத்தி அடைந்த நாடுகள் உற்பத்திசெய்யும் மது வகைகளை விற்கும் சந்தையாகவே எமது நாடு காணப்படும். இதனால் மது தொடர்பான விலை ஏற்றம் விலை குறைப்பு தடைச் சட்டம் தொடர்பாக எமது அரசாங்க முடிவுகள் ஏதும் இருக்காது.

**எப்படி மதுவைத் தடுப்பது?**

இதனை வெளிப்படையாகச் சொன்னால் குடிப்பதை நிறுத்துவதே ஆகும். குடிப்பவர்கள் படிப்படியாக நிறுத்தவேண்டும், என்றும் குடிப்பதை நிறுத்த முடியாது என்றும் உளவளத்துணை குணப்படுத்த இயலாது என்றும் பல கருத்துக்கள் உள்ளது, இருந்தும் மனிதமனம் மிகப்பலமான ஒரு கருவி. அதை நன்றாக இவ் விடயத்துக்குப் பயன்படுத்தமுடியும். குடியை நிறுத்த முற்படும் ஒருவருக்கு குடும்ப ஆதரவு, உற்சாகப்படுத்தல், அன்பாக இருத்தல், என்பன குடியிலிருந்து விடுபட உதவியாக இருக்கும். குறிப்பாக கணவன் ஒரு



குடி நோயாளி எனின், அவரை மனைவி நோயாளி போல பராமரிக்கவேண்டும். நாம் வழமையாக கோபப்படுவது போல் கோபப்படின் எந்த முன்னேற்றத்தையும் அடையமுடியாது. தொடர்ந்து அவர் குடி நோயாளி யாகவே இருக்கநேரிடும். அன்பு, ஆயிரம் மருந்து என்ற எமது பண்பாடு சிறப்பான முறையாக அமையும்.

**சமையல் முறை**

எமது குடும்பத்தில் உள்ள சமையல் முறைகளும் குடிப்பதற்கான காரணமாக அமைந்து விடுகின்றது. குறிப்பாக, தொடர்ந்து ஒரே மாதிரியான உணவு முறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாக கணவன்மார்கள் வெளியில் சென்று உணவு உண்ண முற்படுகின்றார்கள். நண்பர்கள் கூடும் போது மது குடிப்பதற்குச் செல்லநேரிடும் ஒரு காரணியாக இவ்விடயம் உள்ளது. அதனைத் தவிர்க்க உள்ள உணவுப் பொருட்களைக்கொண்டு வெவ்வேறு விதங் களில் சமையல் செய்வதன் ஊடாக மதுப்பிரி யரை உணவுப்பிரியர் ஆக்கிவிடலாம்.

**சமூகநிறுவனங்களில் முன்னின்று செயற்பட ஊக்கப்படுத்தல்**

சமூகத்தில் முன் மாதிரியாகச் செயற்பட ஆரம்பித்தால் மது போதைப்பாவனை ஒரு இழிச் செயற்பாடு என நினைத்து அதிலி ருந்து விடுபட ஏதுவாக அமையும்.

**விளையாட்டு, பொழுதுபோக்கு விடயங் களில் நாட்டத்தை ஏற்படுத்தல்**

''விளையாட்டு மைதானம் உள்ள கிரா மங்களில் குற்றச் செயல் குறைவு'' என ஒரு கருத்துக்கணிப்பு உள்ளது. அதற்கமைய விளையாட்டு பொழுதுபோக்கு நிகழ்வு களில் ஈடுபடுவதன் ஊடாக மது, போதைப் பாவனையைத் தடைசெய்யமுடியும்

**விடுமுறை நாட்களில் பயணம் செல்லுதல்**

உறவினர் வீடுகளுக்குச் செல்லுதல் ஊடாக மது குடிக்கும் நண்பர்களைத் தவிர்க் கவும், மது, போதை நாட்டத்தைக் குறைக்க வும் முடியும்.

விழாக்கள், திருவிழாக்கள், சமயநிகழ்வுக ளில் கலந்துகொள்வதன் காரணமாக ஆன்மீக திருப்தியடைவதுடன் மது போதை மோகத் தைக் குறைத்து சமூகமயப்படமுடியும்.

இவ்வாறு நம் பண்பாட்டில் உள்ள விட யத்தைக் கடைப்பிடித்து குடும்ப ஆதரவுடன் மது என்னும் அரக்கனை நோயை விரட்டு வோம்.

வட்டக்கச்சி வினோத்
(dip in psychological counselling)

---

## உதவி (16)

## அரசியின் உதவிக்கரம் :- கல்விக்கும் அறிவியலுக்கும் கரம் கொடுப்போம்



சுழிபுரத்தைச் சேர்ந்த திரு. உமாபதி என்பவர் தனது பெற்றோரான விசாகப்பெரு மாள் நாகம்மா நினைவாக 2018 இல் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்ற வுள்ள 100 மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் அருகிவரும் வாசிப்பு பழக் கத்திற்கு புத்துயிர் ஊட்டும் வகையில் பெற்றோரின் வாசிப்பு பழக்கத்தினை விருத்திசெய்யும் நோக்கிலும் வருடம் ஒன்றிற்கு ஒளிஅரசி சஞ்சிகையினை சந்தா செயற் திட்டத்தின் மூலம் வழங்கியுள்ளார். அவரது சேவை மனப்பான்மையைப் பாராட்டுவ துடன் ஒளிஅரசியின் சார்பில் மனம் நிறைந்த நன்றிகளையும் தெரிவிக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகளிர் தின வாழ்த்து

காலஓட்டத்தின் நகர்வில் சாதனைகள் பல விதமாய் பதிவாகிக்கொண்டிருக்கின்றன. ஒரு துறையில் வெற்றியீட்டி பதிவாகுவதோ அன்றி கல்வி பாதை யில் வெற்றிநடை பதிப்பதோ தனியே சாதனையாகாது. இன்முகத்துடன் பேசுதலும் சரித்த அதிபர் திரு. கண்ணன் வந்தாரை வரவேற்கும் தமிழ் பண்பாட்டை கொண்டு ஒன்றாய் புன்னகைத்து அன்பாய் அகம் நிறைத்த ஆசிரியர்கள், பேசும் பொற்பாவை இவளோ எனப்பூரிக்கும் வகையில் ஆளுமைப்பாங்கை முகம்தனில்கொண்டு ''வணக்கம்'' என இருகரம் கூப்பி மருண்டு வழித்த ஶ்ரீறம்மியா என இந்நேர்காணலுக்

# முடியாதது ஒன்றும் இல்லை



அனைவரையும் மதித்தலும் ஒழுக்கத்தில் சிறத்தலும் பாங்குடனே பழகுதலும் ஞானத்தில் திழைத்தலும் அனைத்துமே சாதனைகள் தாமே.

அந்த வகையில் இவை அனைத்தும் ஒருங்கே கொண்ட சிறந்த மாணவியாய் விளங்கும் ஒரு பெண்ணே இம்மாதத்தின் சாதனைப்பெண்ணாய் எம்மால் இனங்காணப்பட்டுள்ளார். இலங்கைத் திருநாட்டின் மூளைப்பகுதி என வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணத்தில் ஞானமும் வீரமும் ஒருங்கே பெற்று செருக்குடன் மிளிரும் வடமராட்சியின் துன்னாலை என்னும் சிறு கிராமத்தில் பல கற்றோரை உவந்தளித்து பூரிப்புடன்நிமிர்ந்து நிற்கும் கல்வித்தாயாம் யா/ ஞானசாரியார் கல்லூரியின் உயர்தர வணிக பீட மாணவி ஶ்ரீதரன் ஶ்ரீறம்மியாவே எமது ஒளிஅரசியின் இம்மாதத்தின் சாதனை மாணவி.

ஒளிஅரசியின் நேர்காணலுக்காய் அப் பாடசாலைக்குச் சென்ற போது கனிவான புன்னகையுடன் வரவேற்று உபகாக பாடசாலைக்குச்சென்ற தருணம் மிக அழகானது.

ஶ்ரீதரன் - ஶ்ரீமதி இணையரின் மகளான இவர் பாடசாலையின் மாணவர் பாராளுமன்ற கல்வி அமைச்சராகவும் செயற்பட்டு வருகின்றார். சாதாரண தரப் பரீட்சையில் 8ஏபி என சிறந்த பெறுபேற்றை பெற்ற ஶ்ரீறம்மியா புலமைப் பரிசில் பரீட்சையில் 144 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையவேண்டும் என எண்ணுவதற்கு மிகப்பிரதான காரணமே நகர்ப்புற பாடசாலைகளில் இணைவதே என்னும் எண்ணமாக இருக்கும் போது அவ் எண்ணத்தினைத் தகர்த்து தமது மகளை தொடர்ந்தும் அப்பாடசாலையிலேயே கற்பித்துள்ளனர் இம்மாணவியின் பெற்றோர்.

கூட்டுறவுப் பரிசோதகராக பணிபுரியும் தந்தையின் தடம்பற்றி தானும் கணக்காளராக வரவேண்டும் என்பதே ஶ்ரீறம்மியாவின் எதிர்கால இலட்சிய





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாதம் ஒரு முறை தேசிய ரீதியான திருத்தற் சேவையுடன் உங்கள் பிள்ளைகளின் (2017) பரீட்சைப் பெறுபேற்று அடைவினை அறிந்துகொள்வதற்கு ஒளிஅரசி நடத்தும் தனித்துவப் பரீட்சை செயற்றிட்டம் தரம் - 5

# சிங்கள மொழிபெயர்ப்பு வினாத்தாள்

## 5 வினாத்தாள் I, II 2018 நேரம் : 2 மணித்தியாலம்

★ **மிக நெருங்கிய தொடர்புள்ள உருவச் சோடியுள்ள பெட்டியைத் தெரிவு செய்க.**

**01)** 01.  02.  03. 

**02)** 01.  02.  03. 

**03)** அழிறப்பர் 12 இன் விலை ரூபா 100/= ஆகும். எனின், அழிறப்பர் 3இன் விலையாது?
1. ரூபா 30.00 2. ரூபா 20.00 3. ரூபா 25.00

**04)** வெள்ளை ஆடை அணிந்த பிள்ளைகள் வரிசை ................. போல மிளிர்ந்தது.
1. பால் 2. பூமரம் 3. முயல்குட்டி

**05)** பெரிய தாத்தா சொல்லித் தந்த கதை ..................... போல இனிமையானது.
1. சர்க்கரை 2. தேன் 3. பால்

**06)** மேகலாவின் வீட்டுக்கு 15m தூரம் வடக்காக பாடசாலையும் 100m தூரம் தெற்காக கோவிலும், கோவிலிருந்து 150m தெற்காக வைத்தியசாலையும் அமைந்துள்ளது. எனின் பாடசாலையிலிருந்து வைத்தியசாலைக்கு உள்ள தூரம் எவ்வளவு?
1. 175m 2. 225m 3. 265m

**07)** கோவிலிருந்து மேகலாவின் வீட்டுக்கு உள்ள தூரத்திற்கும் பாடசாலையிலிருந்து மேகலாவின் வீட்டுக்கு உள்ள தூரத்திற்கும் இடையேயான வித்தியாசம் எவ்வளவு?
1. 115m 2. 85m 3. 75m

**08)** ஒரு பெட்டியில் நீலநிறப் பேனா 3ம், கறுப்பு நிறப் பேனா 8ம் வைக்கப்பட்டுள்ளது. பெட்டியைப்பார்க்காது நீலநிறப் பேனா ஒன்றை எடுக்க வேண்டுமாயின் ஆகக் குறைந்தது எத்தனை தடவைகள் எடுக்க வேண்டும்?
1. 06 2. 02 3. 04

**09)** 6 மனிதர்கள் 4 நாட்களில் கிணறு வெட்டி முடித்தார்கள் எனின், 03 நாட்களில் அக் கிணற்றினை வெட்ட எத்தனை மனிதர்கள் தேவை?
1. 08 2. 02 3. 04



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**10)** 2015ஆம் ஆண்டு தைமாதம் 1ஆம் திகதி வியாழக்கிழமை ஆகும். அதன்படி 2015 முடிவடையும் தினமும் 2016 தைமாதம் ஆரம்பிக்கும் தினமும் என்ன கிழமைகளாகும்?
1. வியாழன் - வெள்ளி 2. வெள்ளி - சனி 3. புதன் - வியாழன்

**11)** இரண்டு கடிகாரங்கள் மணியொலிப்பது முறையே 30 நிமிடங்களுக்கு மற்றும் 1 மணித்தியாலத்திற்கு ஒரு முறையாகும். இரண்டு கடிகாரங்களும் காலை 6.30க்கு மணியெழுப்பினால் மீண்டும் அவை இரண்டும் ஒரே நேரத்தில் மணியெழுப்பும் நேரம் யாது?
1. 7.30 2. 8.00 3. 9.00

**12)** கற்பூரம் ஒன்று எரிந்துமுடிய எடுக்கும் நேரம் 35 நிமிடங்கள் ஆகும். அவ்வாறான 05 கற்பூரங்களை ஒரே நேரத்தில் எரியூட்டினால் அவை எரிந்து முடியும்நேரம்எவ்வளவு?
1. 35 நிமிடங்கள் 2. 252 நிமிடங்கள் 3. 54 நிமிடங்கள்

★ **13, 14ஆம் வினாக்களுக்கு தடித்த எழுத்தில் உள்ள சொல்லை விபரிக்கும் சொல்லைத் தெரிவு செய்க.**

**13)** **உலோபியிடம்** எதாவது வாங்கிக் கொள்வது கடினமாகும்.
1. சோம்பலானவன் 2. கெட்டிக்காரன் 3. கஞ்சன்

**14)** **விவேகி** எதனையும் ஆராய்ந்து செய்வான்.
1. பொய்சொல்பவன் 2. அலங்காரம் செய்பவன் 3. புத்திசாலி

**15)** சர்மினி தெற்கு நோக்கி 10m சென்று அவளின் இடப்பக்கமாக திரும்பி 30m சென்று மீண்டும் அவ்விடத்தில் இடப்பக்கம் திரும்பி 40m சென்றாள். அவ்வாறாயின் தற்போது அவள் நிற்கும் இடம், அவளின் ஆரம்ப நிலையத்திலிருந்து நோக்கினால் எந்தத் திசையாகும்?
1. வடக்கு 2. வடகிழக்கு 3. அக்கினி மூலை

**16)** ருவந்தி 100m தூரம் ஓட எடுக்கும் நேரத்தில் சவந்தி 50m தூரம் ஓடுவாள். சவந்தி 50m தூரம் ஓடும் நேரத்தில் தருஷி 60m தூரம் ஓடுவாள். எனின் 200m தூரம் ஓடுவதற்கு ஆகக்கூடிய நேரம் எடுப்பவர் யார்?
1. தருஷி 2. ருவந்தி 3. சவந்தி

**17)** கீழ்குறிப்பிடப்பட்டுள்ள பாடலில் உள்ள வரிகள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றைச் சரியான முறையில் ஒழுங்கமைத்தால் வரும் ஒழுங்கு முறையாவது,
A. ஒரு குழந்தையை வையாதே பாப்பா B. கூடி விளையாடு பாப்பா
C. நீ ஓய்ந்திருத்தல் ஆகாது பாப்பா D. ஓடி விளையாடு பாப்பா
1. B, D, A ,C 2. A, C, D ,B 3. C, A, B ,D

★ **இடைவெளிகளில் வரவேண்டிய இலக்கத்தை தெரிவு செய்க.**

**18)**

| | | | | |
|---|---|---|---|---|
| 16 | 25 | 33 | 40 | ..... |

1. 44 2. 46 3. 52

**19)**

| | | | | |
|---|---|---|---|---|
| 96 | 87 | 79 | 72 | ..... |

1. 68 2. 66 3. 58


**20)** தேவன் ''மு.ப 7.00 மணியளவில் நகரத்திற்கு புறப்பட்டுச் செல்கையில் அவனுடைய நிழல் ''அவனுக்கு இடது பக்கமாக விழுந்தது'' அவன் புறப்பட்டுச் சென்றதிசை யாது?
1. வடக்கு திசை 2. தெற்குதிசை 3. மேற்குதிசை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21) சற்சதுரமாக அமைந்துள்ள காணியின் நீளம் 18m ஆகும். அதன் அளவில் 3mக்கு 3m அளவு இடைவெளியில் தூண் கட்டுவேலி அமைத்தால் அவ்வாறு அமைக்கத் தேவைப்படும் தூண்களின் எண்ணிக்கை எத்தனை?

1. 20 2. 26 3. 24

22) 

எனின்,  இன் நிறை யாது?

1.400g 2. 250g 3. 250g

23) 800 இன் அரைவாசியின் 1/5 பங்குடன் 12ஐ கூட்டினால் என்ன பெறுமானம் கிடைக்கும்?

1. 112 2. 27 3. 92

24) ஓரிடத்திலுள்ள குருவிகள் 10 இனதும், முயல்கள் சிலவற்றினதும் கால்களின் எண்ணிக்கை 40 ஆகும் எனின், அங்கு உள்ள முயல்களின் எண்ணிக்கை யாது?

1. 5 2. 10 3. 20

25) இலங்கை நேரம் இங்கிலாந்து நேரத்திலும் விட 5மணி 30 நிமிடங்கள் கூடுதலானதாகும். எனின், இங்கிலாந்தில் இரவு 9.00 மணி எனின், இலங்கை நேரமாவது,

1. அன்று பி.ப 3.30 2. அடுத்தநாள் மு.ப 1.30 3. அடுத்தநாள் மு.ப 2.30

26) ஒரே வேகத்தில் பயணம் செய்யும் 6பேர், 36km தூரம் பயணம் செய்ய எடுக்கும் நேரம் 6 மணித்தியாலங்களாகும். அதன்படி ஒரு மனிதன் 30நிமிடங்கள் பயணம் செய்த தூரம்,

1. 3km 2. 10km 3. 20km

★ **பின்வரும் தரவுகளின் அடிப்படையில் 27, 28ஆம் வினாக்களுக்கான விடையைத் தெரிவு செய்க.**

| | |
|---|---|
| கிழங்கு 1kg + வெங்காயம் 2kg<br>ரூபா 264.00 | பருப்பு 3kg + அரிசி 2kg<br>ரூபா 482.00 |

27) மேற்குறிப்பிட்டதன்படி பருப்பு 1kg 500g மற்றும் அரிசி 1kg இன் விலை யாது?

1. ரூபா. 241.00 2. ரூபா. 440.00 3. ரூபா. 124.00

28) கிழங்கு 500g மற்றும் வெங்காயம் 1kg இன் விலை யாது?

1. ரூபா. 132.00 2. ரூபா. 213.00 3. ரூபா. 321.00

★ **கீழ்உள்ள பந்தியில் உள்ள இடைவெளிகளுக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.**

சூரியன் உதிக்கும்போது **(29)** ................... (வெப்பம்/ வெளிச்சம்) கிடைத்தது. காற்று வீசியதால் உடலிற்கு **(30)** ................... (குளிர்ச்சி / வலி )ஏற்பட்டது.

31) புராதன பொருட்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள இடம்,

1. நூல்நிலையம் 2. அருங்காட்சியகம் 3. காட்சிமண்டபம்

32) தோட்டத்தில் விவசாயி 2/3 பகுதியளவில் தேயிலை பயிரிட்டார். அவன் அவ்வாறு தேயிலை பயிரிட்ட அளவு 32 ஏக்கர் எனின், அவன் பயிரிடப்படாத தோட்டத்தின் அளவு ஏக்கரில் யாது?

1. 16 2. 32 3. 48

33) தேசினி ஒரு போட்டோவைப் பார்த்து இவ்வாறு கூறினாள். இங்கு இருக்கும் பெண்ணின் தந்தை, எனது தந்தையின் தந்தையார். அவ்வாறு எனின், போட்டோவிலிருந்தபெண்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருக்கு என்ன முறை?
1. அத்தை 2. பெரியம்மா 3. பாட்டி


34) பிழையான வாக்கியத்தைத் தெரிவு செய்க.
1. இலங்கை ஒரு தீவாகும். 2. இலங்கை இந்துசமுத்திரத்திலுள்ளது.
3. இலங்கை ஒரு தீபகற்பமாகும்

35) வாகனம் ஒன்று மணித்தியாலத்தில் 78km வேகத்தில் செல்கிறது. அது 195km தூரத்தைக் கடக்க எடுக்கும் நேரம்,
1. 1மணி 30 நிமிடம் 2. 2 மணி 30 நிமிடம் 3. 2 மணித்தியாலம்

36) சமாதானம் என்னும் வார்த்தையில் உள்ள எழுத்துகள் உள்ளடங்காத சொல் எது?
1. அவதானம் 2. அவதாரம் 3. அதிகாரி

37) நீலம், சிவப்பு, மஞ்சள், பச்சை என சமஎண்ணிக்கையான 12 நிறப்பேனாக்கள் பெட்டியில் போடப்பட்டுள்ளன. எழுமாறாக நீல நிறப்பேனாவை எடுக்க வேண்டுமாயின், அவ்வாறு எடுக்க தேவைப்படும் தடவைகள் எத்தனை?
1. 8 2. 9 3. 10

★ **கீழே காட்டப்பட்டுள்ள படத்தை அவதானித்து கீழ்வரும் வினாக்களுக்கான சரியான விடையைத் தெரிவு செய்க.**




38) தமிழை மட்டும் விரும்புபவர் யார்?
1. மதி 2. கவின் 3. அபி

39) எல்லாப் பாடங்களிலும் விருப்பமுடையவர் யார்?
1. கேம் 2. அபி 3. கவின்

40) சுற்றாடல் மற்றும் கணிதத்தை மட்டும் விரும்புபவர் யார்?
1. மதி 2. அவின் 3. கவின்

---

## வினாத்தாள் II

01) **பின்வரும் பந்தியை வாசித்து கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.**

தரங்க, நிசாம், மகேந்திரன் என்னும் மூவரும் ஐந்தாம் தரத்தில் கல்வி பயில்கின்றனர். ''அரலிய உயன'' என்னும் அடுக்கு குடியிருப்பில் மூன்றாம் மாடியில் மகேந்திரனும், நிசாமும் வசிக்கின்றனர். அடித்தளத்தில் தரங்கவின் வீடு காணப்படுகின்றது. தரங்கவின் இளைய சகோதரியான சுனேத்திரா நான்காம் தரத்தில் கல்வி பயில்கின்றார்.

1. இப்பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஆண்பால் ஒருமைப் பெயர்கள் இரண்டு எழுதுக.

........................................................ ........................................................

2. இடப்பெயர்ச்சொல் ஒன்று எழுதுக.

..........................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பெண்பால் ஒருமைப் பெயர்ச்சொல் ஒன்று எழுதுக. ........................................

4. நிகழ்காலம் ஒருமை வினைச்சொல் ஒன்று எழுதுக. ........................................

5. அடுக்கு மாடிக்குடியிருப்பின் பெயர் என்ன? ........................................

**02) ஒத்த கருத்துள்ள சொற்களை எழுதுக.**

1. தாமரை : ................................ 2. விடை : ................................

**03) எதிர்க்கருத்துள்ள சொற்களை எழுதுக.**

1. சந்தோசம் : ........................... 2. சமாதானம் : ...........................

**04) கீழ்வரும் வாக்கியங்களிற்குப் பொருத்தமான தனிச் சொல்லினை எழுதுக.**

1. தன்னைப்பற்றி மட்டும் சிந்தித்து செயல் புரிபவர் : ............................
2. பழைய பொருட்களைச் சேகரித்து பாதுகாக்குமிடம் : ............................
3. கணவனை இழந்த பெண் : ............................
4. தாய் நாட்டினை நேசிப்பவன் : ............................

Public Library Jaffna

**05) அடைப்புக்குள் இருந்து சரியான சொல்லைத் தெரிந்து எழுதுக.**

1. மகியங்கனையில் தேன்விதைகளில் தேன் ........................
(நிறைந்துள்ளது / நிறைந்துள்ளன)

2. உண்மையில் புத்தகம் வாசிப்பதால் அறிவு ........................(கிடைக்கும் / கிடைத்தது)

**06) பின்வருவனவற்றின் விரிவாக்கத்தை எழுதுக.**

1. இ.போ.ச : ..................................................................

2. க.பொ.த : ..................................................................

**07) பின்வரும் வாக்கியங்களை எழுத்துப் பிழையின்றி எழுதுக.**

1. நாங்கள் தண்ணியிலை தோணி மிதக்க விட்டம்.

..................................................................

2. நாங்கள் பள்ளிக்கூட தோட்டத்திலை நடந்தம்.

..................................................................


**08) கீழ்வரும் ஆங்கிலச் சொற்களின் பொருளை தமிழில் எழுதுக.**

1. Come here ..................................................................

2. Show ..................................................................

**09) படங்களுக்குப் பொருத்தமான சொற்களை ஆங்கிலத்தில் எழுதுக.**

1. 2. 3. 4.




.................. .................. .................. ..................




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10) **இவற்றின் கருத்தை சிங்களத்தில் எழுதுக.**

1. தேநீர் அருந்துங்கள் : ..............................................................................

2. மீண்டும் வாருங்கள் : ..............................................................................

**கொலன்னாவ ஆரம்ப பாடசாலை 5ஆம் தர வகுப்பு மாணவர்களின் ஒரு வாரத்திற்கான வரைபு கீழ்வருமாறு.**




11) செவ்வாய் மற்றும் புதன்கிழமைகளில் வந்த மாணவர்களின் தொகை யாது?

............................................

12) வகுப்பில் உள்ள முழு மாணவர்களின் எண்ணிக்கை 45 ஆகும். வெள்ளிக்கிழமை 15 மாணவர்கள் வகுப்பிற்கு சமுகமளிக்காது விட்டால், அன்று சமுகமளித்த மாணவர்களின்தொகையினை வரைபடத்தில் வரைந்து காட்டுக.

13) செவ்வாய்க்கிழமை வந்த மாணவர்களிற்கு ஒருவரிற்கு 6 பிஸ்கட் வீதம் பிஸ்கட் வழங்கினால் வழங்கப்பட்ட பிஸ்கட்டுக்களின் எண்ணிக்கை யாது?

...................................


14) உண்டியலில் 10 ரூபா நாணயங்கள் 18உம், 5ரூபா நாணயங்கள் 67 உம், 2ரூபா நாணயங்கள் 57உம் காணப்பட்டால் நாணயங்களின் மொத்த பெறுமதி எவ்வளவு?

...........................................

15) 11/2kg தேயிலையில் 125g பக்கற்றுகள் வீதம் எத்தனை பக்கற்றுகள் தயாரிக்க முடியும்?

...........................................

16) தரப்பட்டுள்ள உருவிலுள்ள சிறிய பெட்டிகளின் நீளம் மற்றும் அகலம் 2cm எனின், நிறந்தீட்டப்பட்ட பகுதியின் சுற்றளவைக்காண்க.



............................................

17) ரூபா 378.00 பெறுமதியான பென்சில்பெட்டி ஒன்றைக் கொள்வனவு செய்துவிட்டு ரூபா 500.00ஐக் கொடுத்தால், கிடைக்கும் மிகுதிப்பணம் எவ்வளவு?

...........................................

18) இங்கிலாந்து நேரம் இலங்கை நேரத்திலும் விட 5மணி 30 நிமிடங்கள் குறை வானதாகும் எனின், இங்கிலாந்து நேரம் காலை 6.00 மணி ஆயின் இலங்கை நேரம் யாது?

...........................................

19) சிறிய பஸ் ஒன்றில் 28 ஆசனங்கள் உள்ளன. அவ்வாறான பெரிய பஸ் ஒன்றில் சிறிய பஸ்களிலுள்ள ஆசனங்களின் இரண்டு மடங்கிற்கு 4 ஆசனங்கள் குறைவாக உள்ளன எனின், பெரிய பஸ்ஸில் உள்ள ஆசனங்களின் எண்ணிக்கை யாது?

...........................................

20) சரத் ரூபா 3.00படி 1500 முட்டைகளை வாங்கி கடையில் ரூபா 4.00படி விற்றான். விற்ற முட்டைகளினால் பெற்றுக்கொண்ட இலாபம் எவ்வளவு?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

.............................................

**21)** கமக்காரன் திங்கட்கிழமை 5075 முட்டைகளை விற்றதோடு செவ்வாய்க்கிழமை 305 முட்டைகளை கூடுதலாக விற்றான் எனின், இரண்டு நாட்களும் அவன் விற்ற முட்டைகளின் எண்ணிக்கை யாது?

.............................................

**22)** 2016 ஜனவரி முதலாம் திகதி திங்கட்கிழமை எனின், 2017 ஜனவரி முதலாம் திகதி என்ன கிழமையாகும்?

.............................................

**23)** பெரிய கூடையில் 45பூக்களும், சிறிய கூடையில் 55 பூக்களும் உள்ளன. இரண்டு கூடைகளிலுள்ள பூக்களை சமஅளவு ஆக்கவேண்டுமாயின், பெரிய கூடையிலிருந்து எடுத்து சிறிய கூடைக்குள் போடவேண்டிய பூக்களின் எண்ணிக்கை யாது?

.............................................

**24)** **கீழ்வரும் விலைப்பட்டியலை அவதானித்து கேட்கப்படும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

| பொருள் | அளவு | விலை |
|---|---|---|
| சீனி | 1kg | 50. 00 |
| தேயிலை | 100g | 40. 00 |
| பருப்பு | 1kg | 80. 00 |
| கிழங்கு | 500kg | 60. 00 |
| தேங்காய் எண்ணெய் | 1l | 160. 00 |

1. 250g சீனியின் விலை யாது?.................................

2. தானத்துக்காக 4kg பருப்பு வாங்கினால் ஏற்படும் செலவு எவ்வளவு?

.................................

3. 1kg கிழங்கும் 4l தேங்காய் எண்ணெயும் வாங்கினால், மொத்த செலவு யாது?

.................................

**25)** இரண்டு ரயில்கள் ஒரே இடத்திலிருந்து புறப்பட்டு எதிர்த்திசைகளில் பயணம் செய்தன. ஒரே நேரத்தில் புறப்பட்ட இரண்டு ரயில்களும் மணிக்கு 50km வேகத்தில் பயணம் செய்தன. இரண்டு மணித்தியாலங்களின் பின் இரண்டு ரயில்களும் தரித்து நின்றன. தற்போது இரண்டு ரயில்களிற்குமிடையிலான தூரம் எவ்வளவு?

.................................

**26)** மணிக்கு 60km வேகத்தில் செல்லும் மோட்டார் வாகனம் ஒன்று 45 நிமிடங்களில் சென்றடையும் தூரம் எவ்வளவு?

.................................

**27)** ஒருவனுக்கு ஒரு வேலையைச் செய்ய 3 நாட்கள் தேவைப்பட்டது. அவ்வாறான ஒரு வேலையை 3பேர்கள் செய்ய எத்தனை நாட்கள் தேவை?

.................................

**28)** மு.ப 9.45க்கு ஆரம்பமாக வேண்டிய நாடகம் 1மணி 40 நிமிடங்கள் தாமதமாக ஆரம்பமானது ஆயின் அது ஆரம்பமான நேரம் யாது?

.................................

★ **சரியான விடையின் கீழ்க் கிறிடுக.**

**29)** பொது வாகனம் அல்லாதது?
1. பஸ் 2. படகு 3. விமானம் 4. மோட்டார் சைக்கிள்

**30)** விவசாயியின் நண்பன் எனக் கூறக்கூடியது?
1. மண்புழு 2. நத்தை 3. மயிர்கொட்டி 4. முயல்

**31)** நுளம்பு கடிப்பதைத் தவிர்த்துக்கொள்வதற்காகப் பூசப்படும் எண்ணெய்,
1. தேங்காய்எண்ணெய் 2. நல்லெண்ணெய்
3. புல்லெண்ணெய் 4. மண்ணெண்ணெய்

**32)** பூக்களில் மகரந்தச் சேர்க்கையை ஏற்படுத்த ஏதுவான உயிரினம்?
1. குழவி 2. இலையான் 3. கரப்பொத்தான் 4. வண்ணத்துப்பூச்சி

**33)** மரப்பலகை மற்றும் சருகுகள் என்பன உக்குவதற்குக் காரணமான உயிரினம் பின்வருவனவற்றுள் எது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. முதலை 2. அரணை 3. கறையான் 4. மண்புழு

**34)** எருதுகளின் மூலம் நாம் பெற்றுக்கொள்ளக்கூடிய மிக முக்கியமான பயன் எது?
1. சவாரி செய்தல் 2. சூடு மிதித்தல்
3. ஏர் உழுதல் 4. பால் கறத்தல்

**35)** வயல்களில் சேதத்தை ஏற்படுத்தும் கிருமிகளை அழிக்கும் உயிரினம்,
1. நீர்க்காகம் 2. பன்றி 3. கானான்கோழி 4. ஆந்தை

**36)** மண் செழிப்பாவதற்கு உதவும் உயிரினம் எது?
1. உடும்பு 2. முதலை 3. மண்புழு 4. ஓணான்

**37)** இலங்கைக்கு வடக்கே அமைந்திருப்பது,
1. தாய்லாந்து 2. ஆபிரிக்கநாடுகள் 3. இந்தியா 4. மலேசியா

**38)** இலங்கை அமைந்துள்ள கண்டமாவது,
1. ஆபிரிக்கா 2. ஐரோப்பா 3. ஆசியா 4. அவுஸ்ரேலியா

**39)** இலங்கைக்கு அண்மையில் அமைந்துள்ள நாடு,
1. நேபாளம் 2. பிரித்தானியா 3. இந்தியா 4. பாகிஸ்தான்

**40)** தாவரத்தண்டு இல்லாத கொடிவகை யாது?
1. கொடித்தோடை 2. பாகல் 3. பாக்கு 4. குறிஞ்சா

**41)** வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதன் பின்னர் அப்பிரதேசத்து மக்கள் முதலில் முகங் கொடுக்கும் பிரச்சினையானது,
1. வீடுகள் அழிந்து போனமை 2. ஆகாரம், நீர் என்பன இல்லாது போனமை.
3. போக்குவரத்து வாகனங்கள் இல்லாது போனமை
4. உடை, உறையுள் இல்லாது போனமை.

**42)** ''தாவரங்களை வளர்ப்போம் வறட்சியைத் தவிர்ப்போம்'' என்னும் தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் எழுவாய், பயனிலை தொடர்பு இருப்பதோடு ஐந்து சொற்களுக்கு குறையாமல் அமைய வேண்டும்.

1. ........................................................................................................................

2. ........................................................................................................................

3. ........................................................................................................................

**பெற்ற புள்ளிகள்** [ ]

.................................... ....................................
**மேற்பார்வையாளர் ஒப்பம்** **பொறுப்பாசிரியர் ஒப்பம்**

**குறிப்பு : இப் பரீட்சைத் தொடரில் கூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்களின் பெயர் விபரங்களும் இவ் வினாத்தாளின் புள்ளியிடல் திட்டமும் அடுத்த சஞ்சிகையில் வெளிவரும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்த்தினப் போட்டியில் கட்டுரை வரைதல், இலக்கிய நயத்தல் போட்டியில் வலயமட்டத்தில் இரண்டாம் இடத்தினைப் பெற்றுள்ளார். கவிதை எழுதும் திறனும் ஸ்ரீரம்மியாவிடம் அதிகமாகவே உள்ளது.

நீங்கள் உங்கள் பாடசாலையின் கல்வி அமைச்சராக பொறுப்பேற்ற பின் எவ்வாறான கல்வி முன்னேற்றத்திட்டங்களை முன்னெடுத்துள்ளீர்கள் எனக் கேட்ட போது, கல்வி நிலையில் பின் தங்கிய மாணவர்களை இனங்கண்டு மாணவ தலைவர்கள் ஒழுங்கின் அடிப்படையில் கிடைக்கின்ற அனைத்து நேரங்களிலும் அவர்களிற்கு கற்பிப்பதுடன் பாடசாலை நிறைவடைந்த பின்னரும் குறிப்பிட்ட நேரம் ஆசிரியர்களின் வழிகாட்டலுடன் கற்பித்தலை முன்னெடுக்கின்றோம். இது தவிர அறிவு பூர்வமான தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை பார்க்குமாறு பரிந்துரைப்பதுடன் அவை பற்றி ஒன்று கூடி உரையாடுவதையும் விவாதிப்பதையும் வழக்கமாக்கியுள்ளோம்.

இறுதியாக உங்களைப்போன்ற மாணவர்களுக்கு என்ன கூற விரும்புகின்றீர்கள், எனக்கேட்ட போது, எமது கிராமத்தைப் பொறுத்தவரை எமது பாடசாலையில் ஆரம்ப பிரிவு கற்று புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்ததும் தமிழ் மொழி மூலம் கற்பவர்கள் கூட நகர்ப்புறப் பாடசாலைகளுக்குச் சென்றுவிடுகின்றனர். எமது கிராமத்தில் உள்ளவர்கள் எம்மைக் கடந்து செல்லும் போது மனம் கனக்கிறது. எமது பாடசாலையின் மொத்த மாணவர் தொகை குறைவாக இருக்கும் போது இவர்களைப் போன்ற மாணவர்கள் இங்கேயே கற்றால் நிச்சயம் எமது பாடசாலையையும் முதல் தர பாடசாலையாக மாற்றமுடியும், இவ்விடயத்தில் பெற்றோர்கள் ஒண்றிணைந்தால் எமது கிராமத்தை முன்னேற்ற முடியும் என்பது எனது தாழ்மையான கருத்து என்றார் ஆதங்கத்துடனேயே.

கவிதை எழுதுவதில் விருப்பு கொண்டு விளங்கும் ஸ்ரீரம்மியா போட்டி ஒன்றிற்காக எழுதி வெற்றி பெற்ற கவிதை ஒன்றினை இங்கே பிரசுரிக்கின்றோம்.

# என்னாலும் முடியும்

காரணம் தெரியாமல் பிறந்துவிட்டேன் ஆனால்
அதுபோல இறக்க மனமில்லை.
கடலளவு சுமைகள் என்னுள்ளே இருப்பினும்
அதை கடுகளவாக்கி சுகம் காண்பேன்.
சவால்களால் என்றுமே சாகடிக்கப்படாதவளாய்
சகதியில் வீழ்ந்து தோற்காதவளாய்
சிந்தனைச் சிறகினை விரித்துமே
சீரிய உலகினை அமைத்திடுவேனே.
எல்லாமே பறிபோன பின்னரும்
நெப்போலியன் போல
என் நம்பிக்கை மட்டும் போகவில்லை.
உறுதியாகச் சொல்கிறேன், என்னாலும் முடியும்.
அகிலத்தை ஆண்ட அறிஞர்கள் வரிசையில்
என் பெயரையும் சேர்க்க என்னாலும் முடியும்.
ஒவ்வொரு நாளும் மட்டுமல்ல,
ஒவ்வொரு கணமும்
என் இலக்கு பற்றியே சிந்திக்கின்றேன்.
என் முயற்சியை வாய்சொல்ல மறந்தாலும்
மனம் சொல்ல மறக்காது.
என்னுடைய நோக்கம் நல்லதாக உள்ளது.
என்னுடைய முயற்சி தொடர்ச்சியாக உள்ளது.
என் முயற்சிகள் தவறலாம், ஆனால்
நான் முயற்சிக்கத்தவறவில்லை.
என்னிடம் பயமில்லை, பலவீனமில்லை,
திறமை உள்ளது, மனதில் திடமும் உள்ளது,
வாய்ப்புக்களை வரவழைத்து வாகை சூடுவேன்.
வளமான எதிர்காலம் எனக்கும் என்பேன்.
செய்யமுடிந்தவன் சாதிக்கின்றான்,
செய்ய முடியாதவன் போதிக்கின்றான்.
தளர்ச்சியில்லா பயிற்சியும் ஒரு முயற்சியே.
அது நம் வாழ்வின் உயர்ச்சியே.
சகோதரர்களே!
சவால்களிடம் தோற்பவராக அல்லாமல்
சவால்களை தோற்கடிப்பவராக உருமாறுங்கள்.
மீண்டும் சொல்கிறேன்,
எதையும் வெல்ல என்னால் முடியும்.
அதனால் நான் அழவும் மாட்டேன்.
என்னை அழிக்கவும் மாட்டேன்.

பண்போடு கல்வியும் பாங்குடன் கொண்ட இம்மாணவி வெற்றிகள் கோடி பெறவேண்டும் என வாழ்த்தி விடைபெற்றோம்.

கோபிகை

மகளிர் தின வாழ்த்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைகளின் கல்வியில் பெற்றோரின் வகிபாகம்



வீ.என்.சந்திரகாந்தி

பிள்ளைகளின் கல்வி உயர்சிக்கு அதிகளவு பங்களிப்பை வழங்குபவர்கள் பெற்றோர்களா? ஆசிரியர்களா? என்ற தலைப்பில் அண்மையில் ஆய்வரங்கு ஒன்று நடைபெற்றது. உண்மையில் இந்த தலைப்பே விதண்டாவாதமானது. அதில் பங்குபற்றியோரை எந்த வகையிலும் குறை சொல்ல இயலாது. அவர்கள் தத்தம் வாதத்திறமையை வெளிப்படுத்துவதற்கு அந்த ஆய்வரங்கை பயன்படுத்திக் கொண்டனர். மற்றும்படி இரு சாராரது பங்களிப்புமே எந்த ஏற்ற இறக்கமுமின்றி முக்கிய மானதுதான்!

ஒரு பிள்ளை பிறந்தது முதல் அதன் வளர்ச்சி, உடலாரோக்கியம், புரிதல், அன்பு செலுத்துதல், ஒத்துப்போதல், நல்லபழக்கவழக்கம், கல்வி அனைத்துக்கும் அத்திவாரமாக அமைபவர்கள் பெற்றோரே..

ஒரு குழந்தை தைரியசாலியாக விடயங்களை நன்கு கிரகிக்கக்கூடிய மூளை வளர்ச்சியுடன் மற்றவர்களுடன் சுமூகமாக பழகினாலே வாழ்க்கையின் சிகரத்தையே தொட்டுவிட அதனால் முடியும்.

நல்ல கல்வி அறிவுள்ள, பரஸ்பரம் நல்ல உறவுள்ள பெற்றோர்களால் தமது பிள்ளைகளுக்கு அதிகளவு பங்களிப்பை செய்ய முடியும். அவர்களால்தான் ஒரு பிள்ளையின் தடங்கலற்ற கல்விக்கு வீட்டில் தகுந்த சூழ்நிலையை ஏற்படுத்திக்கொடுக்க முடியும்;.

இந் நாட்களில் வீட்டில் தொலைக்காட்சி, வானொலி போன்ற கருவிகள் வீட்டின் அமைதியை மட்டும் பாதிப்பது மட்டுமன்றி குழந்தைகளின் கல்விக்கு பெரும் பாதிப்பை உண்டு பண்ணுகின்றன. ஒரு குழந்தை மாலையில் சிறிது நேரம் விளையாடியபின் அதன் படிப்புக்கான நேரம் 6.00 மணி முதல் 9.00மணி வரையாக இருக்கின்றது. அந்த நேரத்தில்தான் அதிகமான சின்னத்திரை நாடகங்கள் ஒளிபரப்பப்படுகின்றன. நல்ல பெற்றோர் தமது பிள்ளைகளின் கல்விக்காக அவற்றை பார்ப்பதை தவிர்த்து விடுகிறார்கள்.

கணவன் மனைவி இருவருமே காரியாலயத்திலிருந்து களைத்து வீடு திரும்பியிருப்பர். வீட்டிலும் பல வேலைகள் பூர்த்தி செய்யப்படவேண்டி இருக்கும். நல்ல பெற்றோர் தம்மில் ஒருவர் பிள்ளைகளின் கல்விக்கு துணைபுரிய மற்றவர் வீட்டு வேலைகளை கவனிப்பர்.

பாடசாலையில் கட்டாயமாக பிள்ளைகளுக்கு வீட்டு வேலை கொடுத்திருப்பர். அதற்கு காரணம் மாணவன் வீட்டில் சும்மாதானே இருக்கப்போகின்றான்; அந் நேரம் பாடங்களை நினைவுகூரட்டும் என்ற நோக்கம் மட்டுமல்ல. உண்மையில் ஆசிரியர்கள் பெற்றோருக்கு வைக்கும் ஒரு செக் தான் அது. மறுநாள் மாணவன் வீட்டுப்பாடத்தை பூர்த்தி செய்து கொண்டு போனால் அவனது பெற்றோருக்கு பிள்ளையில் அக்கறை உண்டு. நாம் ஒரு சின்ன புஷ் (Push) கொடுத்தால் போதும் அவன் முதலாம் தர மாணவனாக சாதனைகள் பல புரிவான் என்பதை புரிந்து கொள்வர்.



ஒரு மாணவன் சரியான நேரத்திற்கு பாடசாலைக்கு சமூகமளித்தல், தூய்மையான சீருடைகளை அணிந்து வருதல், உரிய நேரத்தில் சிகை அலங்காரத்தை செய்திருத்தல் எல்லாவற்றுக்கும் பொறுப்புக்கூற வேண்டியவர்கள் நல்ல பெற்றோர்களே. அப்படியான விடயங்களில் ஒரு மாணவனின் பெற்றோர் எப்படி நடந்து கொள்கிறார்கள் என்பதை ஆசிரியர்கள் கவனிக்கிறார்கள்.

பல சந்தர்ப்பங்களில் வகுப்பாசிரியர்கள் மாணவர்களின் பெற்றோரை கலந்துரையாடல்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ளுக்கு அழைப்பர். ஒவ்வொரு மாணவனினதும் பலம், பலவீனம் பற்றி பெற்றோருக்கு எடுத்து ரைப்பர். அப்படியான கலந்துரையாடல்களில் நல்ல பெற்றோர் கட்டாயமாக கலந்து கொள் வதுடன் ஆசிரியரின் அறிவுரைகளுக்கு செவிம டுத்து தமது பிள்ளையை நெறிப்படுத்துவர்.

சில சமயங்களில் நீண்ட நாட்களுக்கு கலந்து ரையாடல்களுக்கு அழைப்பு விடுக்கப்படாமல் இருக்கலாம். அதற்கு காரணம் ஆசிரியர்களின் வேலைப்பளு என்று கொள்ளல் வேண்டும். அந் நாட்களில் தமது பிள்ளையின் நிலைபற்றி தாமே முன் சென்று விசாரிக்கும் பெற்றோர் மேல் ஆசி ரியருக்கு நன்மதிப்பு உண்டாகும். அப்படிப் பட்ட பெற்றோரின் பிள்ளைகளுக்கும் ஆசிரியர் களுக்குமிடையே நல்ல பிணைப்பு உண்டாகும்.

சில பிள்ளைகளின் கையெழுத்து மிகவும் மோசமாக இருக்கும். அதற்கு காரணம் பெற் றோரின் கையெழுத்தை அப் பிள்ளை பின்பற் றுவதாக இருக்கலாம். பெற்றோர் தமது கையெ ழுத்தை முதலிலேயே திருத்திக் கொள்ளல் வேண்டும்.

அது தவிர சில ஆசிரியர்களின் கையெழுத் துக்கூட எதிர்பார்க்கும் மட்டத்திற்கு இருக்காது.

அதனால் தான் உறுப்பெழுத்துக் கொப்பி பயன்படுத்தப்படுகின்றது. சரியான முறை யில் அதில் பயிற்சி செய்தால் மாணவன் நல்ல கையெழுத்தை உடையவனாக மாறலாம். ஒரு மாணவன் தனது திறமையை வெளிப்படுத்து வதற்கு இரு வித பரீட்சைகள் உண்டு. ஒன்று வாய்மொழிப்பரீட்சை, மற்றையது எழுத்து மூலப்பரீட்சை. எழுத்து மூலப்பரீட்சை மிகவும் முக்கியமானது. பரீட்சைத்தாள்களை திருத்தும் ஆசிரியர்கள் தடங்களின்றி வாசிக்கக் கூடியதாக கையெழுத்து இருத்தல் வேண்டும்.

வீட்டில் உள்ள ஒவ்வொரு பிள்ளைக்கும் ஒவ்வொரு மேசை கதிரை அவர்களது உயரத் துக்கு தகுந்தபடி இருத்தல் கட்டாயம். புத்த கங்கள் ஒழுங்காக அடுக்கி வைக்கப்பட்டிருக்க வேண்டும். புத்தகங்கள் எங்கெங்கு அடுக்கி வைக்கப்பட்டுள்ளனவோ அங்கு அவைசார்ந்த அப்பியாசப் புத்தகங்களும் ஒன்று சேர இருக்க வேண்டும்.

அதிக பிள்ளைகள் உள்ள வீட்டில் ஒருவரு டன் ஒருவர் சிநேக உணர்வுடன் பழகுமாறும் ஒருவரது கல்விக்கு மற்றவர் உதவுமாறும் பெற் றோர் பார்த்துக் கொள்ளல் வேண்டும்.

பிள்ளைகள் மேல் வகுப்புக்கு வர வர அவர் களது சந்தேகங்களை தீர்ப்பதென்பது இலகுவா னதாக இருக்காது.

அதற்காகவே இப்போது திறமைவாய்ந்த ஆசிரியர்கள் தனியார் வகுப்புக்களை (Tuition) ஆரம்பித்து நடாத்துகிறார்கள்.

தனியார் வகுப்புக்கள் பற்றி பாடசாலை ஆசி ரியர்களுக்கு நல்ல அபிப்பிராயம் இல்லாவிட் டாலும் கூட பல வகுப்பாசிரியர் கள் தமது வகுப்பு மாணவர்களை தமது தனியார் வகுப்புக்கு வரு மாறு கேட்டுக்கொள்கிறார்கள். பல கருத்து வேற்றுமைகளுக்கு மத்தியிலும் தனியார் வகுப்புக்கள் பல சாதனைகளை நிலை நாட்டுவதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்! பாடசாலை ஆசிரியர்களது கற்பித்தல் திறமைக்கு அப்பாலும் பெற்றோரின் வழிகாட்டலுக்கு அப் பாலும் தனியார் வகுப்புக்கள், பல்வேறு தரா தரங்களிலுமுள்ள மாணவர்களை முதன்னை நிலைக்கு கொண்டு வந்து விடுவார்கள்.

எனவே பெற்றோர் தனியார் வகுப்புக்க ளுக்கு தமது பிள்ளைகளை அனுப்புவதற்கு தகுந்த காரணம் உண்டென்றே கொள்ள வேண் டும். இரண்டு மணிக்கு பாடசாலை முடிந்து ஆறு மணிவரையும், மற்றும் சனி, ஞாயிறு விடுமுறை தினங்களிலும் தமது பிள்ளைகள் அநாவசியமான நடவடிக்கைகளில் ஈடுபடுவ தைத் தவிர்த்து அவர்களை முன்னேற்றப்பா தைக்கு இட்டுச்செல்வதற்கு தனியார் வகுப் புக்கள் உதவியாக உள்ளன. அத்துடன் அங்கு பல பயிற்சி வகுப்புக்களும், மீட்டல் வகுப் புக்களும், பரீட்சை வழிகாட்டல்களும் நடை பெறுகின்றன. அவற்றுக்கும் மேலாக பல பாட சாலை மாணவர்களும் அங்கு ஒன்றிணைவதால் பாடங்கள் சார்ந்த கருத்து பரிமாற்றங்களுக்கு அது பெரிதும் உதவியாக உள்ளது.

அத்துடன் பெற்றோர், ஒவ்வொரு பாடத் திலும் நிபுணத்துவம் பெற்ற ஆசிரியர்களை தமக்கு அறிமுகம் செய்து கொண்டு தமது பிள் ளைகள் அப் பாடங்களில் எவ்விதம் உயர்ச்சிய டையலாம் என்பதை விவாதிக்க முடியும்.

வெறுமனே சிறிய அரச தொழில் ஒன்றில் குறைந்த சம்பளத்தில் பணிபுரிந்து கொண்டி ருந்த ஒருவர் எனக்கு ஓரளவு நண்பராக இருந் தார். அவர் தனது வீட்டு விஷேசங்களுக்கு தனது உறவினர்கள், நண்பர்கள் எவரையும் அழைக்க மாட்டார்.

ஆனால் அவரது மூன்று பிள்ளைகளின் பாடசாலை ஆசிரியர்களையும் அதிபர்களையும் தனியார் வகுப்பு ஆசிரியர்களையும் தவறாது அழைப்பதுடன் விழாவையும் பெரும் எடுப்பில் நடாத்துவார். அது போன்று அடுத்த வளமாக அவர்களது வீட்டு வைபவங்களுக்கு குடும்ப சமேதராக சென்று விழாவில் முன்னின்று கலந்து கொள்வார். அவரது மூன்று பிள்ளைகளுமே ஒரே தடவையில் கம்பஸ் அனுமதி பெற்று மருத்துவ கற்கையையும் பொறியியற் கற்கை யையும் பூர்த்தி செய்தனர்.

பொறுப்பு வாய்ந்த பெற்றோராக அவர்களின் வகிபாகத்தை பாருங்க ளேன்!

★★★★★★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகளிர் தின வாழ்த்து



**சிந்தனையும் தேடலுமே பல மகத்தான கருத்துக்களை, உன்னதமான உண்மைகளைப் பரிசளிக்கின்றன. அந்த வகையில் அரசியின் கருத்துக்களம் என்னும் புதிய பகுதியை மாதாந்தம் பிரசுரிக்கவுள்ளாள் ஒளி அரசி. இம்மாத கருத்துக்களத்தின் தலைப்பு அன்பெனப்படுவது யாதெனில் எல்லோரும் இன்புற்றிருக்கச்செய்தலாகும் என்பதே.**

காலம் தாமதமின்று ஓடிக்கொண்டிருக்கின்றது. உலகம் நிற்காமல் சுற்றிக்கொண்டிருக்கின்றது. மாறாத இந்த இயக்கத்திற்கு காரணம் அன்புதான் என்றால் யாராலும் மறுத்துவிடமுடியாது. அன்பு என்பது உணர்ச்சி மற்றும் மனநிலை சார்ந்த பல்வேறு வகையான உணர்வுகளையும் அனுபவத்தையும் குறிக்கிறது. பொதுவாக அன்பு வலுவாகவும், நேர்மறையான அனுபவமாகவும் இருக்கிறது.

எளிமையான மகிழ்ச்சி முதல் ஆழ்ந்த தனித்தன்மையான பாசம் வரை அன்பு பல பரிமாணங்களில் வெளிப்படுகிறது. அன்பு என்ற சொல் குறிக்கும் பொருள்களின் எல்லைகளை விளக்க வேண்டுமெனில் இவ்வெளிய எடுத்துக்காட்டை எண்ணி உணரலாம். ஒருவன் தன் தாயின் மீது கொண்ட அன்புக்கும், தன் காதலியிடம் கொண்டுள்ள அன்புக்கும், அவன் ஒரு வகையான உணவின் மீது கொண்டுள்ள அன்புக்கும் உள்ள வேறுபாடுகளைப் புரிந்து கொள்வதால் அன்பின் ஒருசில பரிமாணங்களை உணரலாம். பொதுவாக அன்பு என்பது ஒரு வலுவான ஈர்ப்பு மற்றும் தனிப்பட்ட உறவுமுறை இணைப்பின் உணர்வைக் குறிக்கிறது. இத்தகைய அன்பானது அனைவரையும் இன்புறச்செய்வதே என்னும் கருத்து பற்றிய வாசகர்களின் கருத்துக்களை இங்கே பதிவிடுகின்றோம்.

# அன்பெனும் சிறகினில்

அன்பெனப் படுவது யாது என்று கேட்டால் எல்லோரும் இன்பமாக இருக்க வழி சமைத்துக் கொடுக்க வேண்டும் என நான் நம்புகிறேன்.

நம்பிக்கையின் பேரொளியில் வியாபித்து நிற்பதே அன்பு. எந்த ஆபத்து வந்த போதும் அம்மா என்கிறோமே அது அன்பு. அம்மாவை நம்புவது அன்பு, அம்மாவில் தோன்றுவது அன்பு மானுடத்துக்கு மட்டுமன்றி முழுப் பிராபஞ்சத்தின் அழகியல் வாழ்வுக்கும் அவசரமாகத் தேவைப் படுவது அன்பென்ற மருந்தே. அது மருந்து மட்டுமல்ல நல்ல மனித சமூகத்தின் விருந்தும் கூடி தாய்ப் பசுவைக் காணாத கன்று அம்மா என்கிறது நாம் அம்மாவைக் காட்டுகிறோம்.

வீதியால் பயணிக்கும் போது நாய்க்குட்டி விபத்துக்குள்ளாகப் போகுதே என தூக்கி உதவுகிறோம். யாரோ முறித்து விட்ட மாங்கன்றை நேராக்கி தண்ணீர் பாய்ச்சுகிறோம். ஆக அன்பென்றது தனியே மனிதர்களோடு தொடர்பு பட்ட ஒன்றல்ல விலங்குகள் பறவைகள் மரம் செடி கொடி மீது கொண்ட இன்பக் கொடையும் அன்பே அன்பென்பென்ற ஒன்று இல்லை என்றால் இந்தப் பூமி எப்பவோ அழிந்திருக்கும்



**சந்தோச சங்கீதமாக அன்பிருந்தால்**
**துயரம் துரும்பெனத் துருப்பிடிக்கும்**
**இன்பம் கரும்பென இனித்திருக்கும்**

நன்றி

தவராசா செல்வா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பெனப்படுவது யாதெனில் எல்லோரும் இன்புற்றிருக்கச் செய்தலே ஆகும். மானிடப் பிறவியின் பயனே பிறர்மீது அன்பு செலுத்தி அந்த அன்பால் அவர்களை இன்புற்றிருக்கச் செய்தல் ஆகும்.

அன்பின் வறுமை அதிகரித்துவிட்டதால்தான் இன்று குற்றங்களும் அதிகரித்து விட்டது. தன்மீதே அன்பு செலுத்த இயலாத இயலாமை மனிதர்களாய் வலம் வரும் பலருக்குப் பிறர் மீது அன்பு செலுத்துவதால் கிடைக்கும் மகிழ்ச்சியை உணர முடியாமலே போய்விடுகின்றது.

பரந்துபட்ட இந்த உலகத்தில் அன்புக்காகவே அனைத்து உயிர்களும் காத்திருக்கின்றன. சிறு புன்னகைக்காக, அரவணைப்புக்காக, ஆறுதல் வார்த்தைகளுக்காகவென ஏதோவொரு வகையில் அன்புக்காகவே இந்த உலகம் காத்திருக்கின்றது.



கள்ளமில்லா அன்புக்காக ஏங்கும் பல உள்ளங்கள் இன்புறும் வண்ணம் வாழ்தலே சிறந்த வாழ்வாகும். தன்னலம் பேணும் அன்பு தவறாய்ப் போய்விடுகின்றது. பிறர்நலம் பேணும் அன்பே பிறவிப்பயன் காண்கின்றது.

பொலிகையூர் ரேகா

**''அன்பெனப்படுவது யாதெனில் எல்லோரும் இன்புற்றிருக்கச் செய்தலே ஆகும்''**

அன்பு உலகமெங்கும் ஓங்கி நிற்கும் மிகப்பெரிய ஆயுதம். அதை நாம் பயன்படுத்தும் முறையில் அதன் பலாபலன்கள் அமைந்துவிடுகிறது.

எங்கிருந்து எவ்வளவு எடுத்தாலும் குறையப்போவதில்லை. நம்மிடமிருந்து எவ்வளவைக் கொடுத்தாலும் குறையப்போவதில்லை. அத்தனை அற்புதமான செல்வம் அன்பு! தாய்ப்பாசம், தந்தை பாசம், பிள்ளைப்பாசம், காதல், நட்பு என்று இதன் வடிவங்கள் ஓராயிரம். ஒருவனுக்கு ஒருத்தி என்றும் எனக்கு நீ தான் உனக்கு நான்தான் என்றும் ஒழுக்கத்தை நமக்குள் வளர்த்ததும் இதே அன்புதான்.

நாம், நமது, நம்முடையவர்கள், நம் தேசம், நம் மண் என்று நமக்குள் பற்றை வளர்த்ததும் இதே அன்புதான். அந்தப் பற்றின் பேரால் நம் உறவுகளுக்காக, நம் மண்ணுக்காக எத்துணை துன்பங்களையும் பொறுத்து நம்மை அயராது உழைக்க வைப்பதும் இதே அன்புதான்.

நமக்குள் போராட்ட குணத்தை வளர்ப்பதும் இதே அன்புதான். நம்மை நெறிப்படுத்துவது, ஒழுங்குபடுத்துவது, இப்படித்தான் வாழவேண்டும் என்று வழிவகுத்துக் கொடுப்பது என்று அனைத்தும் இந்த அன்பினாலே நிகழ்கிறது.

பண்பாடு, கலாச்சாரம், கலை என்று நமக்காக நாம் வளர்த்துக்கொண்டவையும் இந்த அன்பின் பெயராலேயே நிகழ்ந்தது. உறவு, சுற்றம் என்று ஒரு சமூகத்தை வளர்த்ததும் இதே அன்புதான். நமக்குப் பிடித்ததை நமக்குத் பிடித்தவரிடம் சிரித்துக்கொண்டே விட்டுக்கொடுத்துவிட்டு அவரின் சந்தோசத்தில் மனம் நிறைவதும் இதே அன்புதான்.

தாய் மண் மீது கொண்ட பாசம் போராட வைக்கும். தாய் மீது கொண்ட பாசம் கடல் கடந்து சென்றும் உழைக்க வைக்கும். கட்டியவள் மீது கொண்ட அன்பு காதலை வளர்க்கும். உயிர்கள் மீது மட்டுமல்ல உயிரற்ற பொருட்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகளிர் தின வாழ்த்து

ளின் மீதுகூட பற்றை வளர்க்கும் வல்லமை வாய்ந்ததுதான் அன்பு!

அன்பெனப்படுவது எல்லோரையும் இன்புற்றிருக்க வைப்பது மட்டுமில்லை, நம்மை நாமே நேசிக்க வைப்பதும் கூட!

இதே எல்லையற்ற அன்புதான் சிறு ஏமாற்றத்தை கூட தாங்கமாட்டாமல் தவறான வழியில் போக வைத்தும் விடுகிறது. பெற்ற பிள்ளை செய்வது தவறே என்று தெரிந்தாலும் மூடி மறைக்க முயல்வதும் இதே அன்புதான். கூட இருப்பவர் செய்வது தவறென்று தெரிந்தாலும் சுட்டத் தயங்குவதும் இதே அன்புதான்.

அன்பின் பெயரால் நடக்கும் தவறுகளை அகற்றுவோம்! நாம் நம்மவர் மீது செலுத்தும் அன்பு அவர்களை நெறிப்படுத்தட்டும். நேர் வழியில் செலுத்தட்டும்!! அன்பாலான உலகில் அன்போடு இணைவோம்!!

நட்புடன் நிதனிபிரபு

அன்பு எனப்படுவது தன்மீது அளவற்ற அன்பு செலுத்துதல்,

தன் குடும்பத்தை அதிகமாக நேசித்தல்,

தான் வாழும் சூழலில் பற்று வைத்தல்,

அதற்கும் அப்பால் அயலவரை, நாளாந்த ஜீவனோபாயத்திற்காய் ஏங்குபவர்களின் துயர் துடைக்கும் கரமாக மாறி அன்பு காட்டி உதவுதல். வலியால், வேதனையால், மீள முடியாத காயங்களோடு துடிப்பவர்களுக்கு நல்ல ஔடதமாக மாறுதல். அதனூடாக அவர்களின் சந்தோசத்தில்,

அன்புப்பூரிப்பில் நாம் அடைகின்ற ஆனந்தமே வாழ்வில் அதீத சந்தோசத்தைத்தரும். இது அனைத்து ஜீவராசிகளுக்கும் பொருந்தும். அன்பினால் தோற்றவர்களும் இல்லை.பிறர் மீது அன்பு செலுத்தாதவர்கள் மகிழ்வுடன் வாழ்ந்ததாய் இதுவரை பதிவேதுமில்லை.

எனவே அன்பு பிறரை வாழவைக்கும்.

பிறரின் அன்பு நம்மை வாழவைக்கும்.....

''ஒளிஅரசி''யின்



இந்த முயற்சி வாசகர்களின் உள்ளக்கிடக்கையை வெளிக்கொண்டு வரும் ஒரு நல்ல களம். இதன்ஏற்பாட்டாளர்களுக்கு பாராட்டுக்களும், வாழ்த்துக்களும், நன்றிகளும்.

து.திலக் (கிரி) சுவிற்சர்லாந்து

அன்பெனப்படுவது யாதெனில் யாவரும் இன்புற்றிருக்கச்செய்தலே ஆகும்.இந்த உலகில் விலைமதிக்கமுடியாதது அன்பென்று சொல்லப்பட்டாலும் சரியான புரிதலின்மையினால் நிலைகொள்ளாதது அன்பென்றும் சிலர் வாதிடுவார். அன்பு மிகச்சிறந்த ஆயுதம்,மிகச்சிறந்த அழகியல்,மிகச்சிறந்த மதம்,மிகச்சிறந்த ஒழுக்கத்தின் ஒரு கூறு,மிகச்சிறந்த பொக்கிஷம் என அன்பு வியாபிக்கும் அளவுகள் மிகப்பெரியது.எதிர்பார்ப்புகள் என்றோ,பிரதிபலன் என்றோ தனக்கெதனையும் வரையறுத்துக்கொள்ளாத அன்பு உலகில் ஒருவருக்கு கிட்டுமாயின் உலகின் மிகப்பெரிய பணக்காரராக அவரிருப்பார்.அன்பில் நிகழும் மற்றுமோர் ஆச்சரியம் என்னவென்றால் அன்பு எடுக்கப்படும்போதும்,பிறருக்கு கொடுக்கப்படும்போதும் குறைவதில்லை மாறாக இரட்டிப்பாகிறது. இது உலகில் எந்த வங்கியும் தர இயலாத இலாபம்.அன்பின் வழியது உயிர்நிலை மட்டுமல்ல அதன்வழியே மானுடத்தின் உயர்நிலையும் மேலோங்கச்செய்யப்படுகிறது என்பதில் மாற்றுக்கருத்திற்கு இடமில்லை.



அன்பில் இணைவோம்.அன்பால் இணைவோம்.நன்றி.

ஆர்.ஜே.பிரகலாதன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகளிர் தின வாழ்த்து




மரத்தில் உள்ள சொற்களை
ஒழுங்குபடுத்தி அதற்குள்
ஒளிந்திருக்கும்
தத்துவத்தை தமிழ், ஆங்கிலம்
இரு மொழிகளிலும்
கண்டுபிடிக்கவும்.

## கண்டுபிடியுங்கள்...

**விடைகள் கையேட்டில்**




இரண்டு படத்திற்கும் இடையே
உள்ள 6 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'இலக்கிய வித்தகர்' விருது பெற்ற ஜுனைதா ஷெரீப் எனும் இலக்கிய ஆளுமை



மலருக்கு அதன் மணமே விளம்பரமாகும். இங்கே இந்த இலக்கிய மலரும் இலக்கிய பூங்காவிலே மணம் வீசும் வாடா. மணம் வீசும் மலர் மட்டுமல்ல இவர் இலக்கிய ஆழ்கடலிலிருந்து அகழ்ந்தெடுக்கப்பட்ட முத்து. ஆமாம். இலக்கிய முத்து எங்களின் இலக்கிய சொத்து .இத்தகைய இலக்கிய முத்துகளை ஆவணப்படுத்தும் எமது ஒளி அரசி சஞ்சிகையின் இலக்கிய முத்து பகுதிக்கு இந்த இலக்கிய முத்தை அழைத்து வந்ததில் அகமிக மகிழ்கிறோம்.

பத்திரிகைகளில் சதா இந்த பெயரைப்பார்க்கும் போதும் வானொலியில் இந்தப் பெயரைக் கேட்கும் போதும் இது ஒரு பெண் எழுத்தாளர் என்று நம்பி ஏமாந்த பலர் உளர். அதில் நானும் ஒருத்தி. நான் படிக்கும் காலத்தில் இவரது படைப்புகளை வாசித்து ஆளுமைமிக்க பெண் என நாம் பெருமைபட்டதுண்டு. வியந்ததுண்டு.

. ஆம்! ஜுனைதா ஷெரீப் எனும் புனைப்பெயரில் புகுந்து இலக்கியங்களைப் படைக்கும் கச்சி மொஹமட் மொஹமட் ஷெரீப் என்ற இலக்கிய ஆளுமையைப் பற்றியே நான் இங்கு குறிப்பிடுகிறேன்.

நிறைகுடம் தளும்பாது என்பார்கள். இங்கே தளும்பாத இலக்கிய நிறை குடம் தான் இந்த 'இலக்கிய முத்து'

ஆம்! ஜுனைதா ஷெரீப் எனும் புனைப் பெயரில் ஆக்க இலக்கியங்களைப் படைக்கும் கச்சி மொஹமட் மொஹமட் ஷெரீப் காத்தான் குடி இரண்டாம் குறிச்சியில், ஈசாலெவ்வை கச்சி மொஹமட் மற்றும் யூசுப் லெப்பை கதிஜா உம்மா ஆகியோரின் அன்பு மகனாக 1940 செப்டம்பர், 15ல் பிறந்தார். 1967ம் ஆண்டு ஜுனைதா பேகம் என்பவரை திருமணம் செய்தார்.இவரது துணைவியார் அக்கால பிரபல கவிஞர் அப்துல் காதர் லெப்பையின் பேத்தி யாவார்.

இவர்களுக்கு மூன்று புதல்வர்கள். மூத்த மகன் மொஹமட் அஸ்ஹர். வெளிநாட்டு கப்பல் ஒன்றில் பிரதான அதிகாரியாக கடமை புரிகிறார். இரண்டாவது மகன் மொஹமட் அஸ்வத் வெளிநாட்டிலிருந்து இறக்குமதியாகும் மருத்துவ உபகரண வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளார். மூன்றாவது மகன் மொஹமட் அஜ்மல் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் டாக்டராக உள்ளார்.

ஜுனைதா ஷெரீப் தனது ஆரம்பக் கல்வியை தற்போது அல் நஸார் வித்தியாலயமென பெயர் கொண்ட காத்தான்குடி முதலாம் குறிச்சி பாடசாலையில் கற்றார். காத்தான்குடி மத்திய மகா வித்தியாலயத்தில் இரண்டாம் நிலைக்கல்வியைத் தொடர்ந்தார். 1956 டிசம்பரில் நடைபெற்ற சிரேஷ்ட பாடசாலைத் தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தி பெற்றதையடுத்து 1958 மார்ச் மாதத்தில் இவருக்கு ஆசிரியர் நியமனம் கிடைத்தது. 1959 ஆரம்பத்தில் அட்டாளைச்சேனை ஆசிரிய கலாசாலையில் பயிற்சிப் பெறுவதற்காக உள்ளக பயிலுநராக அனுமதிக் கப்பட்டார். 1959 மே மாதத்தில் மட்டக்களப்புக் கச்சேரியில் தனது கடமைகளைக் கையேற்றார். மட்டக்களப்பு கச்சேரியில் பணியாற்றிய முதலாமவர் இவர்தான்.

பொது இலிகிதர் சேவையில் இலங்கையில் முதற்தடவையாக நடைபெற்ற அதி சிறப்பு வகுப்பில் ஆட்சேர்ப்பதற்கான பரீட்சையில் சித்தியடைந்ததால் அம்பாறைக் கச்சேரியில் காரியாலய உதவியாளராக பதவிநிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தியோகம் இவருக்குக் கிடைத்தது.

இலங்கை நிர்வாக சேவைப் பரீட்சையில் சித்தியடைந்து அட்டாளைச்சேனையில் 1975ம் வருடம் பிரிவு காரியாலயதிகாரியாக நியமனம் பெற்றார். கிழக்கிலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட முஸ்லிம்களுள் முதன்முதலாக இலங்கை நிர்வாக சேவைக்கு உள்வாங்கப்பட்டவர் இவரேயாகும்.

இலங்கை நிர்வாக சேவைக்கு உட்பட்ட பல அரச பணிகளில் இவர் கடமையாற்றினார். பிரிவு உதவி அரசாங்க அதிபர், மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர், திணைக்களப் பணிப்பாளர், அமைச்சுகளின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் போன்ற பல பதவிகளை வகித்துள்ளார். இவர் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவ பட்டப் பின் டிப்ளோமா பட்டத்தையும் பெற்றுள்ளார். அரச சேவையிலிருந்தும் ஓய்வுபெற்ற பின் வன்னி புனர்நிர்மாண அமைச்சின் செயலாளராக பணியாற்றினார்.

அரச சேவையில் கிடைத்த அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு 'ஒரு கிராமத்தின் துயில் கலைகிறது' என்ற நாவலை எழுதினார். மட்டக்களப்பு வாசிகசாலை இவரது வாசிப்புக்கு நிறைய தீனி போட்டது. தமிழ் மற்றும் ஆங்கில நூல்களை நிறைய வாசித்தார்.

இருபதுக்குமேற்பட்ட நாடுகளுக்கு சென்று திரும்பிய பின் அந்தநாட்டு அனுபவங்களைக்கொண்டு இவர் எழுதிய சிறுகதைகள் பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன.

1971ம் ஆண்டு தனது தகப்பனாரின் கண் வெண்படலமகற்றும் சத்திர சிகிச்சைக்காக தனியார் வைத்தியசாலையொன்றில் பத்துத் தினங்கள் அவருடன் கூடவே தங்கியிருக்க வேண்டியதொரு சந்தர்ப்பம் இவருக்கு ஏற்பட்டது. தகப்பனாரின் அசைவுகளைக் கண்காணிப்பதற்காக இரவு கண் விழித்திருக்க வேண்டிநேர்ந்தது. நேரத்தைப் போக்குவதற்காக நாவலொன்றை எழுதலாமென திட்டமிட்டார். ஏற்கனவே மனதில் எழுதி வைத்திருந்த கதையை மெருகேற்றி எழுத்தில் வடிக்கத் தொடங்கினார்.

அவ்வாறு எழுதியதுதான் 'அவன் ஒன்று நினைக்க.....' என்ற இவரது முதலாவது நாவல். இது மித்திரனில் தொடர் கதையாக வெளிவந்ததுடன் பின்னர் 'ஜனமித்திரன்'; நூல் வடிவிலும் வெளியிட்டது. தகப்பனாருக்காக கண் விழித்தது இவரை ஒரு நாவலாசிரியராக உருவாக்கியது குறித்து இன்றும் மகிழ்ச்சியடைகிறார்.

இவர் இதுவரை 20 நூல்களை இலக்கிய உலகிற்கு பரிசாக தந்துள்ளார். அதில் 14 நாவல்களும் 4 சிறுகதை தொகுப்புகளும் ஒரு நாடகத் தொகுப்பும் அடங்கும்.

அவற்றின் விபரம்; வருமாறு:

**நாவல்கள் :**

1.அவன் ஒன்று நினைக்க.....
(மித்திரனில் தொடர் கதையாக வந்தது)

2.சாணைக்கூறை ( தினகரன் வாரமஞ்சரியில் தொடர்கதையாக பிரசுரமான நாவல்)

3.அவளுக்கும் ஓர் இதயம்

4.மூன்றாம் முறை ( தினகரன் வாரமஞ்சரியில் தொடர்கதையாக வந்தது)

5.காட்டில் எறித்த நிலா (தேசிய நூலக சேவைகள் சபை அனுசரணை)

6.ஒவ்வாமுனைக் காந்தங்கள்
(தேசிய நூலக சேவைகள் சபை அனுசரணை)

7.ஒரு கிராமத்தின் துயில் கலைகிறது
(தேசிய நூலக சேவைகள் சபை அனுசரணை)

8.இது நம்ம சொத்து (தேசிய நூலக சேவைகள் சபை அனுசரணை)

9.சிதைவுகள் தினகரன் வாரமஞ்சரியில் தொடர்கதையாக வந்தது)

10.ஜனநாயகர்கள் (கிழக்கு மாகாண சாகித்திய விருது பெற்றது)

11.பெரிய மரைக்கார் சின்ன மரைக்கார் (கிழக்கு மாகாண மற்றும் தேசிய சாகித்திய விருதுகளைப் பெற்றது)

12.பெட்டிசம் (சிங்கள நாவலின் தமிழ் மொழிபெயர்ப்பு)

13.'சாட்சிகள் இல்லாத சாமத்தில்...' தினகரன் வாரமஞ்சரியில் தொடர்கதையாக பிரசுரமானது)

14.'சூனியத்தை நோக்கி...'(தேசிய நூலக சேவைகள் சபை அனுசரணை)

சிறுகதைத் தொகுப்புகள்:

1. இளநரை
2. இவளுக்காகவா?
3. சலாமத்போ
4. சீதக்காதினி (கிழக்கு மாகாண சாகித்திய விருது பெற்றது)

5: பொன்னாடை : வானொலி நாடகத் தொகுப்பு (தேசிய சாகித்திய விருது பெற்றது)

**இலக்கியபங்களிப்புக்காக**
**இவர் பெற்ற விருதுகள்**
**இலங்கை அரசின் கலாபூசண**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருது

இலங்கை அரசின் 'இலக்கிய வித்தகர்' விருது

உலகளாவிய ரீதியிலான சிறுகதைப் போட்டியில்' ஆற்றங்கரை அப்பா' என்ற சிறுகதைக்கு ஆறுதல் பரிசு.

2002ல் கொழும்பில் நடைபெற்ற உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டில் விருது வழங்கி கௌரவம்

மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தினால் கௌரவமும் சான்றிதழும்

இலங்கை இலக்கியப் பேரவையினால் 'சின்ன மரைக்கார் பெரிய மரைக்கார்' நாவலுக்காக பரிசு மற்றும் சான்றிதழ்

மனசி நிறுவனத்தால் தினகரன் வார மஞ்சரியில் நடாத்தப்பட்ட சிறுகதைப் போட்டியில் வெளிவந்த 'முள்ளை முள்ளால்...' கதைக்கு பரிசு இதே சிறுகதைக்கு கனக செந்தி கதாவிருதும் சன்மானமும்.

இலங்கை அரசின் 2000ம் ஆண்டின் சமூகங்களுக்கிடையிலான இன ஒற்றுமை குறித்த படைப்புக்காக 'சமாதான நட்சத்திர' விருது

காத்தான்குடி பிரதேச செயலக கலாசாரப் பேரவையினால் 2006ல் 'இலக்கியச் செல்வர்' விருது

காத்தான்குடிநகர சபையினால் இலக்கியத்துறை சேவைக்காக 2007ம் ஆண்டு சாதனையாளர் விருது

எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தினால் 2012 இல் தமிழியல் விருது

இவர் எழுதிய 'அவளுக்கும் ஓர் இதயம்' என்ற நாவல் இலங்கை வானொலி முஸ்லிம் நிகழ்ச்சியில் தொடர் கதையாக வாராவாரம் ஒலிபரப்பானது.. வானொலி வரலாற்றில் முதன்முறையாக வாசிக்கப்பட்ட தொடர் நவீனம் அதுதான். இந்நாவல் சாய்ந்தமருது இஸ்லாமிய நூல் வெளியீட்டுப் பணியகப் பணிப்பாளரும்; இவரது இனிய நண்பருமான மர்ஹூம் எஸ்.எச்.எம். ஜெமீல் அவர்களின் முயற்சியினால் நூலாக வெளியிடப்பட்டது.

இவருடைய நூல்களை ஆய்ந்து தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தில் ஒருவர் கலைப்பட்டதாரிப் பட்டம் பெற்றுள்ளார். அதே பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராகப் பணியாற்றும் ஒருவர் தனது கலாநிதி பட்டத்துக்காக இவரது நூல்களை ஆய்வுக்கு எடுத்துள்ளார். கல்முனையைச்சேர்ந்த தர்ஷனி என்ற மாணவி இவரது சின்ன மிக்கார் பெரிய மரிக்கார் நாவலை ஆய்வு செய்து முதுமாணி பட்டம் பெற்றுள்ளார். இதே நாவல் தென்கிழக்கு பல்கலைக் கழக பாடமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.. . தென்னிந்தியாவில் உள்ள ஒரு பல்கலைக் கழகத்திலும் கலாநிதி பட்டத்துக்காக இவரது நூல்கள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன.

சிங்கள மொழியில் சாகித்திய விருதினை வென்ற லீல் குணசேகர அவர்கள் எழுதிய 'பெத்சம' என்ற நாவலை தமிழ் மொழிப்படுத்தி கல்ஹின்ன தமிழ் மன்றத்தின் உதவியுடன் 'பெட்டிசம்' என்ற தலைப்பில் வெளியிட்டுள்ளார். 'ஞானம்' சஞ்சிகையில் இவரது சிறுகதைகள் அடிக்கடி வெளிவருகின்றன.

வடபுலத்தில் வசித்த முஸ்லிம்கள் தத்தமது இல்லங்களிலிருந்து பலாத்காரமாக வெளியேற்றப்பட்ட நிகழ்வை பகைப்புலமாகக் கொண்டு இவரால் எழுதப்பட்ட 'சூனியத்தை நோக்கி...' என்ற புதிய நாவல் தேசிய நூலக சேவையின் அனுசரணையுடன் 2017 டிசம்பர் மாதம் வெளியானது என்ற மகிழ்ச்சியான செய்தியையும் இலக்கிய பிரியர்களுடன் பகிர்ந்து கொள்கிறோம்.

அரச துறையில் பல்வேறு உயர் பதவிகளை வகித்து ஓய்வு பெற்று தனது பேரப்பிள்ளைகளுடன் பொழுதைக் கழிக்கும் இவர் நேரம் கிடைக்கும் போதெல்லாம் தொடர்ந்தும் எழுதுகிறார். இவர் பரந்த வாசகர் வட்டத்தைக் கொண்டதொரு எழுத்தாளர்.

ஓய்வு நிலை சிறிலங்கா நிர்வாக சேவை பணியாளர்; என்பதை விட தன்னை ஓர் எழுத்தாளனாக இனம் காட்டிக்கொள்வதில் இவர் பெரிதும் மகிழ்ச்சியடைகிறார். நோய்வாய்பட்டு படுத்த படுக்கையில் இருக்கும் தனது மனைவிக்கு கணவராக மட்டுமல்ல ஒரு தாதியாகவும் செயல்பட்டு ஒரு உதாரண புருஷராக வாழ்ந்து வருகிறார். நேரத்துக்கு மருந்தூட்டுவது நேரத்துக்கு சாப்பாடு ஊட்டுவது இந்த கணவரின் வேலையாக இருக்கிறது.

எனினும் மனம் சலிக்காமல் முகம் சுளிக்காமல் இப்பணியை செய்து வருவது அன்னாரின் பெருந்தன்மைக்கு ஒரு சான்று .தன் துணைவியாரின் பெயரில் புகுந்து பெண் குலத்துக்கு பெருமை சேர்த்து இலக்கியம் படைத்த இந்த இலக்கிய முத்து இலக்கிய வானிலே இன்று போல் என்றும் உதய சூரியனாய் பிரகாசிக்க வேண்டும். அன்னார் காத்திரமான இலக்கிய படைப்புகளை தடையின்றி தர வேண்டும் என ஒளி அரசி சார்பாக நாமும் வாழ்த்துகிறோம்.

நேர் காணல்:-

கலாபூசணம் நூருல் அயின் நஜ்முல் ஹுசைன்





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிந்தித்துச் செயலாற்று

அன்பு நண்பி லதாவிற்கு உன் தோழி எழுதிக்கொள்வது. நான் நலம், உன் நலனிற்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். உன் திருமணத்தின் பின்னர் எதவிதமான தொடர்புகளும் இல்லாது இருந்துவிட்டாய். நான் அழைப்பு எடுத்தபோது கூட தொடர்பினைத் துண்டித்தவிட்டாய், உண்மையைச் சொல்கிறேன் அச்சமயம் நான் உன்னைத் தவறாகவே எண்ணிவிட்டேன். தற்போதைய உனது மடலைக் கண்டதும் தான் உனது நிலையை உணர்ந்து கொண்டேன். அவ்வேளை நீ எத்தகைய துன்பத்தில் இருந்திருக்கிறாய், நட்பு என்பது தன்பத்தில் கைகொடுப்பது தானே, என்னிடம் உன் துயரைப் பகிர்ந்துகொண்டிருக்கலாமே, சரி, போகட்டும், உனது பெற்றோர் பொரளா தார நெருக்கடியின் நிமித்தம் சரியாக விசாரிக்காது தேடிவந்த வரனென்று பாலாவை திருமணம் செய்துவைத்தது எனக்கும் தெரியும் தானே. அவரால் தினம்தினம் புதுப்புது பிரச்சினைகள் என்றும் மிகத்துன்பப்படுவதாகவும் இது குடும்ப வன்முறையா, எனவும் கேட்டு ஒரு சட்டத்தரணியாக பதில் தா என எழுதியிருந்தாய், உன் கேள்விக்கான பதி லைத் தருகின்றேன்.

குடும்ப வன்முறை என்பது நெருக்கமான உறவுக்கு உட்பட்ட ஒருவரினாலோ அல் லது இருவரினாலோ நிகழ்த்தப்படுகின்ற ஒரு துஸ்பிரயோகமான நடத்தைப்போக்கு. அதாவது வீட்டில் உரத்தசத்தமாக கத்தி அவமரியாதை செய்தல், மனைவிக்கு கணவன் பணம் கொடுக்காமை, கணவனால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்படுதல், அடித்து துன்புறுத்தல், பலாத்காரமாக தாக்குதல், முறையற்ற புணர்ச்சி, சாதாரண காய மேற்படுத்தல், படுகாயங்களுக்கு உட்படுத்தல், கேலி செய்தல், உணர்வு ரீதியான வலியை ஏற்படுத்தும் வகையில் மீண்டும் மீண்டும் மேற்கொள்ளப்படும் அச்சுறுத் தல், அந்தரங்கம், சுதந்திரம், நேர்மை பாதுகாப்பு என்பவற்றை மோசமாகப் பாதிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதலும் அளவுக்கு மீறிய பொறாமை, அல்லது தன்னு ரிமையை வெளிப்படுத்தல் என்பன குடும்ப வன்முறையாக கொள்ளப்படுகின்றன. உணர்வு ரீதியான துஷ்பிரயோகச் செயற்பாடு என்பது ஒரு நபரினைக் குறிவைத்து மேற்கொள்ளப்படும் அவமானப்படுத்துகின்ற தாழ்த்துகின்ற நடத்தைப்பாணியைக் குறிக்கின்றது. இவையாவும் தண்டனைச் சட்டக்கோவையின் 16ம் அத்தியாயத்தின் கீழ் குற்றமாக கருதப்படுகின்ற செயல்களாகும்.

அத்துடன் குடும்ப வன்முறைச்செயல் நிகழ்த்தப்படுகையில் அல்லது நிகழ்த்தப்ப டுவதற்கான சாத்தியத்தினைக்கொண்டிருக்கையில் குடும்ப வன்முறையினைத் தடுப் பதற்கான விண்ணப்பத்தை பாதிக்கப்பட்ட தரப்பினர் தாம் வசிக்கின்ற பிரதேசத்தின் நியாயாதிக்கத்தினுள் உள்ள நீதவான் நீதிமன்றில் மேற்கொள்ள லாம். நீதிமன்றமானது விண்ணப்பத்தினைக் கருத்தில் கொண்டு இடைக்கால பாதுகாப்பு உத்தரவினைக்கூட வழங்கலாம். உன்னால் உனது கணவரைத்திருத்த முடியாது எனக்கருதினால் அல்லது அவசரமாக திருத்தக்கூடிய வாய்ப்புகள் இல்லை எனக்க ருதினால் தொடர்ந்து அவரால் துன்பப்பட்டு வாழ்வதைவிட மேற்கூறிய விடயங்கள் எந்த அளவிற்கு உனக்கு பொருந்துகின்றன என்பதைக் கருத்தில்கொண்டு சட்டநடவ டிக்கைகளை மேற்கொள்வதே மிகநன்று என்பது எனது கருத்து.

எல்லாவற்றையும் ஆராய்ந்து என்ன செய்வதெனத் தீர்மானித்த பின்னர் எனக் கும் கூறு. தைரியமானவர்கள் எப்போதும் தோற்பதில்லை. யோசித்து மனதை குழப் பாதே. எப்போதும் உன் தோழியின் ஆதரவு உனக்கு உண்டு.

இப்படிக்கு

அன்பு நண்பி மீரா.



சி. நற்குணலிங்கம்
நெல்லியடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்கதைச்சுருக்கம்:

துர்கா, கடந்த சில வருடங்களாக குடும்பத்தோடு இலண்டனில் வசித்து வருகிறாள். ஒரே தங்கை, திருமணமாகி கணவன் குடும்பத்தோடு அருகில்தான் வசிக்கிறாள். இவள் மனதைக் கவரும் வகையில் வரன் அமையாததில் இன்னமும் திருமணம் ஆகவில்லை. இப்படியிருக்கையில், சிலுசிலு பனிக்குளிர் வீசும் அந்திப்பொழுதொன்றில் நண்பர் வீட்டுத் திருமண வரவேற்புக்குச் செல்கின்றார்கள், துர்காவின் குடும்பத்தினர். அங்கே, தற்செயலாக ஒருவனைக்காண்கிறாள் துர்கா. இவளைக் கண்டதும், அவன் பார்வையிலோ பலவகை உணர்வுகளின் நர்த்தனம்! இவளினுள்ளும் உணர்வுக் கொந்தளிப்பு! அதைக்காட்டாது தன்னைத்தானே கட்டுப்படுத்தவும் முனைகிறாள்.



ரோசிகஜன்

# மெல்லிசையாய் என் வசமானாய்

எடுத்துக்கோங்க!

தன் முன்னால் நீட்டப்பட்ட தட்டிலிருந்து ஒரு சிற்றுண்டித்தட்டை எடுத்தவள், அம்மம்மா இந்தாங்கோ! அவருக்குக் கொடுத்துவிட்டு, தாங்க்ஸ்! தானுமொன்றை எடுத்துக்கொண்டாள்.

உங்களுக்கு ரீயா? கூல்ட்ரிங்கா?

எனக்கு...ஒரு அரைக்கப் ப்ளேன்ரீ, சீனி இல்லாமல் தரமுடியுமாதம்பி? குளிரில வந்ததுக்கு நல்லா இருக்கும். பர்வதம்தான் கேட்டார்.

கொண்டுவாறேன்மா. என்றவன், உங்களுக்கு? மீண்டும் துர்காவிடம் திரும்பினான்.

இப்போ ஒன்றும் வேண்டாம், தேவையென்றால் நானே எடுத்துக் கொள்கிறேன். என்றவள், மேசையில், தன் முன்னாலிருந்த குளிர்பானங்களைக் காட்டினாள். தலையாட்டிவிட்டு அவன் நகர்ந்தபின், தன் முன்னாலிருக்கும் சிற்றுண்டித்தட்டையே பார்த்திருந்தவளின் கருத்தில் அதிலுள்ளவை சற்றும்பதியவில்லை. மாறாக, அத்தட்டிலும் அவன் முகமே தெரிந்தது. அதுவும், ஏழெட்டு ஆண்டுகள் கடந்த பின்னரும் நினைவிலிருந்து அகலாத அவன்பார்வை! கோபமும் ச்சே! நீயெல்லாம் என்னமாதிரியான பெண்பிள்ளை! என்று போட்டிபோடும் விழி வீச்சு!

சட்டென்று திரும்பினாள் துர்கா. அவனோ, அவளையேதான் பார்த்திருந்தான். அன்றெல்லாம், காணும் சந்தர்ப்பங்களில் சுர்ரென்று குத்திவிடும் பார்வை. இன்றோ, இதயத்தைமெல்லிசையாய் வரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டியதை அவளால் மறுக்கமுடியவில்லை. இந்தப் பார்வையை, பார்வைக்குரியவனைக் காணமாட்டோமா என ஏங்கியிருந்தாளோ என்னவோ!

இங்கபார்துர்கா, வெட்கம் கெட்டவளாக நடந்துகொள்ளாதே! சட்டென்று விழித்துக்கொண்டது அவளுள்ளம். அன்று, அவனால் அடைந்த வேதனையை அவ்வளவு இலேசில் மறந்துவிடுமா என்ன?

அவர் அன்றைக்கு என்ன எல்லாம் சொன்னார்? இத்தனைக்கும்ச் சே! தப்புச்செய்தவன் திட்டு வாங்கலாம். தண்டனையும் பெறலாம். நீ? அவரிடமிருந்து அத்தனை திட்டுகள் வாங்க அப்படி என்னதான் தப்புச்செய்தாய்? அதனால்தான் சொல்கிறேன், அவரைப் பார்க்காதே! முக்கியமாக, தெரிந்ததுபோலவே காட்டிக்கொள்ளாதே! அவர் முகத்தில் இலேசான தடுமாற்றமுள்ளது கண்டாயா? நீதான் என்பதை உறுதியாக இனம்கண்டுகொள்ளவில்லை போலும்! உள்ளத்தின் எச்சரிக்கை கடுமையாகத்தானிருந்தது.

இல்லை, இப்படித் திரும்பித் திரும்பி பார்த்தாயோ விறுவிறுவென்று எழுந்து வருவார். கையில் குழந்தையோடு இருக்கிறன். கல்யாணமான ஒருத்தனையே வெட்கமில்லாமல் இப்படி வெறித்துப்பார்க்கிறாயே! நீ மாறவேமாட்டாய். ச்சே! தயங்காது சேற்றை வாரிஇறைத்துவிடுவார். என, புறுபுறுத்த மனதின் கோபச்சீறலில் பிழை காணவும் முடியவில்லை. நடந்ததையல்லவா சொல்கிறது.

சிடுமூஞ்சி சிங்கராயன் ஏன் பதுங்குறார்? ஹ்ம்ம்...நல்லவருக்கு நடிக்கிறாரோ! பழிப்போடு எண்ணியது அவளுள்ளம். மறுகணம், உனக்கு நல்லவனுக்கு நடித்து அவருக்கு என்ன பயன்? அவரெல்லாம் யார்? அவர் லெவல் என்னென்று தெரியாதா உனக்கு? இவளையே பழிக்கவும் செய்தது.

இன்னும் ஒரேயோரு தடவை...ப்ளீஸ்! சிடு சிடுத்த மனதிடம் கெஞ்சிய வேகத்தில் திரும்பியவளின் பார்வை, மீண்டும் அவன் விழிகளோடு உரசியதில் இவள் விழிகள்தான் கலங்கிப் போயின.

அப்போதைக்கு இப்போ சற்றே தான் வித்தியாசமாக இருக்கிறார். ஏழெட்டு ஆண்டுகள் போயிற்றே! ஹ்ம்ம்... அப்போது மொறட்டுவ பல்கலையில் மூன்றாம் வருட மாணவன். அசட்டையும் திமிரும் கலந்த முசுட்டுமுரடு! இப்போ? முகத்தில் ஒரு இளக்கம்! அது அவருக்கு இன்னும் கம்பீரம் சேர்க்குதோ! மற்றும்படி அப்படியே தான் இருக்கிறார். தன்னையும் மீறி, ரயிலின் கடுகதியில் அவனை ஆராய்ந்தவள், அவன் மடியிலிருந்த குழந்தையையும் பார்க்கத் தவறவில்லை.



சட்டென்று மனதுள் ஒரு வலி ஓடிற்று! ஏமாற்றமே மிஞ்சும் என்று தெரிந்தாலும் அழிக்கமுடியாது படிந்து






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

விட்ட நினைவு தந்த வலி. கல்யாணம் முடித்துக் குழந்தையும் இருக்கே! அருகிலிருக்கும் பெண்தான் அவர் மனைவியோ?! அப்பெண்ணின் முதுகுப்புறம் தான் தெரிய, ஒருகணம், வெறித்துப்பார்த்த வேகத்தில் எழுந்துவிட்டாள்.

சிற்றுண்டியைக் கொறித்தபடி, அருகிலிருந்த பெண்மணியோடு சொந்த நாட்டுக்கதையின் சுவாரஸ்சியத்தில் இருந்த பர்வதமோ, சட்டென்று இவள் எழ, என்னம்



மா? என்றபடி பார்த்தவர், பேத்தியின் முகம் மாறியிருப்பதையும் கவனித்துவிட்டார்.

என்ன துர்கா? நெற்றி சுருங்கக் கேட்டவருக்கு, ஒன்றுமில்ல அம்மம்மா. நான் சுஜியோடு போயிருக்கப் போறேன். அம்மாவைஇங்கஅனுப்புறன். என்றவள், பதிலுக்குக் காத்திராது, மறுபுறமாக அமர்ந்திருந்த தங்கை, தாய் நோக்கி நடந்தாள். அவன் பார்வை, தன்னைத் துளைப்பதை உணர்ந்தவாறே!

அம்மா, நீங்க அங்கபோயிருங்கோ! நான் இவளோடு இருக்கிறேன். என்று தாயை அனுப்பிவிட்டு, வடிவா இருக்கிறாய் அக்கா! என்ற தங்கைக்கு சிறுமுறுவலைக் கொடுத்தவாறே அமர்ந்துகொண்டவள், எப்படி மாமி இருக்கிறீங்க?

என, தங்கையின் மாமியார், மைத்துனி என்று உரையாடலை ஆரம்பித்தாள்.

அப்போதும், இங்கிருந்து பார்த்தால் அவரைத் தெரியாது. அவருக்கும் என்னைத் தெரியாது என்ற நிம்மதியுணர்வு அவளுள் ஓடாதில்லை. அதேபோலவே, அவனுக்குத் தெரியாமல் இருக்குமாறு கவனமாகச்சென்று உணவை எடுத்துவந்து உண்ணவும் ஆரம்பித்தாள்.

அவள் நினைத்தவாறு, கண்ணிலிருந்து மறைந்தவுடன் அவளை மறந்துவிட அவன் ஒன்றும் தயாராக இல்லை. என்றைக்கு, அவளை நன்றாகத் திட்டித்தீர்த்தானோ, அன்று அவள் நின்ற கோலம், அதிர்வும் கண்ணீரும் கோபமுமாக அவள் பார்த்த பார்வை, அப்படியே அவன் நெஞ்சில் தங்கிக்கொண்டதை, அப்பப்போ மனச்சுணக்கத்தோடு உணர்ந்திருந்தான் தான்.

இனிமேல்பட்டு என் தங்கச்சியோடு சிநேகிதம் வைத்துக் கொள்ளாதே! உன்னோடு சேர்ந்து அவளும் கெட்டுப் போகப்போறாள். உன் வீட்டில் உன்னை வளர்ப்பது போலில்லை எங்கள் வீட்டில். என்கின்ற ரீதியில் எவ்வளவு குத்தலும் காட்டமுமாகச் சொன்னவன், அவளுருவை, சிறுசிறு நினைவுகளையும் சேமிப்பானேன்!? அவனுள்ளே அடிக்கடி எழுந்த கேள்விதான் இது! இதற்கும் ஒரு நாள் விடை கண்டு கொண்டான். என்று, படித்து முடிந்து வேலைசெய்ய ஆரம்பித்துத் திருமணம் என்ற பேச்சு எழுந்ததோ, அன்று, இதற்கு விடை கிடைத்திருந்தது.

அண்ணா! அவள் அப்படிப் பகிடிக்கு கதைப்பதை நீங்க பிழையாக விளங்கிக் கொண்டு அவளையே திட்டிவிட்டீங்களா? என்னிடம் ஒரு வார்த்தை கூடச் சொல்லவும் இல்லை. ஒருபோதுமின்றி தமையனையே குற்றவாளியாக்கிக் கதைத்திருந்தாள் இவன் தங்கை.

பகிடியாகவா? அதற்கு ஒரு அளவு கணக்கு இருப்பதில்லையா அஞ்சு? தங்கையின் குற்றச்சாட்டு சரியோ என்றெண்ணிய மனதில் அதிர்வலைகள் தோன்றினாலும் அப்போதைக்கு கண்டிக்கவே செய்தான். அதையெல்லாம் பொருட்படுத்தாது கண் கலங்கியவாறே புலம்பித்தள்ளிவிட்டாள், இவன் தங்கை.

அதனால் தான் அவள் என்னோடு கதைப்பதைக் குறைத்திருக்கிறாள். கிட்டத்தட்ட கதைப்பதையே நிறுத்திவிட்டாள் தெரியுமா? ஏனென்று கேட்டும் பதில் கிடைக்கவில்லை என்ற கோபத்தில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொடர்கதை

உனக்குச்சரியான லெவல்டி! என்று திட்டிவிட்டு நானும் கதைக்காமல் விட்டுட்டேன். அதுபார்த்தால்... உங்களுக்கு ஏன் அண்ணா இந்தவேலை? தங்கை கண்ணீ ரோடுகேட்கையில், மறைக்க முடியாத அதிர்வில் நின்றான் அவன். நான் அவளிடம் கதைத்த மாதிரி என்தங்கச்சியிடம் யாராவது கதைத்திருந்தால்? என்ற நினைவே, தன் மீதே ஆத்திரம் கொள்ளப்போதுமானதாக இருந்ததே!

நான் அப்படிக் கதைத்தபோது எவ்வளவு வேதனைப்பட்டிருப்பாள்? இப்படி ஆரம்பித்துத்தான் மெல்லமெல்ல அவளைத் தன்னுள் அடக்கிக்கொள்ள வழிசெய்துவிட்டான். அப்படியே, அவளையே என் வாழ்க்கைத் துணையாக்கினால் என்ற எண்ணம் மட்டும் வந்தால்போதுமா? கையளவில் உலகம் அடங்கியிருந்தாலும் அவளை அத்தனை சுலபத்தில் கண்டுகொள்ளமுடியாது தவித்துப்போனான். சமூகவலைத்தளங்களை அலசிப்பார்த்தான். ஹ்ம்ம்...பலனிருக்கவில்லை. தங்கையிடம் அப்படி இப்படிக் கதைவிட்டு முறைப்பும் சிடுசிடுப்பும் கிடைத்ததுதான் மிச்சம்.

மனதில என்ன நினைத்துக்கொண்டு, கல்யாணம் என்ற பேச்செடுத்தாலே சுரத்தேயில்லாமல் இருக்கிறாய்? தாயின் நச்சரிப்போ தாங்கவில்லை. இதென்னம்மா உங்களோடு பெரிய கரைச்சலாகக்கிடக்கு! நான் கிழடுதட்டிப்போயிருக்கிறேனா என்ன? இப்போதானே வேலைசெய்யத் தொடங்கியிருக்கிறேன். கொஞ்ச நாட்கள்போகட்டும். ஆரம்பத்தில், திருப்பிச் சிடுசிடுப்பது கஸ்டமாக இருக்கவில்லை.

அவளைக்காணக் கிடைக்காவிட்டால் வாழ்க்கை முழுதும் அவள்நினைவில் இருந்துவிடுவேனா? என்ற கேள்வியே சுத்தமுட்டாள்தனமாக இருந்தாலும், இன்னொரு பெண்ணை, மனதார, மணம்புரியவும் முடியவில்லையே! தவித்துத் தடுமாறிப்போனான்.

இந்த ஒரு வருடம் லண்டன் போயிட்டு வந்தபிறகு உங்க விருப்பப்படி கல்யாணம் செய்கிறேன்மா! முடிவில், தாயின் நச்சரிப்புக்கு முற்றுப் புள்ளியிட்டுவிட்டு வந்தவன், இங்கு வந்து நான்கு மாதங்களின் பின் அவளைக் கண்டிருக்கிறேன்! விழிகளை இறுக மூடித் திறந்தான் சயந்தன். மறுநொடி, ஒரு முடிவுக்கு வந்தவன் அருகிலிருந்த இளம்பெண்ணிடம் மடியிலிருந்த குழந்தையைக் கொடுக்க முனைய, அவனோ, இவன் கழுத்தை அழுந்தக்கட்டிக் கொண்டான்.

எல்லாம் நீங்க பழக்கிய பழக்கம் தானே? ஹா..ஹா..எனக்கும் சாரி கசங்கிடும். நீங்களே வச்சிருங்கோ! இல்லையோ, ரூபனிட்ட கொடுங்க! மறுபுறமிருந்தவனைக் கைகாட்டிவிட்டுச் சிரித்தாள் அப்பெண்.

எங்கட செல்லக்குட்டிய வச்சிருக்க அப்படியென்ன கஷ்டமாம்? என்ன ராஜா? குழந்தையைக் கொஞ்சியபடி எழுந்தவன், அங்கே தெரிந்தவர்கள் இருக்கிறார்கள் கதைத்துவிட்டு வாறன். என்றபடி நகர்ந்தான். **தொடரும்.**

### அரசியின் உதவிக்கரம் :- கல்விக்கும் அறிவியலுக்கும் கரம் கொடுப்போம்


புலம்பெயர் உறவுகள் பலரும் தாயக உறவுகளின் வறுமையைப் போக்கும் நோக்கில் பலதரப்பட்ட வாழ்வாதார உதவிகளை வழங்கிவருகின்றனர். அந்த வகையில்

ஜேர்மனியில் வசிக்கும் செல்வி ஜெனுகா.தர்மலிங்கம் அவர்களால் உரும்பிராயில் உள்ள முன்னாள் பெண் போராளியின் குடும்பத்தின் வாழ்வாதார உதவியாக 35000 பெறுமதியான ஊர்கோழி வளர்ப்பு ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டுள்ளது.... ஜெனுகா - தர்மலிங்கம் அவர்கள் இன்னும் பல மனிதநேயப் உதவிகளை செய்து வருகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சிறுவயதிலேயே இவ்வாறான சமூகசேவை மனப்பாங்கை கொண்ட ஜெனுகாவிற்கு ஒளிஅரசியின் நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடல் உறுதிக்கும் மூளையின் திறன் மிக்க செயற்பாட்டிற்கும் விளை யாட்டு துணைபுரிகின்றது. கடந்த காலங்களில் பல்வேறுபட்ட விளையாட்டு வகைகள் நம் மத்தியில் இருந்தன. தொழி நுட்ப பாவனையினால் காவு கொள்ளப்பட்ட முக்கிய அம்சங்களில் ஒன்று இவ்வாறான பல விளையாட்டுக்கள் பறிபோனமையே.



# காலத்தின் வாசனைகள்

வானொலி கேட்டபடி மாலைப்பொழு துகளை விளையாட்டுக்களுடன் நகர்த்திய இனிமையான தருணங்களை தற்போது நாம் இழந்துவிட்டோம். அந்த வாசங்களின் எச் சங்கள் கூட தற்போது மிச்சமில்லை. காலத் தின் கணக்குகள் அவற்றை விழுங்கி ஏப்பம் விட்டுவிட்டன. அந்த வகையில் அருகிச் சென்றுவிட்ட விளையாட்டுகளின் வரிசை யில் முதலில் நாம் பார்க்கப்போவது ஆடு புலி ஆட்டம்

ஆடு புலி ஆட்டம் என்பது தமிழர் திண்ணை வியூக விளையாட்டு ஆகும். இந் தியா உட்பட தெற்காசிய நாடுகள் பலவற்றில் இவ்விளையாட்டு வெவ்வேறு பெயர்களில் விளையாடப்படுகின்றது. இது குறிப்பிட்ட கட்டங்கள் கொண்ட வரைவில் விளையாடப் படுகின்றது. வீடுகளின் தரையில் கல், சுண் ணாம்பு, வெண்கட்டி என்பவற்றைப் பயன்ப டுத்தி கட்டங்களை வரைந்து கொள்வார்கள். சிறுகற்கள், புளியம் விதைகள், குன்றிமணி விதைகள் என்பவற்றைப் பயன்படுத்தி இவ் விளையாட்டை விளையாடுவார்கள். ஆடுபுலி ஆட்டத்தை வெட்டும்புலி ஆட்டம் எனவும் அழைப்பர். இது ஒரு மதிநுட்ப உத்தி விளையாட்டு. சங்கப்பாடல் இதனை வங்கா வரிப்பாறை என்று குறிப்பி டுகின்றது.

தரையில் கோடுபோட்ட அரங்கம். முக்கோண கூம்புக்கோடு. கூம்பின் உச்சியி லிருந்து அடிக்கோட்டை மேலே தொடும் மேலும் இரண்டு கோடுகள். இக்கோடுகளை வெட்டும்படி போட்ட மேலும் மூன்று கிடைக்கோடுகள். கிடைக்கோடுகளின் முனைகள் இருபுறமும் குத்துக்கோடு களால் இணைக்கப்பட்டிருக்கும்.

எப்படி விளையாடுவது?

இந்த விளையாட்டில் மொத்தம் 18 ஆட்டக் காய்கள் இருக்கவேண்டும். அதில் மூன்று காய்கள் புலிகளாகவும் மீதி 15 காய்கள் ஆடுகளாகவும் வைத் துக் கொள்ள வேண்டும். இரண்டு வகை களையும் வித்தியாசப்படும் விதத்தில் காய்கள் இருக்கவேண்டியது அவசியம்.

3 புலிகள் 15 ஆடுகள் கொண்ட இந்த விளையாட்டில் புலிகள் ஆடு களை விழுங்குதல் அல்லது புலிகளி டம் ஆடுகள் சிறைப்படுதல் என்பது விளையாட்டின் நோக்கமாகும். ஆடு களை ஒவ்வொன்றாக விழுங்கும் புலிகள், புலிகளை முற்றுகையிட்டு அசைய விடாமல் அடைக்கும் ஆடுகள் என வகுக்கப் பட்டுள்ளது.

1.முதலில் புலிகள், ஆடுகள் என்று சட் டகத்தின் இணைப்பில் வைக்கவேண்டும். மற்றய விளையாட்டுகளைப் போல இது கட்டத்தினுள் வைக்கப்படுவதில்லை. புலி களை அடைப்பது போல ஆடுகளை அடுக்க வேண்டும். அதைத் தடுப்பது போல புலி களை நகர்த்தவேண்டும்.

2.புலிக்கு அருகில் ஆடு இருந்து அதற்கு அடுத்த கட்டம் வெற்றிடமாக இருந்தால் புலி அங்கே தாவுவதன் மூலம் ஆட்டை விழுங் கும். எனவே புலிக்கு அருகில் தொடர்ச்சி யாக இரு ஆடுகள் இருந்தாக வேண்டும்.

3.புலிகள் சிறைப்படும் போது எத்தனை ஆடுகள் விழுங்கப்பட்டுள்ளன என்பதைப் பொறுத்து ஆடுகள் தரப்பில் விளையாடுபவர் புள்ளிகளைப் பெறுவார். அது போல புலிக ளைச் சிறைப்படுத்த முடியாத அளவுக்கு ஆடு களை இழந்தால் புலிகள் தரப்பில் விளையா டுபவர் வெற்றிபெறுவார்.

(வாசனை தொடரும்)





Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



**உங்களைப் பற்றி?**

நான் ரிம்ஸா முஹம்மத். வெலிகம எனது சொந்த ஊராகும். உயர் தரத்துக்குப் பின் கணக்கீட்டுத் துறையில் சில கற்கை நெறிகளை முடித்துள்ளேன். கணக்கீட்டுத் துறையில் மூன்று நூல்களை வெளியிட்டுள்ளேன். இலக்கிய ஆர்வம் காரணமாக கவிதை, நூல் விமர்சனம், சிறுவர் இலக்கியம், ஆய்வு ஆகிய துறைகளில் பத்து நூல்களை வெளியிட்டுள்ளேன். இதழியல் துறையில் ஏற்பட்ட ஆர்வம் காரணமாக 2013 ஆம் வருடம் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் இதழியல் துறை கற்கை நெறியைப் பூரணப்படுத்தியுள்ளேன்.

# எழுத்துக்கள் எல்லாம் படைப்புகள் அல்ல

**பெண் ஆளுமைகள் பெருகி வரும் இக்காலத்தில் அவர்களின் ஆளுமைகளை அடையாளப்படுத்தி காலம் மறக்காத ஆவணங்களாய் மாற்றும் நோக்கில் ஒளிஅரசியின் இம்மாதமங்கை எனும் பகுதி பிரசுரமாகின்றது. இம்மாத மங்கையாக இம்மாதம் ஜொலிப்பவர் வெலிகம ரிம்ஸா முஹம்மத். அவர் எம்மோடு பகிர்ந்து கொண்டவை எம் வாசகர்களுக்காகவும்.**



நேர்கண்டவர் :
வே. முல்லைதீபன்

**★ எழுத்தாக்கத் துறையில் ஆர்வம் ஏற்படக் காரணம்?**

சிறுவயதிலிருந்து என்னிடம் காணப்பட்ட வாசிப்புத்தான் இதற்கான மிக முக்கிய காரணம். பாடசாலை நாட்களில் பாடசாலை வாசிகசாலையிலிருந்த புத்தகங்கள், சஞ்சிகைகள் ஆகியவற்றை வீட்டுக்கு எடுத்துச் சென்று வாசிப்பேன். அந்தப் புத்தகங்களில் உள்ள கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள் ஆகிய பலவற்றையும் வாசித்து இன்புறுவேன். இவ்வாறு ஏற்பட்ட பழக்கம் பின்நாட்களில் நானும் எழுத வேண்டும் என்ற எண்ணத்தைத் ஏற்படுத்தியது. அந்த எண்ணம் எழுத்தாக்கத் துறையில் என்னையும் ஒரு எழுத்தாளராக இனங்காட்டியது.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**★ எவ்வாறான படைப்புக் களை வெளியிடுகிறீர்கள்?**

கணக்கீடு, கவிதை, சிறுகதை, நூல் விமர்சனம், சிறுவர் இலக்கியம், பாடல், ஆய்வு ஆகிய துறைகளில் எனது படைப்புக்களை எழுதி வருகின்றேன். பின் வரும் நூல்களை இதுவரை வெளியிட்டுள் ளேன். 01. வங்கிக் கணக்கிணக்கக் கூற்று (கணக்கீடு) 2004 02. கணக்கீட்டுச் சுருக்கம் (கணக்கீடு) 2008 03. கணக்கீட்டின் தெளிவு (கணக்கீடு) 2009 04. தென்றலின் வேகம் (கவிதை) 2010 05. ஆடம்பரக் கூடு (சிறு வர் கதை) 2012 06. என்ன கொடுப்போம் (சிறுவர் கதை) 2012 07. பாடல் கேட்ட குமார் (சிறுவர் கதை) 2013 08. இதுதான் சரியான வழி (சிறுவர் கதை) 2013 09. கவி தைகளுடனான கைகுலுக்கல் ஒரு பார்வை (விமர்சனம்) 2013 10. வண்ணாத்திப் பூச்சி (சிறுவர் பாடல்) 2014 11. அறுவடைகள் (விமர்சனம்) 2015 12. எரிந்த சிறகுகள் (க விதை) 2015 13. விடியல் (ஆய்வு) 2017

**★ இதனை எழுத முடியவில்லையே என நீங்கள் ஆதங்கப்பட்டுள்ளீர்களா?**

ஆம்,, இதுவரை நாவல்கள் எழுதுவதில் ஆர்வம் காட்ட முடியவில்லை. வேலைப் பழு இதற்கு மிக முக்கியமான காரணியாக இருந்தாலும் இலக்கியத்தின் ஏனைய துறை களில் செயற்பட்டு வருவதும் காரணியாக அமைகிறது.

நாவல் எழுதுவதற்கு நிறைய நாட்களை ஒதுக்க வேண்டியிருக்கிறது. அதேபோல பல பாத்திரப் படைப்புகளுக்கூடாக யதார்த் தமான சிக்கல்களை வெளிப்படுத்தும் போது அப்பிரச்சினைகள் பற்றிய பிரக்ஞை யும் தெளிவும் பற்றி அறிவதற்கான தேடல் கள் அதிகமாக இருக்கிறது. அவதானிப்புக ளுக்கூடாக முன்வைக்கப்படும் விடயங்கள் உண்மைத் தன்மை வாய்ந்ததாக இருக்க வேண்டுமாதலால் அதுபற்றிய யதார்த் தத்தை அறிவதற்கு சிலரை அணுக வேண் டியுள்ளது. இவ்வாறான சில சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியிருப்பதால் இத்துறையில் ஈடுபாடு காட்ட முடி வதில்லை.

**★ அளவுக்கதிகமாக பதிவிடப்படும் முகநூல் கவிதைகள் பற்றி யாது நினைக்கிறீர்கள்?**

முகநூலில் கவிதைகளைப் பதிவிடு பவர்கள் இன்று அதிகரித்துவிட்டார்கள். சொற் சேர்க்கைகளை எழுதிவிட்டு அல்லது ஒன்றன் பின் ஒன்றாக வார்த்தைகளை ஒடித் துப் போட்டுவிட்டு அதை கவிதை என்று எண்ணிக் கொண்டிருப்பவர்கள் பலர். இவ் வாறானவர்கள் தம்மை ஒரு தேர்ந்த கவிஞ ராக எண்ணிக் கொண்டாலும் அவர்களின் எதிர்பார்ப்பு எல்லாமே சில விருப்பகளும், வெறும் கருத்துகளும் மட்டும் தான். மூத்த அல்லது சிறந்த கவிஞர்களின் பின்னூட்டங் களை அந்த கமண்டுகளில் காண முடியாது. ஒரு கவிதையை எழுதி அதை நன்கு செம் மைப்படுத்தி பதிவிடுபவர்கள் மிகவும் குறைவு. ஒரு சில நல்ல கவிதைகளையும் அவ்வப்போது காண முடிகிறது.

**★வாசகர்களை விட கவிஞர்கள் அதிகமாகிவிட்டார்களா?**

உறுதியாக அவ்வாறு சொல்ல முடியா விட்டாலும் கூட இன்று சமூக வலைத்தளங் கள் அவ்வாறானதொரு நிலைப்பாட்டை தோற்றுவித்துள்ளன எனலாம். முக நூலை எடுத்துக் கொண்டால் தமிழ் தட்டச்சு தெரிந் தவர்கள் எல்லாம் ஏதோ ஒரு வகையில் எழுதிவிட்டு தம்மை எழுத்தாளராகவும் கவி ஞர்களாகவும் எண்ணிக் கொள்கின்றார்கள். எழுதத் தெரியும் என்பதற்காக ஒருவர் எழுத் தாளராக ஆகிவிட முடியாது. எழுதும் எழுத் துக்கள் சமூகத்தின் கறைகளைப் போக்க வேண்டும், அல்லது சமூகத்தில் காணப்படு கின்ற பிரச்சினைகளை பிறருக்கு எடுத்துச் சொல்லி அதில் சிறியளவிலேனும் மாற்றம் ஏற்படுத்த முயற்சிக்க வேண்டும். அவ்வாறா னவர்களே காலத்தால் அழியாதவர்கள்.

**★ இதுவரை உங்களுக்கு ஏற்பட்ட தடை கள் எவ்வாறானவை?**

இலக்கியத் துறை என்பது தேனெ டுத்து மகிழும் ஒரு அழகான பூங்காவனம் என்று பலர் எண்ணிக் கொண்டிருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் உண்மையில் இது பாரிய அழுக்குளைக் கொண்டது. எழுத்தாளர்கள் என்று நாம் மதிக்கும் சிலர் தமது எழுத்துக்கள் மூலம் மக்களைக் கவர்ந்திருந்தாலும் நடத்தைகள் மூலம் மாறுபட்டவர்களாகக் காணப்படுகிறார்கள். எழுத்துக்களில் பீறிட்டுப் பாயும் மனித நேயத்தை செயற்பாட்டில் காணமுடிவதில்லை. சுயநலமாக சிந்திக்கும் மனப்போக்குள்ளவர்கள் மத்தியில்தான் நாம் வாழ்ந்து வருகின்றோம். உதாரணமாக ஒருமுறை பிரபல சஞ்சிகை ஆசிரியர் ஒருவர் என்னிடம் எழுத்தாளர்கள் சிலரின் விபரங்களை கேட்டார். எவ்வித மறுப்புமின்றி மின்னஞ்சல் மூலம் எழுத்தாளர் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் போன்ற அனைத்து விபரங்களையும் அனுப்பி வைத்தேன். பிறிதொரு சந்தர்ப்பத்தில் நான் அவரிடம் வேறு எழுத்தாளர்களின் தகவல்களை கேட்டபொழுது அவர் அதைத் தர விரும்பவில்லை என்பதோடு இன்றுவரை அனுப்பி வைக்கவில்லை. தமது தேவைகளுக்கு மற்றவர்களை கறிவேப்பிலையாகக் பயன்படுத்தும் இதுபோன்ற பலர் தடைக் கல்லாக இருக்கின்றார்கள். அதையெல்லாம் படிக்கல்லாகக் கடந்து செல்வது எம் முன்னே உள்ள பெரும் சவாலாக இருக்கின்றது.

**✱ தற்பொழுது கிடைக்கும் அங்கீகாரம் பற்றி கூறமுடியுமா?**

அங்கீகாரம் என்பது பிறர் வழங்குவதில் தங்கியிருப்பதல்ல. தன்னைத் தானே செதுக்கிக் கொள்ளும் ஒரு சிற்பியாகவே ஒரு படைப்பிலக்கியவாதி இருக்க வேண்டும். அது மாத்திரமன்றி கிடைக்கும் அங்கீகாரங்களை ஒரு ஊக்கியாகத்தான் பார்க்க வேண்டுமே ஒழிய அந்த அங்கீகாரம் ஒருவருக்கு தலைக்கனத்தை ஏற்படுத்திவிடக்கூடாது. தலைக்கனம் ஏறிவிட்டால் எழுத்தாற்றல் செத்துப் போகும். இன்று ஒரு சில அமைப்புக்கள் உண்மையில் சிறந்த நடுவர்களைக் கொண்டு படைப்புகளுக்கான அங்கீகாரங்களை வழங்கி வருகின்றமை மகிழ்ச்சிக்குரியது. வேறு சில அமைப்புக்கள் மனசாட்சி இறந்து போன நடுவர்களை வைத்தும் அங்கீகாரங்களை வழங்கி வருகின்றன. இதில் வேடிக்கை என்னவென்றால் பண்டைப்புக்கள் பலதைப் பரீட்சித்துப் பார்த்து முடிவு சொல்ல வேண்டியவர்கள் அவர்களிடம் தேர்வுக்கு வருகின்ற எல்லாவற்றையும் வாசித்துப் பார்ப்பதில்லை. பெயர் குறிப்பிடப்படாமல் தேர்வுக்கு வருகின்ற கையெழுத்துப் பிரதிகளில் முதலில் படிப்பதே பிடித்துப் போனால் அதைத் தெரிவு செய்து விடுகின்றார்கள். ஏனையவற்றைப் படிப்பதில்லை. அல்லது தேர்வுக்காக வரும் எழுத்தாளர்களின் பெயர் குறிப்பிடப்பட்ட நூல்களில் தமக்குப் பிடித்தவர்களின் நூல்களை தெரிவு செய்கின்றார்கள். ஐம்பது வருடங்களாக இலக்கியச் செயற்பாடுகளில் தன்னை ஈடுபடுத்தி வரும் ஒரு பெண் எழுத்தாளரை அண்மையில் சந்தித்தேன். தனது நூலை ஒரு தேர்வுக்காக அனுப்பி வைத்த இவரிடம், நடுவராகச் செயற்பட்ட ஒருவர் உங்களது நூலை நான் வாசிக்கவேயில்லைந என்று குறிப்பிட்டதை இவர் மிகவும் வேதனையுடன் என்னிடம் பகிர்ந்து கொண்டார். அப்படியென்றால் தேர்வுக்காக வரும் எல்லா நூல்களையும் நடுவர் வாசித்துப் பார்க்கவில்லை என்பது தெளிவாகிறது. இந்த விடயம் நான் மேலே சொன்ன கருத்தை உறுதிப்படுத்துவதாக இருக்கிறது. இவ்வாறான அட்டூழியங்கள் நடைபெறாமல் உண்மைத் தன்மைக்கு மதிப்பளிக்கும் நடுவர்களை இலக்கிய அமைப்புக்கள் இனங்காண வேண்டும்.

**✱ இறுதியாக.. இளவயது எழுத்தாளர்களுக்கு யாது கூற முற்படுகிறீர்கள்?**

ஒரு நல்ல எழுத்தாளன் முதலில் நல்ல வாசகனாக இருக்க வேண்டும். வாசிப்புத்தான் ஒரு மனிதனை படைப்பாளியாகவும் மாற்றும். எனவே சிறந்த நூல்களை தெரிவு செய்து வாசிக்க வேண்டும். பண்டைய இலக்கியங்களில் மூழ்கி பரவசமடைந்து புதிய கருத்துக்களை உள்வாங்கி வாசகர்களைக் கவரும் விதத்தில் படைப்புக்களைப் படைக்க வேண்டும். தனக்கென ஒரு மொழி நடையை உருவாக்கிக்கொள்ள முனைவதுடன் இலகுவான சொற்களைப் பயன்படுத்தி படைப்புக் கூடாக சொல்ல வரும் விடயத்தை கலைத்துவத்துடனும் தெளிவாகவும் முன்வைக்க வேண்டும்!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் அகக் கண்களால் 525 வருடங்கள் பின்னோக்கி வாருங்கள்.

நீங்கள் இப்போது 1493 ஆம் ஆண்டிற்கு வந்து விட்டீர்கள்.

இடம் ஸ்பெயின் நாட்டின் மட்ரிட் நகரம்.

அரங்கம் நிறைந்த மக்கள் திரள் . தங்கள் மாபெரும் வீரனைப் பாராட்ட திரண்டிருந்தனர். பாராட்டு விழா தொடங்கி விட்டது.

நீங்கள் ஒரு முட்டையை எடுத்து மேசை மீது விழாமல் குத்தென நிறுத்த வேண்டும்.

கொலம்பசை விமர்சித்தவர்கள் முட்டையை எடுத்து நிறுத்த முயற்சித்தனர். முடியவில்லை. முட்டை உருண்டது. சிலரது முயற்சியால் நிலத்தில் விழுந்து உடைந்தது.

அனைவரது முயற்சியும் தோல்வி. கொலம்பசைப் பார்த்துக் கேட்டனர் எங்கே நீங்கள் நிறுத்துங்கள்

பார்ப்போம் என்றனர்.

கொலம்பஸ் எழுந்து அருகில் இருந்த

# வேர் வைக்கே வைக்கும்

சக நண்பர்கள், நலன்விரும்பிகள் மனம் திறந்து பாராட்டினார்கள்.

சய நண்பர்களோ

கடலில் மேற்காக சென்று கிழக்காக வந்தால் இந்தியா வரும் தானே. திசை தொடர்பான விடயம் தானே இது ஒருவர்.

நீண்ட தூரம் கடலில் பயணித்தால் நிலப்பகுதி வரும் தானே. இதற்காக ஒரு விழாவா இது இன்னுமொருவர்.

கடலோடி தொழில் செய்பவர் புதுமையாக என்ன செய்து விட்டார். இதற்காக ஒரு விழாவா வேறு ஒருவர்.

விழா நாயகன் கிறிஸ்தோபர் கொலம்பஸ் ஏற்புரை சொல்ல எழுந்தார்.

இரு மாதங்கள் கடலில் கொடும் பயணம் செய்து இந்தியாவை ( அமெரிக்காவின் பகாமாஸ் தீவுகளை தான் இந்தியா என கொலம்பஸ் நினைத்தார்) கண்டறிந்தேன்.

இதனை சாதனையாக கூறிப் பாராட்டிய நண்பர்கள் ,பெரியோர்களுக்கு நன்றி.

எனது செயலை சாதனை இல்லையெனக் கூறியோரே உங்களுக்கு ஒரு பரிசோதனை வைக்கிறேன்.

அதில் நீங்கள் தேறினால் அது சாதனை இல்லையென ஒப்புக் கொள்கிறேன்.

இதோ இந்த மேசை மீது சில முட்டைகளை வைத்துள்ளேன்.



பூச்சாடியிலிருந்து சிறிதளவு மண் எடுத்தார்.

அதை மேசையில் மீது வைத்து விட்டு முட்டையை நிறுத்தினார். முட்டை குத்தென நின்றது. உடனேயே கொலம்பசிடம் தோற்றவர்கள் 'அட இதுவா, நாங்களும் செய்திருப் போமே' என்றனர்.

கொலம்பஸ் சொன்னார், 'உங்களை முட்டையை நிறுத்த தான் சொன்னேனே தவிர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கு உதவியாக மண்ணை எடுக்க வேண்டாம் எனச் சொல்லவில்லையே.'

அது போலத் தான் நானும் மிகக் கடினமான சவால்களை எதிர்கொண்டு இந்தியாவை சென்றடையும் பாதையைக் கண்டறிந்தேன். உங்கள் யாரையும் இந்த முயற்சியை எடுக்க வேண்டாமென நான் கூறவில்லையே .

இப்போது எனது முயற்சியைப் பாராட்டுகின்றனர். அதனை நீங்கள் தரக் குறைவாக விமர்சிப்பது தவறானது என்றார். விமர்சித்தவர்கள் யாவரும் வெட்கிப் போய் தலைகுனிந்தனர். இங்கு நான் சொல்ல வரும் விடயம் இது தான். ஒருவரது ஆக்கத்திறனை, கடுமையான உழைப்பால் பெறும் வெற்றியை, பாராட்டுவதற்குப் பதிலாகத் தூற்றுவோர் பலரைத் தான் சமூகத்தில் காண்கின்றோம்.

கொலம்பஸ் போல பெரிதாகவோ

சிறிதாகவோ சாதிப்பவர்கள் பலர் இருந்திருக்கின்றார்கள். இப்போதும் இருக்கின்றார்கள். காலம் மனித குலமேம்பாட்டிற்காக நெல்சன் மண்டேலா, அப்துல் கலாம், இ.மீ. அண்ணாத்துரை, எம்.ஜி.ஆர், காந்தி, ஆபிரஹாம் லிங்கன்,மேரி கியூரி அம்மையார், கண்ணதாசன், பில்கேட்ஸ் ,பிடல் காஸ்ட்ரோ, லீ குவான் யூ, தோமஸ் அல்வா எடிசன், ரவீந்திரநாத் தாகூர், வில்லியம் ஹார்வே, சச்சின் டெண்டுல்கர்,மகாகவி பாரதியார், போன்ற மா மனிதர்களை தந்து கொண்டேயிருக்கிறது.

இன்னும் பலரைத் தந்திருக்கும். நாம் தான் தடுத்திருப்போம். தன்னலமற்ற மனிதர்கள் தான் உலகை அழகாக்குவார்கள். அவர்களது திறமைகளை ஆக்கத் திறன்களை நாம் நிச்சயமாகப் பாராட்ட வேண்டும்.

பாராட்டுவதில் வறுமை உள்ள இனங்கள் தான் உலகில் முன்னேற்றத்தில் பின்தங்கி உள்ளனர். இவர் என்ன பெரிதாகச் செய்து விட்டார் என மட்டம் தட்டி கதைக்காதீர்கள்.

மனம் திறந்து பாராட்டுங்கள் . திறமைசாலி ஒருவர் ஊக்கம் பெற்று இன்னுமின்னும் சாதிப்பார்.

அவ்வாறு செய்யும் ஆக்கங்கள் இந்த சமூகத்தை வளம்படுத்தும். திறமைசாலி ஒருவரை காயப்படுத்தி வளர விடாமல் தடுக்கும் கூட்டம் தான் எம்மிடையே பெருகி வருவது துரதிஸ்டமாக உள்ளது. வேலை வில்வெட்டி இல்லாமல் சும்மா இருந்து அடுத்தவர் என்ன செய்கிறார் என ஆராய்ந்து நோகடிக்காதீர்கள்.


ஆக்கங்கள் அது பௌதீக வளமாக இருக்கலாம். எழுத்து ஆக்கமாக இருக்கலாம். நவீன கண்டுபிடிப்பாக இருக்கலாம். திறமைசாலிகளைப் பாராட்டுங்கள். தண்ணீரில் பூக்கும் தாமரைப் பூ தண்ணீர் உயர உயர தானும் தண்டு நீண்டு உயரும். இதனைத் தான் உலகப் பொதுமறை தந்த வள்ளுவனும்

வெள்ளத்தனையது மலர் நீட்டம் மாந்தர்தம் உள்ளத்தனையது உயர்வு என்றான். அது போல உயர்வான சிந்தனைகளை நீங்கள் கொண்டிருந்து பாராட்டுங்கள். ஊக்கம் கொடுங்கள். நாடு வளம் பெறும். பாராட்டும் பண்பில் எம்மவரிடம் காணப்படும் வறுமை நிலை களையப்படல் வேண்டும்.

அடுத்தவர் திறமையை நாம் பாராட்டினால் நாம் குறைந்து போய் விடுவோம் என்ற போலியான பயம் ,பொறாமை உணர்வுகள் வேண்டாம். பெருந்தன்மையாக நடவுங்கள்.எந்த ஒரு திறமையும் அது சிறியதாகவோ பெரியதாகவோ இருக்கலாம் .பாராட்டுங்கள்.

ஊக்குவிக்க ஒருவன் இருந்தால் ஊக்கு விற்பவனும் தேக்கு விற்பான். வளம் நிறைந்த எம் நாடு உயர் வளர்ச்சி பெற வேண்டும். அதற்கு இலங்கையர் ஒவ்வொருவரது திறமைகளும் பாராட்டப்படல் வேண்டும். அபிவிருத்தி அடைந்த நாடுகளது வரலாற்றை எடுத்துப் பார்ப்போமாயின் அங்கு புத்தாக்கங்கள், புதுமுறை காணுதல் என்பவை உயர்வாக மதிக்கப்பட்டது. இப்போதும் மதிக்கப்பட்டு வருகிறது.

அந்த நிலை எம் போன்ற நாடுகளில் பெருமளவு காணப்படாமை காரணமாக நாம் அபிவிருத்தியில் பின்தங்கித் தான் உள்ளோம். இதற்கான உளப்பாங்குகள் கட்டியெழுப்பப்படல் வேண்டும்.



ஆக்கம்
வே. தபேந்திரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்த் திரையிசைப் பாடல்கள் ஒவ்வொன்றும் பல வகையான தன்மைகளை வெளிப்படுத்துவனவாக அமைவுறுகின்றன. அவற்றில் அண்ணன் தங்கைக்கு இடையிலான சகோதர பாச உணர்வினை புலப்படுத்தும் பல பாடல்களை பெற்றுள்ளது. இப் பாடல் இன்றும் எல்லோர் மனதிலும் நிலைத்திருக்கின்ற பாடலாக விளங்குகின்றது. அதாவது, தன் வாழ்க்கையையே தன் தங்கைக்காக அர்ப்பணித்து, அவளது சந்தோசத்தையே ஆதாரமாகக் கொண்டு அண்ணன் வாழ்கின்றான். தங்கையும் தன் அண்ணனின் பாசத்தில் நிலை கொள்கின்றாள்.

# அண்ணன் தங்கை பாசத்தை உணர்த்தும் திரையிசைப் பாடல்கள்

காணமுடிகின்றது. அண்ணன் தங்கை சகோதர பாசத்திற்கு எல்லையென்பது கிடையாது. சகோதர பாசத்தின் உயர்நாடியே அண்ணன் தங்கையேயாவர். அவர்கள் ஒருவர் மீது ஒருவர் அன்பினை பொழிந்து கொள்ளுவர். அத்தகு அண்ணன் தங்கை பாசமானது உணர்வுகளின் பின்னலாகும். அண்ணன், தங்கை பாசம் எனும் உணர்வின் ஊற்றாக பொலிவுறும் சில திரையிசைப் பாடல்களை இங்கு கண்ணுறுதல் சிறப்பாகும். விஜய் நடித்த வேலாயுதம் திரைப்படம். அண்ணன் தங்கை பாசத்தின் வெளிப்பாடான ஓர் திரைப்படம். அத் திரைப்படத்தில்,

ரத்தத்தின் ரத்தமே என் இனிய
உடன் பிறப்பே. சொந்தத்தின்
சொந்தமே நான் இயங்கும்
உயிர் துடிப்பே.

எனும் ஓர் அழகிய பாடல் இடம்பெற்றுள்ளது. அண்ணன் தன் தங்கையைப் பார்த்து என் உதிரத்தில் கலந்த இனிய உடன் பிறப்பாக விளங்குபவள் எனவும், தான் இயங்கும் உயிர் நாடியாக இருப்பவள் எனவும் அன்புருகப் பாடுகின்றான். மேலும், தங்கையானவள் காட்டுகின்ற பாசத்திற்கு தெய்வங்கள் எதுவும் இணையில்லை எனவும், அவ் அண்ணன் பாடுகின்றான்.

சிவாஜியின் நடிப்பில் அண்ணன் தங்கை பாசத்தை வெளிப்டுத்திய திரைப்படம் பாசமலர். அத் திரைப்படத்தில்,


மலர்களைப் போல் தங்கை
உறங்குகிறாள் அண்ணன்
வாழ வைப்பான் என்று அமைதி
கொண்டாள் கலைந்திடும்
கனவுகள் அவள் படைத்தாள்
அண்ணன் கற்பனைத்
தேரினில் பறந்து சென்றான்

எனும் அழகிய பாடல் ஒன்று இடம்

அண்ணன், தங்கை பாசத்தின் பிரதிபலிப்பாக வெளிவந்த ஓர் திரைப்படம் சமுத்திரம். நடிகர் சரத்குமாரின் நடிப்பில் வெளிவந்தது இத் திரைப்படம். இதில்,

அழகான சின்ன தேவதை
அவள்தானே எங்கள் புன்னகை
நாள் தோறும் இங்கு பண்டிகை
நம் வானில் வான வேடிக்கை

எனும் அழகிய பாடல் இடம் பெற்றுள்ளது.



தங்கையே, தங்கள் சந்தோசம் எனவும், அவளால் எந்நாளும் மகிழ்ச்சியே ஏற்படுகின்றது என்பதும், இப்பாடல் வரிகள் அமைவுறுகின்றன.

நடிகர் ஷாம் நடிப்பில் வெளிவந்த திரைப்படம் பாலா. அண்ணன், தங்கை பாசம் இழையோடும் திரைப்படம் அது. அதில் ஓர் அழகிய பாடல்,

பூ பூவாய் புன்னகைக்கும்
இவள் எங்கள் வீட்டு புது கவிதை
தாலாட்ட தொட்டில் மட்டும்
இல்லை இவள் எங்கள் கை குழந்தை
புல்வெளிகளில் நீ போனால்
வென் பனிதுளி கால் கீறும்.

எனவாறு அமைகின்றது. அண்ணன், தங்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைக்கு இடையில் நடக்கும் குறும்புச் சண்டைகள், அண்ணன் தங்கை மீது கொண்டுள்ள அன்பும் அக்கறையும் இப்பாடலில் அமையப் பெற்றுள்ளது. அண்ணன் தங்கை பாசத்தின் வெளிப்பாடாக வெளிவந்த திரைப்படம் மருதாணி. இத் திரைப்படத்தில்,

**அண்ணன் தங்கை உறவாகும்**
**ஜென்ம ஜென்மத்தின் வரவாகும்**
**அன்புத்தங்கையும் மனம் மகிழ**
**கோடித்தாரகை கோலாகலம்**
**கண்ணான தங்கைக்கு அந்நாளில்**
**தந்த மருதாணி நிறமே அழிவில்லை.**

எனும் பாடல் அமைவுறுகின்றது. அண்ணன், தங்கைக்கு இடையிலான அன்பினை எடுத்துக் காட்டுவதாக இப் பாடல் அமைகின்றது. தன் விருப்பங்களை எல்லாம் தன் அண்ணனிடம் கூறுகின்றாள் தங்கை. அண்ணனும் தன் தங்கையின் விருப்பங்களை நிறைவேற்றுவதாக சம்மதிப்பதாக இப் பாடல் வரிகள் புலப்படுகின்றன.

அஜித்தின்நடிப்பில்வெளியானதுவேதாளம் திரைப்படம். அதில் லட்சுமி மேனன் அஜித்தின் தங்கையான நடித்திருப்பார். அண்ணன், தங்கை பாசத்தை எடுத்துரைக்கும் பாடலாக,

**ஒரு நேச மேகம் உயிர் தீண்டும் நேரம்**
**நான் மெதுவாய் கரைய**
**இவள் பாச பார்வையெனில்**
**வாழும்போது நான் அழகாய் தொலைய.**

எனும் பாடல் இடம் பெற்றுள்ளது. அப் பாடலில் மேலும்,

**கைரேகை போல உன்னை**
**காலமெல்லாம் நான் சுமப்பேன்**
**வெய்யில் ரேகை மேல்**
**படாமல் பாத்திருப்பேனே**

அதாவது, கையில் ரேகையைப் போல தங்கையாகிய உன்னை நான் சுமப்பேன் எனவும், வெய்யில் ஒளியானது உன் மேல் படாமல் நான் உன்னைக் பார்த்திருப்பேன் எனவும் அண்ணன் தன் தங்கையிடம் உரைக்கின்றான்.

ராஜகாளி அம்மன் திரைப்படத்தில், நடிகர் வடிவேலுவின் தங்கையாக, நடிகை கௌசல்யா நடித்திருப்பார். வடிவேல் தன் தங்கையை நோக்கி பின்வரும் பாடலைப் பாடுவார்.

**தங்கச்சி என் தங்கச்சி**
**தங்கமான தங்கச்சி**
**அண்ணன் சொல்லும்**
**சொல்லக் கேளு**
**செல்லக் கண்ணு மீனாட்சி**
**செஞ்சோர நிலவே**
**இந்த அண்ணாச்சி**
**உயிரே உன் பின்னாடி**
**நிழலாய் நான் எப்போதும்**
**வருவேன்**

தன் தங்கையின் மீது கொண்டுள்ள அன்பினை வெளிப்படுத்தி தங்கைக்கு அறிவுரை வழங்கும் அண்ணன்ளனும் வகையில் இப் பாடல் வரிகள் அமைவுறுகின்றன.

அண்ணன் தங்கை பாசத்தின் உயிரோட்டமான திரைப்படம் அன்பு சகோதரன். அர்ஜீன் நடித்த அத் திரைப்படத்தில் தங்கை மீது மிகுந்த அன்பும், அக்கறையும், கொண்டிருப்பவனாக அண்ணன் விளங்கினான். தங்கையை சிறு வயதில் இருந்து வளர்த்து அவள் நலன்களை பாதுகாத்து வருகின்றான் அண்ணன். இவற்றை,

**சாமந்திப் பூப்போல சாய்ந்தாடம்மா**
**கிளி போல ஆராரோ ஆரிராரோ**
**செல்லம்மா சேயாக நானே**
**உந்தன் தாயாக ஆராரோ ஆரிராரோ**
**நடமாடும் பௌர்ணமி தான்**
**என் தங்கை என்பேனே**
**அழகான தேவதையும்**
**என் தங்கை நீ தானே நீயின்றி**
**வாழ்வில் யாரம்மா என் கண்ணம்மா**
**நீ தானே எந்தன் உயிரம்மா**

எனும் பாடல் அழகுற புலப்படுத்துகின்றது. அதாவது,தாயாக மாறி தன் தங்கையை தாலாட்டுகின்றான் அண்ணன். தன் உயிராகவும், அழகாக விளங்கும் அத்தனையும் தன் தங்கையே என அண்ணன் பாடியிருப்பது நயக்கத்தக்கதாகும்.

இவ்வாறு பல திரையிசைப் பாடல்கள் அண்ணன், தங்கை பாசத்தினை வெளிப்படுத்தும் பாடல்களாக அமைவுறுகின்றன. அண்ணன் மற்றும் தங்கைக்கு இடையில் ஒரு பாசப் போராட்டமே அரங்கேறும். சில சமயங்களில் அண்ணன், தங்கை போர் வீரர்களாகவும் மாறி வீட்டில் செல்லச் சண்டைகள் புரிவதும் உண்டு. ஆனால் அடுத்த கணமே அவர்கள் ஒன்றாகி விடுவார்கள். இத்தகு தன்மைகளை நம் திரையிசைப் பாடல்கள் இன்றும் வெளிப்படுத்தி வரும் தன்மை இரசிக்கத்தக்கதும், நயக்கத்தக்கதுமாகும்.

கட்டுரையாக்கம்.
இரா. நிஷாந்தன்
ஆசிரியர் கிளி./
இராமநாதபுரம் ம.வி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகளிர் தின வாழ்த்து

# கலையோடு வாழ்வோம்

கலை என்பது தமிழோடு இணைந்தது. அது மனங்களின் மகிழ்விற்கும் ஆற்றுப்படுத்தலுக்கும் துணைபோகும் ஒன்றாகும். கலைகள் பொக்கிசமாய் ஜொலிப்பவை, அவற்றை வளர்ப்பதும் வளப்படுத்துவதும் எமது தலையாய கடமை ஆகும். அந்த வகையில் இம்மாத கலைவளர்ப்போம் பகுதியை அலங்கரிப்பவர் காலம் மறக்காத பெரும் பாடகர் திரு. ஜெ. ஆர். சுகுமார் அவர்களின் புதல்வனும் இசையின் அசைவினால் தனக்கென ஒரு தனியிடத்தினைப் பெற்றுக்கொண்ட ஈழத்தின் இசைச்சொத்துமான இசையமைப்பாளர் சுகுமார் முகிலரசன் ஆவார்.

அவர் எம்மோடு பகிர்ந்துகொண்ட விடயங்கள் எமது வாசகர்களுக்காக.

வணக்கம் முகிலரசன் என்ற சம்பிரதாய முறையோடு மகிழ்வுடன் ஆரம்பமானது.




**தாயகத்தில் உங்கள் குடும்பம் இசையுடன் பின்னிப்பிணைந்திருந்தது. உங்கள் இசைப்பயணம் எவ்வாறு ஆரம்பமானது எனக்கூறமுடியுமா?**

ஆம், சிறு வயதிலேயே எனது தந்தையாருடன் இசைநிகழ்வுகளிற்குச் செல்வது வழமை. அப்பா எங்களை அழைத்துச் செல்வார். நான் சிறியவனாக இருக்கும் போதே கீபோட் வாசிக்கவேண்டும் என ஆசைப்பட்டேன். வீட்டிலிருக்கும் ஆர்மோனியத்தை எடுத்து வாசித்துக்கொண்டிருப்பேன். அதன் பின்னரே முறைப்படி அதனை வாசிப்பதற்கு கற்றுக்கொண்டேன். பாரிமலை இசைக்குழுவின் பிரதான கீபோட் வாத்தியக்கலைஞனாக பங்குபற்றினேன். பல மேடைகளில் இசையமைப்பாளனாகவும் நிதர்சனப்பிரிவில் படங்கள் நாடகங்களுக்கு இசையமைப்பை மேற்கொண்டேன்.

**உங்களது முதலாவது பாடலுக்கான இசையமைப்பு எது?**

காத்திருப்பு நாடகத்தின் பாடலுக்கான இசையே எனது முதலாவது இசையமைப்பு. அது பின்னர் வேறொரு சரித்திர நிகழ்விற்கான இசையாக மாறியது.

**இதுவரை நீங்கள் இசையமைத்து எத்தனை இறுவெட்டுகளை வெளியிட்டுள்ளீர்கள்?**

இதுவரை பத்திற்கு மேற்பட்ட இறுவெட்டுகளை வெளியிட்டுள்ளேன்.

**நகைச்சுவையான மறக்கமுடியாத தருணம் எது?**

நகைச்சுவை என்று சொல்வதை விட பயத்துடன் கூடிய தருணம் அது. புதுவை இரத்தினதுரை அப்பாவின் பாடல் ஒன்றிற்கு இசையமைக்கும் பணி ஒன்றினை செய்துகொண்டிருந்தவேளையில் பாடல் வரிகள் போதாமல் இருந்தது. அவ்வேளை நானே இரண்டு வரிகளை இணைத்து அப்பாடலை நிறைவுசெய்திருந்தேன். அதனை போட்டு காட்டும் வேளையில் அந்த இரண்டு வரிகளும் யார் எழுதியது எனக்கேட்டார். நான் உடனே பயத்தில் வேறு ஒருவரை சொல்லிவிட்டேன். அப்போது இந்த இரண்டு வரிகளும் தான் இந்தப் பாடலை இவ்வளவு அற்புதமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக்காட்டுகின்றது என மகிழ்வுடன் சொன்னார், அதன் பின்னர் தான் உண்மையைக் கூறினேன். உடனே அவர் எழுந்து என்னைக் கட்டிஅணைத்து பாராட்டிய அந்த தருணம் என்னால் எப்போதும் மறக்கவே முடியாது. என் வாழ்க்கையில் இது ஒரு அழகிய தருணமாக உள்ளது.

**தாயகத்தின் ஆஸ்தான கவியாக இருந்தவர் புதுவை இரத்தினதுரை ஐயா. அவரை நினைவுகூர்ந்தமை பாராட்டிற்குரியது. அடுத்து உங்கள் இசை வாழ்வில் நீங்கள் பணியாற்றி காலத்தில் மனதை உருக்கிய நிகழ்வு பற்றி கூறுங்களேன்?**

ஆம் அண்ணா நான் செய்த இசைப்பணி என்பது பெரும்பாலும் மாவீரர் பாடல்கள் தான். அதிலும் கரும்புலி மேஜர் நிலவன் அண்ணாவின் பாடல்களுக்காக இசையமைத்த பொழுதுகள், என் உள்ளத்தை உருக்கியதென்பது, உண்மை. அப்பாடல்கள் மிக முக்கியமானது என உரைக்கப்பட்டே என்னிடம் இசையமைப்பிற்காக தரப்பட்டது, அதனைப் பிரித்துப் பார்த்தேன், நிலவன் அண்ணா எழுதியிருந்த வரிகள் இவை, தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் மேற்பார்வைக்காக என் உணர்வுகளின் உந்துதலில் உருவான இவ்வரிகளை கவிதைகளாக எழுதியுள்ளேன், எனது வீரச்சாவின் பின்னர் ஏற்றவையாக இருப்பின் இவைகளைப் பாடலாக்கவும் எனக்கேட்டிருந்தார். அந்த பத்துப் பாடல்களும் பின்னர் புதிய காற்று என்ற இசைத்தட்டாக உருவாக்கப்பட்டது. ஒரு கரும்புலி மறவனின் எழுத்துக்களை பாடலாக்கிய நிகழ்வு என் வாழ்வின் பாக்கியம் என்றே கருதுகின்றேன், என் உள்ளத்தை உருக்கிய நிகழ்வும் இதுவே.

**உங்களுடைய தந்தையாரைப்பற்றி கூறுங்கள்?**

எனது தந்தையாரைப்பற்றி தாயக உறவுகள் பலருக்கும் தெரியும். அவரும் சாந்தன் மாமாவும் வீட்டில் உறங்கிய நேரங்களை விட வீதியில் உறங்கிய நேரங்களே அதிகம். அப்படித்தான் பலரும் கூறுவார்கள். அப்பா தாயக உணர்வினைச் சுமந்த ஒருவராகவே இருந்தார். தவிர அப்பாவின் பேச்சு, நடத்தை, செயற்பாடு என அனைத்துமே எனக்குள்ளும் போராட்ட உணர்வினைத் தூண்டியது. என்னையும் தேசத்தை நேசிக்கும் வீரனாக்கியது. இறுதிக்கால கட்டத்தில் எனது தம்பியும் போராட்டத்தில் இணைந்துகொண்டார். அப்பா என் வாழ்க்கையின் வழிகாட்டி.

**தற்போதைய காலத்தில் பாடல்களை இசையமைப்பதும் பாடுவதும் இலகுவானது, ஆனால் முன்னைய காலங்களில் அவ்வாறில்லை. நீங்கள் குறிப்பிட்ட இருவருமே அத்தகைய ஒரு காலத்தில் புகழ்பெற்ற கலைஞர்கள். அடுத்து தற்போது பாடலில் இருந்து இசையைப் பிரித்தெடுக்கும் கரோக்கி இசை பற்றி என்ன கூறவிரும்புகின்றீர்கள்?**

ஆம், நல்லதொரு கேள்வி அண்ணா. இன்று பல இடங்களிலும் இவ்வாறான நிகழ்வுகளே இடம்பெறுகின்றன. இவ்விடயத்தில் எனக்கும் மிகுந்த மனவருத்தமே. வளர்ந்துவரும் கலைஞர்களை வளர்க்கவேண்டும். வாய்ப்புகளை வழங்கவேண்டும். இவ்வாறான நிகழ்வினால் எமது கலைஞர்களுக்கு வாய்ப்புகள் இல்லாமல் போகின்றது. அவர்களுக்கான களம் பறிக்கப்படுகின்றது. இதனால் மிக அதிகமாக அணிஇசைக் கலைஞர்கள் பாதிக்கப்படுகின்றனர். அனுபவமுள்ளவர்கள் இல்லாமல் யாரும் செய்யலாம், என்ற இன்றைய நிலையில் இது சாதாரணமாக மாறிவிட்டது. இவ்விடயம் தொடர்பில் அனைவரும் ஆராய்ந்து செயற்படுவது நன்று.

**முகிலசன் இறுதியாக ஒரு கேள்வி, சினிமா சார்ந்த பாடலுக்கு இசையமைத்துள்ளீர்களா?**

அண்ணா இதுவரை எமது தேசியமே என்னை உருவாக்கியது, வளர்த்தது. இதுவரை புரட்சிப் பாடல்களுக்கே இசையமைத்தேன். தற்போது பிரான்ஸில் உள்ள நண்பர் ஒருவர் காதல் பாடல் ஒன்றிற்கு இசையமைத்து தருமாறு கேட்டிருந்தார், இதுவும் எனது வளர்ச்சிக்கான ஒருபடி என எண்ணியே அதற்காக இசையமைத்திருந்தேன். அப் பாடல் மிக விரைவில் வெளிவரவுள்ளது. சுப்பர் சிங்கர் வின்னர் அரவிந் ஆஷா அப்பாடலை பாடியிருந்தார்.

**நிலத்திலும் புலத்திலும் பெருகிவரும் கலைஞர்கள், கவிஞர்கள், பாடகர்கள் அனைவருக்கும் நீங்கள் கூறுவது?**

இசையை நேசியுங்கள், இசையை அதிகமாக படியுங்கள், நாம் தமிழர்கள் என்ற தன்மான உணர்வோடு அனைவரினது இசைப்பயணமும் வெற்றியோடு தொடரட்டும்.

இனிமையான அழகான கருத்துக்களை எம்மோடு பகிர்ந்துகொண்ட இசையமைப்பாளர் முகிலரசனுக்கு ஒளிஅரசியின் சார்பில் வாழ்த்துக்களையும் நன்றியையும் தெரிவித்து ஒளிஅரசிக்கு அவர் மகிழ்வோடு அளித்த வாழ்த்தினை உள்ளத்தில் ஏற்று விடைபெற்றோம்.

நேர்காணல் து. திலக் (கிரி)
சுவிற்சர்லாந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்/உரும்பிராய் கிழக்கு காந்திஜி சனசமூக நிலைய பொது நோக்கு மண்டபம் கடந்த 16.02.2018 அன்று திறந்துவைக்கப்பட்டது. அதன் பதிவுகள்....






நத்தார் பண்டிகையை முன்னிட்டு சுவிஸ் செங்காளன் ''தமிழ்த்தாய் நல்வாழ்வு மையம்'' ஊடாக கடந்த மார்கழிமாதம் (25.12.2017 அன்று ) மன்னார்முழங்காவில் பகுதியில் உள்ள பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு பாடசாலை உபகரணமும், மதிய உணவும் வழங்கப்பட்டது. அதற்குரிய பணம் 80,000 ரூபா தேவாலய பராமரிப்பு நிலைய நிர்வாகி அருட்பணியாளர் திரு.டானியல் தமிழ்ச்செல்வன் அவர்களிடம் கொடுக்கப்பட்டு இவ்உதவிச் செயற்றிட்டம் சிறப்பான முறையில் முன்னெடுக்கப்பட்டது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் விருப்ப உணவுகளை
ரம்மியமான சூழலில் உண்டு மகிழ

யாழ். சுன்னாகத்தில்



# யாழ். Star Restaurant

YAAL STAR RESTAURANT
SRILANKAN & SOUTH INDIAN



சுத்தம் - சுகாதாரம் - சுவை - இதுவே எமது தனித்துவம்

- Hot Drinks
- Starters
- soup
- Devilled Dishes
- Fried Special
- Tandoori
- Lunch
- Fried Rice Dishes
- Noodils
- Briyani
- Kottu Rotti Special
- Srilankan Curry Dishes
- Breakfast
- Drinks
- Fresh Juice
- Ice Cream

Sri Lankan & South Indian Special

அனைத்து வகையான சைவ, அசைவ உணவு வகைகளும்

குறிப்பு : தொலைபேசி ஊடாக முற்பதிவுசெய்து உரியநேரத்தில் உணவுகளைப் பெறமுடியும்

- நிகழ்வுகளுக்கான ஓடர்களும் ஏற்கப்படும்

021 221 4115
0776220943

Jet motors Junction,
Chunnakam

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org